கல்கி

KALKI 6.2.2000
ரூ. 5.00

அல்வா நகர் உலா!




ஆண்டு தொடக்கம் தரும் ஆனந்தம்

ஆயுள் முழுவதும் தொடர TDFC யில் சேமியுங்கள்!



13.14%

36 மாதம் அதற்குமேல்
13% மாதாந்திர வட்டி உண்டு
1வருடம் 12.12% மற்றும்
25 மாதங்கள் 12.63% காலாண்டிற்கு



18.18%

60 மாதங்களுக்கு
வருடவட்டி 13% மாதந்தோறும்
கூட்டுவட்டி முறையில் கணக்கிடப்படும்.

- Rating from CRISIL FA(+) indicates adequate safety.
- Registered with RBI as NBFC vide Regn. No.: 07.00403

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் லிமிடெட்.

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : 99, கிரீம்ஸ் சாலை, எம்.என். அலுவலக வளாகம், சென்னை-6.
தொலைபேசி : 8292059, 8292917, 8293351, பேக்ஸ் : (044) 8237876
தந்தி :TAFCON. P.B.No.719. E-mail:tdfc@giasmd01.vsnl.net.in

கிளைகள் :
- அரசு விரைவு பேருந்து நிலையம், காந்திபுரம், கோயம்புத்தூர்-641 044, தொலைபேசி : (0422) 497102
- அரசு விரைவு பேருந்து நிலைய வளாகம், திருச்சி-620 001, தொலைபேசி:(0431) 464188
- ராணி மங்கம்மாள் சத்திரம், மதுரை-625 001, தொலைபேசி: (0452) 741686
- முனிசிபல் அலுவலக வளாகம், காமராஜர் சாலை, ஈரோடு-638 001, தொலைபேசி :(0424) 258204

DIPR/19/DIS/2000/ELEGANT

- உள்ளூர் காசோலைகள் மற்றும் சென்னை வரைவோலைகள் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்.
- காசோலைகளும், வரைவோலைகளும், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் சென்னை அலுவலகத்தில் ஏற்கப்படும்.

உங்களது முதலீடு ''டிடிஎப்சி'' யில் பாதுகாப்பானது - பத்திரமானது

இந்த விளம்பரம் கம்பெனிகள் 29.9.99 தினசரிகளில் வெளியிடப்பட்ட சட்ட பூர்வ விளம்பரத்தின் தொடர்ச்சியாகும்.

"Details are also available on the Internet" : www.tn.gov.in / www.chennaionline.com

மேடையின் இருபுறமும் ஆளுயரத்துக்கு மேலேயே அடுக்கடுக்காக ஸ்டீரியோ ஸ்பீக்கர்கள். அவற்றிலிருந்து வெளிப்பட்ட கிடார் ப்ளஸ் டிரம்ஸ் இசை தம் தம் என்று குதித்துக் குதித்து நம் இதயத்தைப் பதம் பார்க்க, காதுக்குள்ளே இருக்கிற டிரம் என்ன ஆகுமோ என்று பயந்தது உண்மை. ஆனால்–

ஓர் இளைஞர் ஒரு ரோல் பஞ்சைக் கையில் வைத்துக் கொண்டு, ஆஞ்சநேயர் கோயிலில் துளசி இலையைப் பிய்த்துப் பிய்த்து பிரசாதம் விநியோகிப்பது மாதிரி கொடுத்துக் கொண்டிருந்தார். காது டிரம் பற்றிக் கவலை கொண்டவர்கள் அதை வாங்கி பயபக்தியுடன் பூ செருகிக் கொள்ளுவது மாதிரி இரண்டு காதுகளிலும் அடைத்துக் கொண்டார்கள். (ஜோக் இல்லை, ப்ராமிஸ்!)

மெலிதான சிவப்பு ஒளி மேடையில் பாய, பிரசன்னாவின் கிடாரிலிருந்து காபி ராக ஆலாபனை ஊது



கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com   ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



• ஜாஸ் ஜலீஸ்!

வத்திப் புகை மாதிரி சுழன்று சுழன்று கிளம்பியது. அல்ஃபான்ஸோ அதையடுத்து தன் பேஸ் கிடாரில் வாசிக்க, பின்னால் கென்வுட் டிரம்ஸில் ஆவேசத்தோடு பிய்த்து உதற. (என்ன வேகம், என்ன துல்லியம்!) சென்னை ஐ.ஐ.டியின் 'சாரங்' ஆண்டு விழாவில் ஆடியன்ஸ் மொத்தமும் கைதட்டி மகிழ, சரவெடி போல் சூடுபிடித்தது நிகழ்ச்சி!

இதற்குப் பெயர் 'தர்மா' என்றார் பிரசன்னா. தர்மவதி ராகத்தை அடிப்படையாகக் கொண்ட பீஸ்! அல்ஃபான்ஸோவும் சளைக்காமல் ஜாஸ் பாணியில் வாசிக்க, பிரசன்னா சரசர என்று புகுந்து அதற்கு முத்தாய்ப்பு வைக்கிற மாதிரி ஜிலு ஜிலுப்புடன் ஓர் இரண்டு நிமிடத்துக்கு வாசித்து முடித்த போது, கைதட்டலில் அரங்கம் மீண்டும் அதிர்ந்தது. உய் உய் என்று விஸில் சத்தம் வேறு!

அல்ஃபான்ஸோவின் சோலோ கிடார் வாசிப்பு, எம்.டி. ராமநாதன் பாடுகிற மாதிரி (அதுதான் பேஸ் கிடாரின் ஒலி) காற்றில் பரவி அலை பாய்ந்து ஓய்கிறது. அதுவரை கைத் தட்டித் தாளம் போட்டு ரசித்துக் கொண்டிருந்த கென்வுட், கையில் ஸ்டிக்கை எடுத்துக் கொண்டு டிரம்ஸில் ஒரு தனி ஆவர்த்தனம் வாசித்துத் தட் தட் தடும் என்று முடிக்கிறபோது, ஆறாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர் கூட்டம் 'ஆகா' போடுகிற கோஷம் இன்னொரு தனியாவர்த்தனம் போல் ஒலிக்கிறது.

"அடுத்த பீஸ் 'ஆனந்தா' என்று பிரசன்னா அறிவித்து விட்டு, சின்ன ஆலாபனை செய்தார் – ஆனந்த பைரவி!

இடைவேளைக்குப் பிறகு மோகனம், கீரவாணி என்று தூள் கிளப்பினார். பிரசன்னா. அவற்றுக்கு அல்ஃபான்ஸோ பேஸ் கிடாரிலும், கென்வுட் டிரம்ஸிலும் அலங்காரம் செய்து உலாவ விட்ட போது மாயா ஜாலம் போலவே இருந்தது.

பிரசன்னாவையும், அல்ஃபான்ஸோ ஜான்ஸனையும், கென்வுட் டென்னாரையும் ஜி.ஆர்.டி கிராண்ட் டேஸ் ஹோட்டலில் சந்தித்தோம். பிரசன்னா நம்ம ஊர்ப் பையன். தற்போது அமெரிக்க வாசம். உலகப் புகழ்பெற்ற மற்ற இரு இசைக் கலைஞர்களும், துளிக்கூட அலட்டிக் கொள்ளாமல் வெளிப்படுத்தும் அடக்கம் தான் வியக்க வைக்கிறது.

• இசை கேட்கும் இளசுகள்!



"டிசம்பர் 31 ஆம் தேதி இரவு அமெரிக்காவில் ஒரு ஹிந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அவர்கள் இசையோடு நானும் எனக்குத் தெரிந்த மாதிரி சேர்ந்து வாசித்தேன். அப்போதே எனக்குப் புரிந்து போயிற்று – மியூசிக் என்றால் இது தான் உண்மையானது என்று. பிரசன்னா நான் இங்கே வந்து டிரம்ஸ் வாசிக்க வேண்டும் என்றதும், உடனே புறப்பட்டு வந்து விட்டேன்!" என்றார் கென்வுட்.

கென்வுட் டென்னார்டு ஆப்பிரிக்க – அமெரிக்கர் என்றாலும், புத்த மதப்பற்று உள்ளவர். மெடிடேஷன் இவருக்குக் கை கொடுக்கிறது என்கிறார். நம்புகிறோம். இல்லை என்றால் இந்த அளவு ஆவேசத்துடன் தொடர்ந்து டிரம்ஸ் வாசிப்பது நடக்காத காரியம்!

ஒரு கட்டத்தில், ஒரு கையால் டிரம்மையும், இன்னொரு கையால் கீ போர்டையும் இவர் வாசித்த போது மொத்தக் கூட்டமும் அசந்து போய் விட்டது. "உலகிலேயே இவர் ஒருவரால்தான் இப்படி இரண்டு கருவிகளை ஒரே சமயத்தில் வாசிக்க முடியும்!" என்கிறார் பிரசன்னா.

"என்னோட பல வருஷ மியூசிக் லைஃப்ல, ரிதம் ஒண்ணைத்தான் நான் வாசிச்சிட்டு வந்திருக்கேன். ஆனா என் உள் மனசுல, ஆறாயிர வருஷ பாரம்பரியம் உள்ள இந்திய

இசை ஏதோ ஜாலம் செய்து புகுந்து விட்டது. இந்திய இசையில் இருக்கற மெலோடிக் ஐடியாஸ் எனக்குப் புதுசு. எனக்கு அதன் வடிவம் முழுதும் புரியாவிட்டாலும், எத்தனை அழகாக இருக்கிறது என்று ரசிக்க முடிகிறது!" என்றார் கென்வுட்.

"இந்திய இசை கடினமானது. என்றாலும் அது பல புது முயற்சிகளைத் தூண்டி விடுகிறது. பலன்? ஆனந்தம்தான். ஹாப்பினஸ்!" என்கிறார்.

பிரேசிலியன் இசையும் இவருக்குப் பிடிக்குமாம். "தே மேக் யு க்ரை!" என்கிறார் கென்வுட்.



பிலடெல்ஃபியா நகரைச் சேர்ந்த அல்ஃபான்ஸோ ஜான்சன், பேஸ் கிடார் கலைஞர் ஆகியிருக்கவில்லை என்றால் பாஸ்கெட் பால் வீரராகப் போயிருக்கலாம். அத்தனை உயரம். 6 அடி 5 அங்குலம்!

"ஜாக் லாம்ப் என்பவர்தான் எனக்கு பேஸ் கிடார் கற்றுக் கொடுத்து, கண்ணைத் திறந்து விட்டவர்!" என்கிறார் அல்ஃபான்ஸோ. எல். சங்கரின் 'சக்தி' குழு வாயிலாக இந்திய இசை கேட்டிருக்கிறார். ஆனால் முழுதும் அநுபவித்ததில்லையாம்.

"நான் இங்கே வாசித்தபோது உங்கள் இசையை நகல் மாதிரி கொடுக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. அப்படிப் போலித்தனமாக வாசிப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. எனக்கு அதில் ஈடுபாடு ஏற்படுகிற போதுதான் அது பரிமளிக்கிறது. இந்திய இசையில் உள்ள அசைவுகள் – கமகம் – என்னைப் பாதித்தது. நானும் முயற்சி பண்ணிப் பார்த்தேன்."

SOUND OF SUNSHINE - SOUND OF RAIN படத்துக்குச் சமீபத்தில் இசையமைத்திருக்கிறார் அல்ஃபான்ஸோ. ஆஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறதாம்.

சென்னை நிகழ்ச்சியில் இவருக்குப் பதிலாக, புகழ்பெற்ற கிடார் கலைஞர் விக்டர் ஊட்டன்தான் வாசிப்பதாக இருந்தது. அவர் மனைவி ஊரில் இல்லாததால் குழந்தையைப் பார்த்துக் கொள்ள, தாம் வீட்டில் இருந்தாக வேண்டும் என்பதால் அல்ஃபான்ஸோ ஜான்ஸனை அழைத்துக் கொள்ளச் சொன்னாராம்! பிரசன்னாவின் மனைவி, அல்ஃபான்ஸோவுக்கு போன் செய்து விஷயத்தைச் சொன்னதும், யெஸ் சொல்லி விட்டாராம். அவர் வாசிக்க வேண்டிய பகுதிகளுக்கான நோட்ஸையும், பிறகு காஸட்டையும் பிரசன்னா அனுப்பி வைக்க, பத்தே நாட்களில் பயிற்சி செய்து விட்டாராம். இங்கே ஒரு நாள் ரிஹர்சல் மட்டுமே!

"இதுவரை நான் அல்ஃபான்ஸோவைப் பார்த்ததே இல்லை. சென்னை வந்ததும்தான் பார்க்கிறேன்!" என்றார் பிரசன்னா.

சென்னை இளைஞர்களை இத்தனை தூரம் பரவசப்படுத்திய, அமெரிக்காவிலிருந்து வந்த மூவரையும் ஐஐடி சற்று கௌரவமாக நடத்தியிருக்கலாம் என்பது பிரசன்னாவின் குறை.

மீடியாவைக் கவனித்துக் கொண்டு, ஸ்பான்சர்களைத் தேடிப் பிடித்து, விளம்பரங்களுக்கு ஏற்பாடு செய்து, தூக்கமே இல்லாமல் பாடுபட்டிருக்கிறார் பிரசன்னா. "ஐஐடி நிர்வாகம், நிகழ்ச்சி முடிந்ததும், முன்னாள் ஐஐடி மாணவனான எனக்குக் கூட வேண்டாம், இந்த இரு புகழ்பெற்ற இசைக் கலைஞர்களிடமாவது ஒரு 'தாங்க்யூ' சொல்லியிருக்கலாம்!" என்கிறார்.

ஆனால் நூற்றுக்கணக்கான மாணவர்களும் ரசிகர்களும் கடைசியில் இவர்கள் மூவரிடமும் ஆட்டோகிராஃப் வாங்க அமைத்த நீண்ட க்யூ அந்தக் குறையைப் போக்கியிருக்கக்கூடும்.

— சித்தார்த்

வண்ணப்படங்கள் : வெங்கடேஷ்

"ராமு, 'வாய்மை' எனப்படுவது யாது?"

"'லிப்ஸ்டிக்' சார்!"

— யமுனா ரெங்கநாதன்





* நாட்டார் வழக்காற்றியல் மையம் வெளியிட்டுள்ள நூல்கள்

கலாசாரப் போரில்

சமீபத்தில் நாவலாசிரியர் பொன்னீலனின் தாயார் அழகிய நாயகியம்மாள் எழுதிய 'கவலை' என்ற நூல் பரபரப்பாகப் பேசப்பட்டது. இதை வெளியிட்டது, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

'Folklore' என்னும் ஆங்கிலச் சொல்லைத் தான் நாட்டார் வழக்காற்றியல் என்று தமிழாக்கியிருக்கிறார்கள்.

சுலபமாகப் புரிவதற்கு, நாட்டுப்புறவியல் என்று சொல்லலாம்.

"ஆனால், நாட்டுப்புறம் என்றால் இங்கே கிராமத்தை மட்டும்தான் குறிப்பதாக எடுத்துக் கொள்வார்கள். நகர்ப்புற மக்களின் வாய்மொழி இலக்கியங்களையும் நாங்கள் இதில் எடுத்துக் கொள்வதால் 'நாட்டார்' என்கிற பொதுவான பதத்தைக் கையாள வேண்டியிருக்கிறது" என்கிறார், நெல்லை சேவியர் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் துறையின் இயக்குநர், ஃபாதர் ஜெயபதி.

தமிழகத்திலேயே சேவியர் கல்லூரியில் மட்டுந்தான் இந்தக் கல்விக்கான முதுகலைப் படிப்பு இருக்கிறது.

"நமது பண்பாடு, கலாசாரம் பற்றிச் சில ஆங்கிலேயர்கள் எழுதிய நூல்களின் அடிப்படையில் அதுதான் இந்திய கலாசாரம் என்று உலகம் முழுக்க நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மை வேறு. எழுதப் படிக்கத் தெரியாத எழுபது சதவித இந்திய கிராமப்புற மக்களின் வாய்மொழி மூலமாகத்தான் நமது கலாசாரத்தின் நிஜமான வேர்களைக் கண்டுபிடிக்க முடியும்.

"வாய் மொழி மூலமாகவும் நமது மக்களின் தொன்மையான சடங்குகள், கொண்டாட்டங்கள் மூலமாகவும் அம் மக்களது வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் தொட்டு ஆராய்வதுதான் இதன் அடிப்படை" என்கிறார் ஜெயபதி.

கிராமம், கிராமமாகச் சென்று கள ஆய்வு செய்வதுதான் இத்துறையின் முக்கிய பணியாக இருக்கிறது.

திருவிழாக்கள், பண்டைய கலைகள், சடங்குகள், வாழ்க்கை முறைகளை ஆடியோ கேஸெட்டிலும் வீடியோவிலும் பதிவு செய்து கொள்கிறார்கள்.

இந்த ஆவணங்களே, முதுகலை மாணவர்களுக்குப் பாடமாகின்றன.

"இவ்வகையில் நாங்கள் ஒரு கலாசாரப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்" என்கிறார் ஜெயபதி.



* ஓலைச் சுவடிகள் முதல் வீடியோ கேஸெட் வரை : அத்தனையும் ஆவணம்!





• ஜெயபதி

ஒரு கல்லூரி!

"கல்வி என்றால் நம் மாணவர்களுக்கு முதலில் சங்க இலக்கியங்களைத்தான் எடுத்துப் போடுவார்கள். இன்று? கூவாகம் அலிகள் விழா பற்றியும் திருச்சூர் பூரம் திருவிழா பற்றியும், கரகம், ஒயில், கூத்து உள்ளிட்ட நமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கலை வடிவங்களையும் பாடங்களாக்கியிருக்கிறது நாட்டார் வழக்காற்றியல் துறை'' என்னும் ஜெயபதி, இத்துறையில் போதுமான அளவு பாட நூல்கள் இல்லாததை ஒரு குறையாகக் கருதுகிறார்.

"அது மட்டுமல்ல. இதைப் படித்துவிட்டு என்ன செய்வது என்கிற பயமும் மாணவர்களிடையே இருக்கிறது. சமூக நலத்துறை, கலை - பண்பாட்டுத் துறைகள், செய்தித் தொடர்புத் துறை, வானொலி, தொலைக்காட்சி, ஆவணக் காப்பகங்கள், சுற்றுலாத் துறைகளில் பணியாற்ற இக் கல்வி பெரிதும் உதவும்" என்கிறார்.

கலை - இலக்கியம் மட்டுந்தான் என்பதில்லை. நாட்டு மருத்துவம், கிராமப்புற விளையாட்டுகள், மரபு சார்ந்த விவசாய வளர்ச்சி, பண்பாட்டுச் சுற்றுலா என இத் துறையின் அக்கறையும் கவனமும் மேலைநாட்டு அறிஞர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி, ஆய்வுக்காக பாளையங்கோட்டைக்கு வரவழைத்திருக்கின்றன.

ஆனால், நம் தமிழ்நாட்டுத் தேர்வாணையம் இன்னும் இந்த முதுகலைப் படிப்புக்கு அங்கீகாரம் தராமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது.

அரசுத் துறை சார்ந்த உதவி பெரிதாகக் கிடைத்து விடாமல், (கேட்டால் மட்டும் உடனே வந்து விடுகிறதா என்று கேட்டார் ஒரு மாணவர்.) ஃபோர்டு ஃபவுண்டேஷனின் உதவியுடனும் வேறு சில தனியார் அமைப்புகளின் சிறு உதவிகளுடனும் மிகத் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது இத்துறை.

— கிருஷ்ணன்

படங்கள்: வெங்கடேஷ்



• சிவ சுப்ரமணியன்



• நயினார்குளம்

அழகுபடுத்த அனுமதி கொடுங்கள்!

"இந்தக் குளத்தை, ஹைதராபாத் உசேன் சாகர் ஏரி மாதிரி அழகுபடுத்துவது எங்கள் முக்கியமான லட்சியம். ஆனால், ஒவ்வொரு திட்டத்துக்கும் சம்பந்தப்பட்டத் துறையில் அனுமதி வாங்குவதுதான் பிரும்மப்பிரயத்தனமாயிருக்கிறது'' என்றார் டாக்டர் சிவசுப்பிரமணியன்.

இவர் அரசு அதிகாரி அல்ல. மாநகராட்சி ஊழியருமல்ல. நெல்லைக்கு தனவேல் கலெக்டராக இருக்கும் போது இவர் கலெக்டராகவும் இருக்க முடியாது. எம்.எல்.ஏ.? எம்.பி? நோ சான்ஸ்!

தூத்துக்குடி கல்லூரியில் விலங்கியல் பேராசிரியராக இருப்பவர் டாக்டர் சிவசுப்பிரமணியன்!

நெல்லை நகரை அழகுபடுத்தவென அமைக்கப்பட்ட நெல்லை 'ப்யூட்டிஃபிகேஷன் ஃபோரம்'ன் செயல் வீரர்களுள் ஒருவர்.

"எல்லா காரியங்களுக்கும் அரசை எதிர்பார்த்துக் கொண்டிராமல், நம்மால் முடிந்தவற்றைச் செய்து கொண்டே இருப்பதன் மூலம் அரசின் கவனத்தையும் நம் பக்கம் சுலபமாகத் திருப்ப முடியுமே?" என்கிறார் சிவசுப்பிரமணியன்.

இவர்களது அமைப்பின் ஸ்பெஷாலிடி, வியாபார நிறுவனங்களை லாகவமாக வளைத்துப் போடுவது.

"இந்த வருஷம் உங்கள் நிறுவன விளம்பரச் செலவுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள்? அந்தத் தொகையில் அப்படியே ஒரு பஸ் ஷெல்டராகக் கட்டிக் கொடுத்து விடலாமே? அல்லது ஒரு ட்ராஃபிக் சிக்னலாக? அதில் உங்கள் விளம்பரத்தை எழுதி வைத்தால் இருவித லாபங்கள் உண்டே?" என்று கேட்பது இவர்களது அணுகுமுறை.

இப்படியே பேசி, நிழற்குடைகள், சிக்னல் போஸ்ட்கள், சந்திப்புகளில் சிறு பூங்காக்கள் என அமைத்துக் கொள்வது இவர்களது டெக்னிக்.

"விளம்பரதாரர்கள் மனமுவந்து ஒத்துழைப்பது சந்தோஷமாயிருக்கிறது. ஆனால், கலெக்டர் உட்படப் பல முக்கிய அரசு அதிகாரிகள் எங்கள் குழுவில் இடம்பெற்றிருந்தும் நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை போன்றவற்றின் அனுமதி பெறுவதற்குத்தான் தாமதமாகிறது" என்கிறார் சிவசுப்பிரமணியன்.

ஒவ்வொரு பணிக்காகவும் சம்மதத்துக்கென 'சென்னை வழியே' டெல்லி வரை போக வேண்டியிருக்கிறதாம்.

நெல்லை நகரின் மிகப் பெரிய குளமான நயினார் குளத்தைச் சீரமைத்து, அதில் படகுச் சவாரி விடுவதுதான் இவர்களது கனவு ப்ராஜக்ட்.

"கொஞ்ச நாள் முன்பு அக்குளத்தின் செடிகளை அகற்ற முப்பதாயிரம் வரை செலவு செய்து முயற்சி செய்தோம் - ஆனால் மழை வந்து, மறுபடியும் செடிகள் மண்டி விட்டன.

"இப்போது எம்.எல்.ஏ. சுப்பிரமணியன் தம் நிதியிலிருந்து பத்து லட்சம் ரூபாய் தர ஒப்புக் கொண்டிருக்கிறார். மாநகராட்சி கமிஷனரும் வேண்டிய உதவிகள் செய்யத் தயாராயிருக்கிறார். 'நமக்கு நாமே' திட்டத்தில் கேட்டதும் 2/3 பங்கு நிதி கிடைக்கிறது. எங்கள் பிரச்னையெல்லாம், எதையும் துரிதமாகச் செய்ய முடியாமல் ஆங்காங்கே அனுமதிக்குக் காத்து நிற்க வேண்டியிருப்பதுதான்" என்கிறார்கள்.

இந்த அமைப்பைச் சேர்ந்த யாரும் நேரடியாகப் பணத்தைக் கையாள்வதில்லை. ஸ்பான்சர்களையே முன்னின்று நடத்தச் சொல்லி விட்டு, பின்னாலிருந்து கவனித்துக் கொள்வதோடு சரி.

— ரம்யா

படங்கள் : வெங்கடேஷ்

பாதுகாப்பான முதலீட்டிற்கு

பவர்ஃபைனான்ஸ்

இது ஒரு தமிழக அரசு நிதி நிறுவனம்

13.14%

காலம்	ஆண்டு வட்டி	
	மாதமொரு முறை	மூன்று மாதங்களுக்கு ஒரு முறை
12 மாதங்கள் & 1 நாள்	-	12.12%
25 மாதங்கள்	-	12.63%
36 மாதங்கள், 48 மாதங்கள் & 60 மாதங்கள்	13%	13.14%

18.18%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 13%)

- இந்நிறுவனம் வங்கிப்பணி சாராத நிதி நிறுவனமாக ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பதிவு எண் : 07.00389 ஆகும்.
- முழுமையான பாதுகாப்பிற்கு CRISIL வழங்கியுள்ள FA+ மதிப்பீடு.
- துவக்கத்திலிருந்து தொடர்ச்சியாக இலாபம் ஈட்டி வருகிறது.
- கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து 20% ஈவுத்தொகை வழங்கி வருகிறது.

மேலும் விபரங்களுக்கு :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)

பதிவு அலுவலகம் : 84, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. தொலைநகலி : 044 - 4982894.
Visit us at : www.tnpowerfinance.com www.tninfrafinance.com

28-9-99 தேதியிட்ட 'எகனாமிக் டைம்ஸ்' இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

"Also available on the Internet" www.tn.gov.in / www.chennaionline.com



திருநெல்வேலி மக்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். அல்லாதபட்சத்தில் நகரெங்கும் அவர்கள் சிரமப்படாமல் பயணம் செய்ய நல்ல சாலைகள் கிடைத்திருக்காது. திருநெல்வேலி மக்கள் ஏராளமாகப் புண்ணியம் செய்தவர்கள். இல்லாவிட்டால் இரவுகளைப் பகலாக்கும் மின்சாரப் பூக்கள் சந்துபொந்துகளில் கூட எப்படிப் பூத்திருக்கும்? அவர்கள் வெகு பாக்கியசாலிகளுங்கூட. மற்ற நகரங்களைப் போலக் குடிநீருக்கு அல்

• மேயர் உமா மகேஸ்வரி

மாநகரத் தாயும் மண்டையிடிப்

நெல்லை மாநகராட்சி விசிட்

லாட வேண்டியிராமல் பொருநையின் கருணையால் தாகம் தணித்துக் கொண்டு விடுகிறார்கள்.

'மாநகராட்சி விஸிட்' என்று நாம் சென்ற முந்தைய நகரங்களிலெல்லாம் மக்கள் இந்த அடிப்படை வசதிகள் இல்லாமல் அவதிப் படுவதைத் தானே காண முடிந்தது?

இங்கே அது இல்லை! அட, நெல்லை மாநகராட்சிக்கு மட்டும் என்ன வந்து விட்டது? தாய்க்குல மேயர் என்பதால் சிக்கலற்ற நிர்வாகம்; சீரான மேம்பாட்டுத் திட்டங்கள் எனச் செயல்பட முடிகின்றதா?

"அட நீங்க வேற சார்! மேயர் மட்டும் இல்லாட்டா இந்த ஊர் எப்பவோ சிங்கப்பூர் ஆகியிருக்கும். கார்ப்பரேஷனுக்குள்ள இருக்கறவங்க போட்டுக்கற சண்டையினால தான் எல்லா வளர்ச்சித் திட்டமும்



தேங்கி நிக்குது. முன்னாடி இருந்த கமிஷனர்களும் சரி; இப்ப இருக்கற கமிஷனர் கதிப் ஜெயினும் சரி – கிடைக்கற நிதியை உருப்படியா செலவு செய்யறவங்களாகவே இருக்காங்க.

கீழ்மட்ட அதிகாரிகள் அளவுல சில ஊழல்கள் இருக்கவே செய்யுதுன்னாலும் அடிப்படையான வசதிகளை மக்களுக்குச் செய்து தராமல் இல்லை. ஆனா, ஒரு காமெடி நாடகம் மாதிரி இந்த மேயரும் அவங்க கவுன்சிலர்களும் நடந்துக்கற விதம்தான் காணச் சகிக்கலை. தினம் தினம் சண்டை; அறிக்கைப் போர். சபை கூட வேண்டியது, உடனே ஒத்தி வைக்க வேண்டியது. என்ன தான் செய்யறாங்கன்னே தெரியலை!"

நமக்கு வந்த கடிதங்களும் சரி; நெல்லையில் நாம் சந்தித்தவர்கள் சொன்ன தகவல்களும் சரி – இதைத்தான் திரும்பத் திரும்ப வலியுறுத்தின.

இதை விடக் கொடுமை, நெல்லை மாநகராட்சி கவுன்சிலர்கள் பலரும் கூட இதே கருத்தைச் சொல்வதுதான்!

கனகா முத்துஇருளப்பன், நெல்லை டவுன் பகுதியில் நான்கு

பிரச்னைகளும்!

ரதவீதிகளை உள்ளடக்கிய முக்கியமான வார்டின் கவுன்சிலர். சுயேட்சையாகப் போட்டியிட்டு வென்ற இவர், "எதுக்காக இந்த நகரை மாநகராட்சியா மாத்தினாங் கன்னே புரியலை. கவுன்சில் செயல்படறதே இல்லை. பேசாம கலைச்சிடலாம்!" என்றார் தீவிரமாக.

"நெல்லை மாநகராட்சியைப் பொறுத்த வரை கவுன்சிலர்கள் மாமன்றத்தில் பேசற வழக்கமே கிடையாது. ஒரு பிரச்னை அடிப் படைல பேச ஆரம்பிச்சா, உடனே கட்சி ரீதில மோதல் வெடிக்க ஆரம்பிச்சிடும். சமீபத்துல இங்க நடந்த போர்க் காட்சி களைத்தான் விரிவா பேப்பர்லேயும் டீவியிலேயும் பார்த்திருப்பீங்களே! அதான் தினசரி நடக்கிறது. அதுவும் பெண் கவுன் சிலர்கள் பாடு ரொம்பக் கஷ்டம். நாங்க சும்மா போய் உட்கார்ந்துட்டு வர்றதோட சரி. ஒரு விவாதம், ஆய்வு, ஆலோசனை கேட் கறது, கலந்து பேசி நடவடிக்கை எடுக்கறது - ஒண்ணுமே கிடையாதுங்க. மன்றத்துல பத் தொம்பது தலைகள் தேறுதான்னு பார்ப் பாங்க மேயர். தேறிடிச்சின்னா எந்தத் திட்டத் தையும் உடனே 'பாஸ்' பண்ணிடுவாங்க. அது நல்லதா, கெட்டதா, நடக்குமா, நடக்காதா - எது பத்தியும் யோசிக்கற வழக்கம் கிடையா துங்க."

அடுக்கிக் கொண்டே போகிறார் கனகா.

மேயர் உமா மகேஸ்வரி தி.மு.க.காரர்தான் எனினும் ஆளுங்கட்சி கவுன்சிலர்களின் எண்ணிக்கை இங்கு குறைவு. எனவே எந்த ஒரு பிரச்னையானாலும் 'எதிர்ப்பதே' தம் கடமை என எதிர்க்கட்சி கவுன்சிலர்கள் செயல்படுவதாகச் சொல்கிறார்கள் இங் குள்ள சில தி.மு.க.வினர்.



"எதிர்ப்பவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டுமல்ல; தி.மு.க. கவுன்சிலர்களும் கூடத் தான்" என்றார் கனகா!

24வது வார்டு கவுன்சிலர் ராஜேஸ்வரி (தி.மு.க.)யைச் சந்தித்தபோது, மேயர் மீது சர மாரியான குற்றச்சாட்டுகளை அள்ளி வீசி னார்.

"அவங்க கட்சிக்கே புதுமுகமுங்க. அரசி யல் அனுபவம் சுத்தமா கிடையாது. சந்தர்ப்ப சூழ்நிலையால மேயராயிட்டாங்களே தவிர ஊருக்கு உருப்படியா எதுவுமே செய்யலீங்க. இங்க நடந்திருக்கற எந்த மக்கள் நலப்பணி யிலயும் மேயரோட பங்குன்னு எதுவுமே இல்லை. மாநில அரசும் உலக வங்கியும் அளித்த நிதியை கமிஷனர் சரியா பயன் படுத்திக்கிட்டதால இங்க சாலைகள், தெரு விளக்குகள் உள்ளிட்ட பணிகள் சரியா நடந்திருக்கு.

"மத்தபடி மேயருக்கு மக்களோட மட்டு மில்லை; கவுன்சிலர்களோடயும் சரியான உறவு கிடையாது. தவிர, யாரையும் மதிக்க மாட்டாங்க. ஒரு வார்டுக்கு அவங்க வர் றாங்கன்னா, கவுன்சிலருக்குத் தகவல் கூடச் சொல்ல மாட்டாங்க. நாங்க ஒரு ரூட்டுல போனா, அவங்க ஒரு ரூட்டுல போவாங்க.

"அதிகாரிகளை அணுகி காரியங்களை நாங்க செய்துக்கறதுதான் வழக்கம். சொல் லப் போனா, எந்த வார்டுல என்ன வேலை நடக்குதுன்னே அவங்களுக்குத் தெரியாது!" என்ற ராஜேஸ்வரி, கடைசியாகச் சொன்ன விஷயம் அதிர்ச்சியாகவே இருந்தது.

"இதே மாநகராட்சி நிர்வாக அமைப்பும் இதே மேயரும் இங்க நீடிச்சாங்கன்னா அடுத்தப் பொதுத் தேர்தல்ல இந்தத் தொகுதில தி.மு.க. ஜெயிக்கறதே கஷ்டம்!"

பெயர் வெளிவர விரும்பாத வேறு சில கவுன்சிலர்களும் மேயரின் மேல் குற்றப் பத்திரிகை படிக்கிறார்கள் இங்கே.

மக்கள் பணிக்கென உள்ள 'எம்.எல்.ஏ. நிதி', மாநகராட்சியின் கணக்குக் கட்டுப் பாட்டில்தான் உள்ளது. எம்.எல்.ஏ. சுப்ர மணியன் மேல் மக்களுக்கு நல்ல அபிப்பிரா யம் இருந்தாலும் அவரது நிதியைக் கூட பயன்படுத்த விடாமல் மாநகராட்சி தடுப்ப தாகச் சொல்கிறார்கள்.

எதிலும் கமிஷன், எல்லாவற்றிலும் ஊழல் என்பதுதான் மேயரின் லட்சியம் என்று வருணிக்கும் சில கவுன்சிலர்கள், 'சமீபத்தில் தெருவிளக்குகள் அமைக்க பல்பு வாங்கிய வகையில் எத்தனை கமிஷன் கிடைத்தது என்று மேயரிடம் கேளுங்கள்' என்கிறார்கள்.

யார் எப்படிப் போனால் என்ன? நமது வார்டுப் பணிகள் பிரச்னையில்லாமல் நடந்தால் போதும் என்கிற மனப்பான்மை யுடன் இயங்கும் கவுன்சிலர்களும் இங்கே இருக்கிறார்கள்.

த.மா.கா கவுன்சிலரான எஸ்.எஸ். மணியைச் சந்தித்தபோது, தமது வார்டில் 15 லட்சம் செலவில் சாலைகள் போடப்பட்ட தையும் 35 லட்சம் செலவில் மேல்நிலை நீர்த்தொட்டி கட்டப்பட்டதையும் மேலும் ஐந்து லட்ச மதிப்பீட்டில் பணிகள் நடந்து வருவதையும் குறிப்பிட்டு விட்டு இப் படிச் சொன்னார் :

"என்னை என் வார்டு மக்கள் ஜெயிக்க வெச்சாங்க. அவங்க கஷ்டமில்லாம இருக்கறது மட் டுந்தான் என் நோக்கம். கமிஷ னர் உதவியோட காரியங்கள் நடந்துடுது. உதவி கமிஷனர் மெகபூபாவும் நல்லா ஒத்துழைக்கறாங்க. மேயர் பத்தி நான் எதுக்குக் கவலைப்படணும்? அவங்களை மாமன்றத் துல யாரும் பேச விடற தில்லை. காரணம் அவங்க யாரையும் மதிக்கறதில்லை; கவுன்சிலர்களைப் பொருட்படுத்தறதில் லைன்னு சொல்வாங்க. அது சரியா, தப்பான்னு கூட நான் ஆராயற தில்லை. கமிஷனர் ஒழுங்கா இருக்கற வரைக் கும் எனக்குப் பிரச்னை இல்லை."



• கனகா

• லட்சுமணன்

தி.மு.க. கவுன்சிலரான லட்சுமணன், (எம்.எல்.ஏ., ஏ.எல். சுப்ரமணியத்தின் மகன்) "இங்க நடந்திருக்கற பல நல்ல காரியங்கள் யாருக்கும் தெரியாம போனதுக்குக் கார ணமே, கவுன்சில் கூட்டத்துல நடக்கற சண் டைகள்தான். சண்டை எல்லா இடங்களிலே யுந்தான் நடக்குது. காரியம் எப்படி நடக்குது பாருங்க!" என்கிறார்.

இவரது வார்டில் மட்டும் ஒரு கோடி செலவில் முப்பது சாலைகள்- முழுவதற்கும் தெரு விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

நெல்லை மாநகராட்சிக்கென அரசு ஒதுக்கியுள்ள எட்டுக் கோடி ரூபாயில் இது வரை ஒவ்வொரு வார்டிலும் சராசரியாக 40 லட்சம் ரூபாய் வரை பணிகள் நடந்துள்ள தாகக் கூறுகிறார் இவர்.

இவரது கருத்தையே பிரதிபலிக்கும் 12வது வார்டு கவுன்சிலர் விஜயனும், "எங்குதான் தகராறு இல்லை? இங்கு நடப்பவை மட்டும் மிகைப்படுத்தப்படுகின்றன" என்கிறார்.

"மேயர் நல்லவங்கதான். அனுபவமில்லா ததுதான் பிரச்னை. வீட்டு வேலை பார்த் துக்கிட்டிருந்தவங்களைத் தூக்கி, திடீர்னு ஒருநாள் மேயர் நாற்காலில உட்கார வெச்ச தால வந்த ஆரம்பச் சிக்கல்கள்தான் இவை. மக்களுக்காகத்தான் நாம் இருக்கிறோம் என்கிற உணர்வு அவங்களுக்கு வந்து விட் டால் போதும்" என்று கூறும் இவரும் ஒரு தி.மு.க. கவுன்சிலர்தான்!

ஒரு விஷயம். நெல்லை மாநகராட்சியில் தி.மு.க. கவுன்சிலர்களுக்கென்றொரு கொறடா இன்று வரை கிடையாது! கார ணம்?

"வேறென்ன? ஒற்றுமையின்மைதான். இங்க கட்சி அபிமானத்தை விட சாதி அபிமானம் உள்ளவங்கதான் அதிகம். ஆளுங்கட்சி மேய ருக்கு அவங்க கட்சிக் காரங்களே சப் போர்ட் பண்ற



தில்லைன்னா என்ன காரணம்? வெளியில் காட்டாட்டாலும் சாதி உணர்வுதான் பல ருக்கு மேலோங்கியிருக்கு" என்றனர் பெயர் வெளியிட விரும்பாத சிலர்.

ஒரு பெண்ணை மேயருக்கு நிறுத்துவ தென்று மேலிடம் முடிவெடுத்ததால், உமா மகேஸ்வரியும் திடீரென தி.மு.க.காரராகி, திடீரென மேயராகி விட்டார் என்று சொல் கிறார்கள்.

கட்சிக்காரர்கள் பலருக்கும் இது பிடிக்க வில்லை என்றாலும் கட்சி கட்டுப்பாட்டை மதித்துப் பேசாமல் இருந்திருக்கிறார்கள். 'உமா மகேஸ்வரியின் திறனை வெகு விரைவில் கட்சி மேலிடம் உணரும். பிறகு ஏதாவது நடவடிக்கை(?) எடுப்பார்கள்' என்று காத்திருந்த கவுன்சிலர்கள், அப்படி ஏதும் நடக்காது போகவே மாமன்றத்தில் மேயரைச் செயல்பட விடாமல் நடந்து கொள்ளவும் கூச்சல், சண்டை, குழப்பத்துக்கு வித்திடவும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

விளைவு?

விவாதங்கள் ஏதுமின்றி, எந்தத் திட்டம் பற்றி யார் பேசினாலும் மேயர், "பாஸ்! பாஸ்" என்று சொல்லி விடுவாராம், எதற்கு வம்பு என்று.

''அப்படியா, மேயர்?'' என்றோம் மாநகராட்சி அலுவலகத்தில், அவரது ஏஸி அறையில். (நகரை விடவும் மேயரின் அறை படு சுத்தம். மேசையில் ஒரு வெற்றுத்தாள் கூட இல்லை)

''வேற என்னங்க செய்யறது?'' என்கிறார் அப்பாவியாக.

''மேயருக்கென்று எந்தப் பவரும் இருக்கறதா தெரியலீங்க. எல்லாம் கவுன்சில் முடிவுதான். அதான், அவங்க என்ன சொன்னாலும் தலையாட்டிடுவேன். ஒரு சப்ஜெக்டைப் பத்திப் பேசி விவாதிக்கற வழக்கமெல்லாம் இங்க இல்லீங்க. எனக்குன்னு சொந்த அபிப்பிராயமும் எதுவும் வெச்சிக்கற தில்லை. என்ன சொன்னாலும் ஏத்துக்கிட வேண்டியதுதான்'' என்பவர், தம் மீது சொல்லப்படும் ஊழல் குற்றச்சாட்டுகளை மட்டும் கடுமையாக மறுக்கிறார்.

நகரில், ஆற்றங்கரையை ஒட்டி எழுந் துள்ள ஆக்கிரமிப்புகள் பற்றிக் கேட்டால், ''பெரிய பில்டிங்ஸையெல்லாம் இடிக்க வேணாம்னு ஒரு ஜி.ஓ. வந்திருக்குது இல்லே?'' என்று உதவி ஆணையரை அழைத்துக் கேட்கிறார்.

''நமக்கு இடிக்கற பவர் கிடையாதுங்க'' என்கிறார்.

ஆற்று நீரில் சாக்கடைக் கலப்பு, தொழிற் சாலைக் கழிவுகள் கலப்பு பற்றி நமக்கு வந் திருந்த புகார் குறித்துச் சொன்னதும்,

"இருக்காதுங்களே? அப்படியே இருந் தாலும் ஃபில்டர் செய்துதாங்க அனுப்பு வாங்க'' என்கிறார்.

பாளையங்கோட்டை பகுதியில் பன்றி களின் தொல்லையால் மூளைக் காய்ச்சல் பரவி வருவதாக மக்கள் கூறிய விஷயத்தைப் பேசத் தொடங்கினால், ''இப்பத்தாங்க ஆயிரம் பன்னி சுட்டோம். திரும்பத் திரும்ப எப்படியோ வந்துடுதுங்க. என்ன செய்ய றதுன்னு சொல்லுங்க'' என்கிறார். (மூளைக் காய்ச்சல் பற்றித் தமக்குப் புகார் ஏதுமில்லை என்றார் உதவி கமிஷனர் மெகபூபா)

இப்படிப்பட்ட பதில்களால் நம் மைத் 'திக்குமுக்காட' வைத்த மேயர், இறுதியில் தாமே நிருபராக மாறி நம்மிடம் (பதில் கூற முடியாத) ஒரு கேள்வியையும் கேட்டார் : ''ஏங்க, இந்த கல்கி அவதாரம் இந்த ஏரியா வுலதான் நடக்கப் போவுதாமே, நெசமாவா? நீங்க கல்கி பத்திரிகைதானே? உங்களுக் குத் தெரிந்திருக்குமே?''

இதற்கு மேல் நாம் பேட்டியைத் தொடர வில்லை.

— ஔரங்கசீப்

படங்கள் : வெங்கடேஷ்



மூன்று பேர் சேர்ந்து ஒரு கொலை செய்தார்கள். பாலியல் தொடர்புள்ள பொருளாதாரக் குற்றம். குற்றம் நிரூபிக்கப்பட்டு ஆயுள் தண்டனை தீர்ப்பானது.

பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட அம் மூவரில் ஒருவர் மட்டும் பகலெல்லாம் நெசவுத் தொழில் செய்தது போக, இரவுகளில் சிந்திக்க ஆரம்பித்தார். கிராமப்புறங்களில் அதிக அளவில் குற்றங்கள் நடைபெறுவதற்கும் கொலை செய்யத் தூண்டும் அளவு பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படக் காரணம் என்னவென்றும் கிராமத்துப் பெண்களின் சோர்வறியாத உழைப்புக்கு அங்கீகாரம் மறுக்கப்படுவது பற்றியும் இந்நிலை மாறுவதற்கான வழிகளைத் தேடியும் அவர் சிந்தனை சென்றது.


மதம், சமூகம், ஒழுக்கவியல், மானுடவியல் தொடர்பான நூல்களைப் படிக்க ஆரம்பித்தார். தீவிரமான வாசிப்பு அவரை எழுதுவதில் கொண்டு நிறுத்தியது.

பள்ளியிறுதி வகுப்பு வரை மட்டுமே படித்திருந்த அவரது முதல் முயற்சியான ஒரு சிறுகதை இலட்சக் கணக்கான தமிழ் வாசகர்களின் வியப்பையும் அங்கீகாரத்தையும் ஒருங்கே பெற்ற 'ஈனத் தொழில்.'

புரிந்திருக்கும். சென்ற ஆண்டு அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஆயுள் தண்டனைக் கைதி இரா. கண்ணன் என்கிற கிருஷ்ணசாமிதான் அவர்!

கடந்த ஐந்தாண்டுகளாக நெல்லை, பாளையங்கோட்டை சிறையில் இருந்து வரும் கண்ணனுக்கு, கல்கி சிறுகதைக்குப் பிறகு அதிகாரிகளிடமும் சக சிறைவாசிகளிடமும் மிகுந்த நற்பெயரும் கௌரவமும் ஏற்பட்டிருப்பதை உணர முடிந்தது.

முப்பத்தெட்டு வயதான கண்ணனின் மனைவியும் இரு சிறு குழந்தைகளும் ஒசூரில் தாத்தா வீட்டில் இருக்கிறார்கள். வருடத்துக்கு ஒரு முறை வந்து பார்த்துப் போவது வழக்கம்.



படைப்பிலக்கியத்தின்பால் ஆர்வம் ஏற்பட்டதும் கண்ணனின் கவனத்தை அதிகம் கவந்தவர் கி. ராஜநாராயணன். கி.ராவின் ஊரான இடைசெவலுக்குப் பக்கத்து கிராமம்தான் இவர் வசித்திருக்கிறார். கி.ராவின் மகன் இவரது பள்ளித் தோழர்! இருப்பினும் அப்போது கி.ராவை ஒரு போதும் சந்தித்திராதது பற்றிய வருத்தம் இருக்கிறது இவருக்கு.

வருத்தத்தை, தொடர்ந்து படித்துக் கொண்டே இருப்பதன் மூலம் தீர்த்துக் கொள்கிறார். சிறையில் வேலை பார்த்துச் சம்பாதிக்கும் பணத்தில் பெரும்பகுதியைப் புத்தகங்கள் வாங்குவதற்கே செலவிடுகிறார். கல்கி முதல் காலச்சுவடு வரை எந்த சமகால இதழ்களையும் இவர் விடுவதில்லை.

கல்வியறிவின் போதாமையும் சிந்திப்பது என்கிற பழக்கம் அறவே இல்லாது போனதும் தான் நாட்டில் பெரும்பாலான குற்றங்களுக்குக் காரணம் என்று கருதுகிறார்

சிறையில் பூத்த சிறுகதை!

கண்ணன்.

"கிராமப் புறங்களில் மனைவியைக் கொலை செய்துவிட்டுச் சிறைக்கு வரும் கைதிகள் பெரும்பாலும் அதற்குச் சொல்லும் காரணம், 'அவள் நடத்தை கெட்டவள்' என்பது.

"ஆனால், உண்மை அதுவல்ல. பகல் முழுவதும் வேலை பார்க்கும் கிராமத்துப் பெண்கள், இரவிலும் வீட்டு வேலைகளைத் தொடர்ந்து கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒரு நாளில் ஐந்து மணி நேரம் கூட ஓய்வில்லாமல் உழைக்கும் அவர்களுக்குச் சலிப்பும் சோர்வும் ஏற்படுவது இயற்கையே அல்லவா? அந்த நிலையிலும் தன் சந்தோஷத்துக்காக மனைவியை பலவந்தப்படுத்தும் ஆண்கள், தொடர்ந்து அவர்கள் அதற்குச் சம்மதிக்காமல் திரும்பிப் படுக்கும்போது தாங்கள் நடத்தை தவறிப்போய், பழியைப் பெண்களின்மேல் போட்டு விடுகிறார்கள். இந்நிலை மாறினாலொழிய கிராமப்புறக் குற்றங்கள் குறைய வாய்ப்பில்லை" என்கிறார் கண்ணன்.

சிறையிலிருந்து வெளியே வந்ததும் என்ன செய்ய உத்தேசம்? எழுத்துத் துறையில் அவர் செய்யவிருக்கும் பணிகள் பற்றிச் சொல்வார் என்று எதிர்பார்த்தால் (நெய்ப் பந்தம் என்றொரு நாவல் எழுதிக் கொண்டிருக்கிறார்.) இனிய அதிர்ச்சி.

2030ல் இந்தியாவெங்கும் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்கிற விவசாய விஞ்ஞானிகளின் கணிப்பைத் தீவிரமாக அலசி ஆராய்ந்து கொண்டிருக்கிறார் கண்ணன்.

கிராமப்புறங்களில் கம்பு, சோளம், கேழ்வரகுப் பயிர்களைப் பயிரிடுவது அறவே நின்று விட்டதுதான் பிரச்னையின் ஆதாரக் காரணம் என்று கருதுகிறார்.

பணப்பயிர்கள்–குறிப்பாக நெல், எண்ணெய் வித்துக்கள் மட்டுமே பயிரிடுவது என்றாகிவிட்டதனால்தான் பிரச்னை. நமது பாரம்பரிய உணவுப் பயிர்களை மீண்டும் நட்டு, உணவு முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலம் பஞ்சத்தை சமாளிக்கலாம் என்கிறார்.

சிறைவாசம் முடிந்ததும் நவீன முறையில் கம்பு, கேழ்வரகுப் பயிர்களை உற்பத்தி செய்து அதற்கான மக்கள் ஆதரவை மீட்டெடுப்பதையே முதல் குறிக்கோளாக வைத்திருக்கிறார்.

சிறைவாசம் குறித்த குற்ற உணர்வு கலந்த சோர்வு இவரிடம் இல்லை. நடத்ததை மறந்துவிட்டு, எதிர்காலத்தை அர்த்தமுள்ளதாக அமைத்துக் கொள்ளும் கனவுதான் இருக்கிறது. தினமும் மாலை 6 மணியிலிருந்து இரவு பதினொன்று வரை படிப்பதன் மூலம் தன்னைப் புத்துயிர்ப்பு கொள்ளச் செய்கிறார்.

வேண்டிய புத்தகங்களைத் தருவித்துக் கொடுப்பதிலும் கதைகள் எழுத உற்சாகப் படுத்துவதிலும் சிறை அலுவலர்கள் மிகுந்த உதவி செய்கிறார்கள் கண்ணனுக்கு.

ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கைக்குப் பாளை மத்தியசிறையில் அஸ்திவாரம் போட்டிருக்கிறார் கண்ணன்.

— ஸ்ரீராம்

நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம்

ஆம்! அதிர்ஷ்டமான பெயர் அமைத்தால் நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம். பணம், பதவி, யாவும் கிட்டும் வெற்றிமேல் வெற்றிகளைக் குவிப்பீர்கள். இவ்வுலகில் அனுபவிக்கத்தக்க அனைத்து சுகபோகங்களையும் அனுபவிக்கலாம் என்று ஆணித்தரமாக அடித்துக் கூறுகிறார் கோவை மாவட்டம்



அன்னூர், பு.புளியம்பட்டி அருகில் உள்ள கணுவக்கரையில் வசிக்கும் ஜோதிட விஞ்ஞானி கே.ஆர். பிரபாகர்ராஜ் அவர்கள். இவரது கருத்துக்கள் பின்வருமாறு:-

ஒரு மனிதனின் வெற்றிக்கும் தோல்விக்கும் மூலகாரணமாக இருப்பது பெயரும் கையெழுத்துமே ஆகும். ஒருவருடைய பெயரை முழுவதுமாக மாற்றத் தேவை இல்லை. சிறு திருத்தம் மட்டும் செய்தால் போதும் அதிர்ஷ்டப் பெயரால் மனித வாழ்வில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மிக நல்ல முறையில் தீர்வுகாண முடியும்.

அதிர்ஷ்டப் பெயர் அமைக்க நியூமராலஜி, நேமாலஜி, சைன், தொழில் வசியம், சிக்னேச்சராலஜி பெயர் வசியம், ஆர்க் கோலஜி, கிராபாலஜி, பயூசராலஜி போன்ற 9 வகையான காரணிகளையும் 12 வகையான இயக்கங்களையும் ஆதாரமாக வைத்து பெயர் சூட்டினால் பிரபலம் உண்டாகும். இது பூரணமாக விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட சாஸ்திரமாகும். அதிர்ஷ்டப் பெயர் எண் சாஸ்திரப்படி முறையாகப் பெயரை மாற்றினால் உடனே அதிர்ஷ்டம் உண்டாகும்.

உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்
ஜோதிட மாமேதை கே.ஆர். பிரபாகர்ராஜ்
நியூமராலஜி-நேமாலஜி-சைன்-தொழில் வசியம்



அதிர்ஷ்டப் பெயரை அமைத்துக் கொண்டால் அன்பான மனைவி (நல்ல மனைவி) அறிவுள்ள குழந்தைகள் வசதிமிக்க வீடு, வளமான தொழில், குறைவில்லாச் செல்வம் ஆரோக்கியமான உடல், இன்பகரமான வாழ்வு போன்ற அனைத்து அதிர்ஷ்டங்களையும் அள்ளித் தரும். தொழில் முடக்கம் வியாபார மந்தம் உத்தியோகத்தில் இடையூறு, கணவன் மனைவியர்க்கிடையே ஒற்றுமை இல்லாமை, செக்ஸ் கோளாறு, மனக்குழப்பம், போதைப் பொருளுக்கு அடிமை ஆகுதல், செய்வினை மாந்திரீக பாதிப்பு, தீய சக்தியால் பாதிப்பு திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இல்லாமை, முன்னேற்ற தடை, புகழ் இல்லாமை, மனநோய் போன்ற எண்ணற்ற வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் இக்கலையின் மூலம் நிரந்தரத் தீர்வு காண முடியும்.

பெயர் மாற்றத்தால் பெருஞ்செல்வர் ஆகலாம். பெயரை எந்த வயதிலும் அதிர்ஷ்டமாக மாற்றி வெற்றிகளைப் பெறலாம். முறையாகப் பெயர் அமைத்தால் முன்னேற்றம் உண்டாகும். சிலர் கடைகளில் விற்கும் பல வகையான புத்தகங்களை வாங்கி தாங்களே பெயர் மாற்றி குழம்பி வாழ்வில் பெருந்துன்பத்தை அடைந்தவர்கள் ஏராளம். RAJINI KANT (ரஜினிகாந்த்) என்ற பெயரையோRAMBA (ரம்பா) என்ற பெயரையோ எல்லோருக்கும் வைக்க முடியாது. இது பொருந்தி வருபவர்களுக்கு மட்டுமே வைக்க வேண்டும். அப்போதுதான் அதிர்ஷ்டம் தரும்.



AJITH(அஜித்) என்ற பெயரையும் SIMRAN(சிம்ரன்) என்ற பெயரையும் ஆய்வு செய்தால் இதில் வசியம் இருக்கும். யாருக்கு எந்தப் பெயர் பொருந்தும் என்று நன்கு ஆய்வு செய்து பெயர் அமைத்தால் அதிர்ஷ்டம் உண்டாகும். செய்கின்ற தொழில் எதுவாக இருந்தாலும் அத் தொழிலில் வசியம் இருக்க வேண்டும். அப்படி தொழில் வசியம் இருந்தால் தான் தொழிலில் பெரும் பணம் சம்பாதிக்க முடியும்.

ஒரு மனிதனுக்கு விடாமுயற்சி, அயராத உழைப்பு, தர்ம குணம், தன்னம்பிக்கை போன்ற குணங்கள் இருந்தும் வாழ்வில் வெற்றி பெற முடியவில்லையெனில் அதிர்ஷ்டம் இல்லை என்பது நன்கு தெரிகிறது. இல்லாத அதிர்ஷ்டத்தை பெற இக்கலை வழிகாட்டும்.

வெற்றிபெற துடிப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த வழிகாட்டியாகும். இதை பயன்படுத்துபவர்கள் அனைவரும் வெற்றியுடன் வாழலாம் என்னால் சவால்விட்டு நிரூபிக்க முடியும். இக்கலையின் மூலம் எம்மிடம் அதிர்ஷ்டப் பெயர் அமைத்தவர்கள் அனைவரும் இன்று வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். உடலின் காந்த சக்தி உயிர்ப்பு சக்திக்கு தக்கவாறு பெயரையும் கையெழுத்தையும் அமைத்தால் அபரிமிதமான அதிர்ஷ்டங்கள் கிட்டும்.

எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ரஜினி காந்த், பாக்கியராஜ், விஜய், சூர்யா, குஷ்பு, ரம்பா, சிம்ரன், ரோஜா, விஜயகாந்த் போன்ற சினிமா துறையினர்களும் பெயர் மாற்றத்திற்குப் பின்பு பிரபலமானவர்களே ஆகும். பெயரில் வசியம் கோபுராம்சம் இருக்க வேண்டும்.

அரசியலில் வெற்றி, சினிமாவில் புகழ், விளையாட்டில் சாதனை, தொழிலில் மேன்மைகிட்டும். அந்த கால இராஜ ராஜ சோழன், அக்பர், புத்தர், மகாவீரர், அசோகர், பொற்கை பாண்டியன், நெப்போலியன், பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், இந்திராகாந்தி, வீரமாமுனிவர், செல்வேல் சேரன், ஆதிசங்கரர், காஞ்சி பெரியவர் போன்றோரும் பெயர் மாற்றத்திற்குப் பின்பு பிரபலமானவர்களே ஆகும்.

அதிர்ஷ்டப் பெயர் சாதாரண மனிதனையும் பெரிய சாதனையாளராக ஆக்கக் கூடியது. கையெழுத்தால் தலை எழுத்தை வெல்லலாம்.

ஆண்-பெண் எந்த தேதியில் பிறந்தவராக இருந்தாலும் அவர்கள் திருமணம் செய்த நாளின் கூட்டு எண், திருமணத் தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் எண் 2,4,5,7,8 வரும் நாளில் கண்டிப்பாக திருமணம் செய்யக் கூடாது. அப்படி செய்தால் சோதனைகளும், போராட்டங்களும் நடக்கும். இதை விருத்து விடுபட மறு மாங்கல்ய பூஜை அதிர்ஷ்ட நாளில் செய்து கொண்டால் குடும்ப வாழ்க்கை சந்தோஷமுடனும் வெற்றியுடனும் இருக்கும்.

அதிர்ஷ்டப் பெயர், எண் சாஸ்திரம் எக்காலத்திலும் மாறாத சக்தி கொண்டது. பெயரையும் இடும் கையெழுத்தையும் வளமாக்கிக் கொண்டால் என்றென்றும் வெற்றிகள்தான். இக்கலையின் மூலம் நான் சவால்விட்டு நிரூபித்துக் காட்டிய அறிவியல் விஞ்ஞான சாஸ்திரமாகும்.

இவர் எழுதிய (உலகின் No:1 நியூமராலஜி நூல்)


"அதிர்ஷ்ட பெயர் எண் சாஸ்திரம்"

என்னும் புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். எல்லா ஊர் புத்தக கடைகளிலும் கிடைக்கும். (தபால் மூலம் பெற ரூ. 300/- M.O. செய்யுங்கள். வெளிநாட்டினர் ரூ.1000/- அனுப்புங்கள்.)

அதிர்ஷ்ட விஞ்ஞான ஜோதிடர்
கே.ஆர். பிரபாகர்ராஜ் எம்.ஏ.,
நல்லாந்தோட்டம், கணுவக்கரை (அஞ்சல்),
புஞ்சைபுளியம்பட்டி (வழி) - 638 459.
கோவை மாவட்டம்.
போன்: (04254) 87258, (098422)-13566.
விடுமுறை: செவ்வாய், வியாழன்

ஒவ்வொரு மாதமும் 2,3-ந் தேதிகளில் மட்டும் வெளியூர்ப் பயணம் குருபிரகாஷ் ஹோட்டல் (கீதாஞ்சலி) 71 ஏ., உஸ்மான் ரோடு, தி.நகர் சென்னை - 17. போன்: 4321414

நீங்களும் அதிர்ஷ்டம், புகழ், வெற்றி பெறலாம்.





2000 பிப்ரவரி 6
பிரமாதி தை 23
மலர் : 58
இதழ் : 28

கல்கி



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

'ஜெ' அடித்த சிக்ஸர்!


அரசியலில் அதிகம் பேசுவது எத்தனைக்கெத்தனை ஆபத்தோ, அத்தனைக்கத்தனை மௌனம் சாதிப்பதும் கூட ஆபத்துதான்.

மூப்பனாரின் மௌனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு ஓங்கி சிக்ஸர் அடித்தார் ஜெயலலிதா! "இடைத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று த.மா.காவைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

முன்னதாக, நெல்லிக்குப்பம் தொகுதியை த.மா.காவுக்கு ஒதுக்கத் தயார் என்று அறிவித்து, ஏதோ அ.தி.மு.க. - த.மா.கா. கூட்டணி உறுதியாகி விட்டது போலவே பேசினார். அதை த.மா.கா. ஏற்காது போன பிறகு வேண்டுகோள் அறிவிப்பு விடுத்தார்!

மூப்பனாரோ, ஜெயலலிதாவைக் காட்டிலும் ஒரு படி மேலே போய் இடைத்தேர்தலில் அ.தி.மு.கவை ஆதரிப்பதாகவே அறிவித்து விட்டார்! 'இடைத்தேர்தலுக்கு மட்டுமே இந்த ஏற்பாடு; பொதுத் தேர்தலின்போது மூன்றாவது அணி குறித்து மறுபரிசீலனை செய்வோம்' என்கிறார் மூப்பனார். ஜெயலலிதாவோ, இதைப் பொதுத் தேர்தல் வெற்றிக்கான நற்சகுனமாகத் தாம் பார்ப்பதாகக் கூறியுள்ளார்!

ஆக, மூப்பனார் சிக்கியிருப்பது விடுபட முடியாத ஒரு வலையில்!



"அ.தி.மு.கவுடன் எந்தவித அரசியல் தொடர்பும் வைத்துக் கொள்ள த.மா.கா. தயாராக இல்லை!" என்று மூப்பனார் மட்டும் காலா காலத்தில் உறுதியாகப் பேசியிருந்தாரானால் இந்த தர்மசங்கடங்கள் சம்பவித்திருக்காது. ஊழல் கட்சியான அ.தி.மு.கவுடன் தொடர்பு கூடாது என்று உறுதியாக இருந்து, காங்கிரஸிலிருந்து வெளியேறி தனிக்கட்சி தொடங்கி, ஹீரோவாக உயர்ந்தவர். நான்காண்டுகளுக்குள் தமது கொள்கையிலிருந்து அடியோடு மாறி ஜீரோ நிலைக்குத் தாழ்ந்திருப்பது தமிழ்நாட்டின் பெரும் துரதிர்ஷ்டம்.

இடைத்தேர்தல் என்பது எப்போதுமே ஆளுங்கட்சிக்குச் சோதனைதான். போதாக் குறைக்கு ரேஷன் அரிசி, பஸ் கட்டணம், பால், மின்கட்டணம் என்று அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்தி மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண் டிருக்கிறது தி.மு.க. அரசு. இந்த விலைவாசி உயர்வு இன்றையப் பொருளாதாரச் சூழலில் தவிர்க்க முடியாததாக இருக்கலாம். ஆனால் அதைப் பாமரர்கள் புரிந்து கொள்ள முடியாது.

நடுத்தரவர்க்கமோ, உள்ளாட்சி அமைப்புகளின் சீர்குலைவினாலும் அவற்றின் ஊழல் விவகாரங்களினாலும் அலுத்துப் போயிருக்கிறது. மக்களுடைய அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் இந்த அமைப்புகளின் மோசமான செயல்பாடு தி.மு.க.வின் இடைத் தேர்தல் வெற்றி வாய்ப்புகளை பாதிக்கும்!

சமத்துவபுரம், உழவர் சந்தை, மருத்துவ முகாம்கள், வள்ளுவர் சிலை திறப்பு போன்ற அரசின் உயர்நோக்குள்ள முயற்சிகள் கூட, படித்தவர்களிடையே கடும் விமர்சனத்துக் குள்ளாகியிருக்கின்றன.

கட்சி அமைப்பில் மாற்றங்கள், சீர்திருத்தங்கள் புகுத்தும் நோக்குடன் வெளியிடப்பட்ட 'ஒருவருக்கு ஒரு பதவி' ஆணை, தி.மு.க. தொண்டர்களிடையே ஏராளமான அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. ராஜ்ய சபா எம்.பிக்கள் நியமனமானபோது எழுந்த சலசலப்பு அடங்கி



விட்டாலும் தி.மு.க.வின் கட்டுக்கோப்பு குறித்துக் கேள்விகள் எழுந்தன.

இத்தனை தலைவலிகள் போதாதென்று, கடந்த சட்டசபைத் தேர்தலில் தோழமைக் கட்சியாக இருந்த த.மா.கா. இன்று எதிரிக் கட்சியாக மாறிவிட்ட சோதனை.

இத்தனையையும் மீறி, வருகின்ற இடைத்தேர்தலில் தி.மு.க. ஜெயித்தாக வேண்டும்; அதற்கென உழைத்தாக வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

டான்ஸி வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் அளித்த அதிர்ச்சித் தீர்ப்புக்குப் பிறகு, சிறப்பு நீதிமன்றம் கூட கொடைக்கானல் ஓட்டல் வழக்கில் தீர்ப்பை ஒத்திப் போட்டு மேலும் வாதங்களைக் கோரியிருக்கிறது.

இந்தச் சூழலில் ஜெயலலிதா கட்சியினர் தேர்தலில் ஜெயிப்பார்களேயானால், 'ஜெ' பேரில் போடப்பட்டுள்ள வழக்குகள் கூட மதிப்பிழக்கும்.

தமிழகத்தில் அ.தி.மு.கவின் ஆதிக்கம் மீண்டும் தலையெடுக்கவிடுவதில்லை என்று முனைப்புடன் செயல்படக்கூடிய நிலையில் இன்று தி.மு.க.வும் பா.ஜ.கவும்தான் இருக்கின்றன.

இது மாநில இடைத் தேர்தல்தானே என்ற நோக்கில் பா.ஜ.க. இத்தேர்தலை அலட்சியமாக அணுகலாகாது. இந்த இடைத்தேர்தலின் முடிவுகள் 2001-இல் நடக்கும் பொதுத் தேர்தலின் முடிவுகளை பாதிக்கும் என்பதை மறக்கலாகாது. வரவிருக்கும் இடைத் தேர்தலில் தி.மு.கவை வெற்றிபெறச் செய்ய அதன் கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் - குறிப்பாக பா.ஜ.க. - தங்கள் அமைப்பு பலத்தை முழுமையாய் அளித்து உதவ வேண்டும்.

தி.மு.க. தலைவரும் கூட்டணிக் கட்சிகளின் முழு ஒத்துழைப்பைப் பெற முனைவதுடன், சிறப்பு வியூகம் வகுத்து திட்டமிட்ட உழைப்புடன் களத்தில் இறங்க வேண்டும். ●



புத்தாண்டு பிறந்தவுடன், கடகட காசு கொடுத்தோ அல்லது ஓசியடித்தோ ஒரு டைரி வாங்கி அன்றாடம் டைரி எழுதுபவரா நீங்கள்? அது நல்ல பழக்கம். அது தொடர வாழ்த்துக்கள். ஜனவரி முடிகிறவரை எப்படியாவது தாக்குப் பிடித்துவிட்டு பிப்ரவரி தொடங்கியதும் அத்துடன் 'சரிதான் போ!' என்று நிறுத்திவிட்ட ரகமா? ஸாரி! தவறு செய்து விட்டீர்கள் சார்! தயவு செய்து, மறுபடி டைரி எழுத ஆரம்பியுங்கள். காரணம்: அண்மையில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் டைரி எழுதுவது நல்ல பலன்களை அளிக்கும் என்று தெரிய வந்துள்ளது.

ரெகுலராக, தங்கள் மனத்தில் ஏற்படும் எண்ணங்களை, அன்றைய சம்பவங்களை டைரியில் எழுதி வைக்கிறவர்கள் டென்ஷனுக்கு ஆளாக மாட்டார்கள்; மனச்சோர்வு ஏற்படாது; உடம்பில், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என்று அந்த ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆழ்ந்த சோகங்களையும் துக்ககரமான சம்பவங்களையும் சந்திக்கிறவர்கள், டைரி எழுதுகிற பழக்கம் உடையவரானால், அவற்றின் பாதிப்பு ஏற்படாது என்கிறார்கள்.




• கே.ஏ. கிருஷ்ணசாமி

பதினைந்து வருட காலமாக டைரி எழுதும் பழக்கம் பற்றிய ஆராய்ச்சி நடந்துள்ளது. தங்கள் மன உணர்வுகளை அப்படியே டைரியில் எழுதும் பழக்கமுடையவர்கள், டாக்டரிடம் போக வேண்டிய அவசியம் குறைவாகவே இருக்குமாம். "ஓவியம் தீட்டுதல், நடனம், இசைக் கருவிகள் வாசித்தல் போன்றவற்றைப் போலவே, டைரி எழுதுவதை ஒரு பொழுதுபோக்காக வைத்துக் கொள்ளலாம்!" என்று ஒரு மனோதத்துவ நிபுணர் சிபாரிசு செய்கிறார்.

அமெரிக்காவில் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கும் சுய முன்னேற்ற நூல்களின் எழுத்தாளர்கள், சமீப காலமாகத் தங்கள் புத்தகங்களில் டைரி எழுதுகிற பழக்கம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். சாரா பன் ப்ரெத்நா என்பவரின் 'சிம்பிள் அபண்டன்ஸ்' என்ற நூலில், தினசரி டைரியில், இன்றைய தினம் நான் இவர்களுக்கு, அல்லது இன்ன விஷயத்துக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன் என்று ஐந்து விஷயங்கள் அல்லது நபர்களைப் பட்டியல் இடும்படி கூறுகிறார். டைரியையே இவர், 'தினசரி நன்றி தெரிவிக்கும் இதழ்' என்று குறிப்பிடுகிறார்.

ஜூலியா காமரோன் என்பவர் இன்னொரு பிரபல எழுத்தாளர். அவர், நாள்தோறும் காலையிலோ, மாலையிலோ, இரவிலோ, ஓர் அரை மணி நேரம் டைரி எழுதுவதற்குச் செலவிடுங்கள் என்று டிப்ஸ் தருகிறார். தினசரி எழுதுவதற்குப் புதிது புதிதாக என்ன இருக்க முடியும் என்று சிலர் நினைக்கலாம். அப்படியானாலும் கூட, 'புதிதாக எழுத ஒன்றுமில்லை என்கிற சலிப்பை டைரியில் எழுதுங்கள். புத்துணர்ச்சி பொங்கும்' என்கிறார்.



• மீனாட்சி சுந்தரம்

ராப் ஹோம் என்பவர், டைரி எழுதுவதை ஒரு வித மனோதத்துவ மருத்துவமாய் விவரிக்கிறார். குண்டாக இருப்பவர் தினமும், 'நான் ஒல்லியாகிக் கொண்டிருக்கிறேன்' என்று தினசரி பல தடவை எழுதினால், எடைக் குறைப்பு முயற்சியில் சீரியஸாக இறங்க அதுவே ஓர் உந்துதலாக இருக்கும் என்கிறார். இதே போல, 'நான் அழகாகிக் கொண்டிருக்கிறேன், நான் சந்தோஷமாய் வாழ்கிறேன்' என்று தினமும் பல தடவை எழுதி, நம் வாழ்க்கையில் பல மாற்றங்கள் நிகழ்வதை சாத்தியமாக்கலாம் என்பது இவர் கருத்து. மனத்துக்கும், உடல் நலத்துக்கும் நேரடியான தொடர்பு உண்டு என்கிற கருத்தின் அடிப்படையில் கூறப்படுவது இது.

தொடர்ந்து டைரி எழுதி வரும் நம்

ஒத்தாச்சு பிறகு என்னாச்சு டைரி?

ஊர் விடாக்கண்டர்கள் சிலரை விசாரித்தோம். அவர்கள் குறிப்பிட்ட சங்கதிகள் பல ஆச்சரியமேற்படுத்துபவையாக இருந்தன.

முன்னாள் அமைச்சர் கே.ஏ. கிருஷ்ணசாமியை 'டைரி எழுதுபவர்' என்பதைவிட 'டைரிக் கலைஞர்' என்று சொல்லலாம்.

கல்லூரி நாட்களிலிருந்தே டைரி எழுதும் இவர், வழக்கமான வழவழ டைரியில் எழுதுவது கிடையாது. தனக்கான டைரியைத் தமது சொந்த அச்சகத்தில் தாமே தயாரித்துக் கொள்கிறார் கே.ஏ.கே!



அதாவது, செ[illegible]மான நோட்டுகள். மாதத்துக்கு ஒரு நோட்டு என சுமார் நூறு நோட்டு தயாரித்து வைத்துக் கொண்டால் அது தீருகிற வரை பிரச்னை இல்லை என்கிறார் கே.ஏ.கே.

"காலை வாக்கிங் போகிறபோது சந்தித்த மனிதர்கள் தொடங்கி பத்திரிகைத் தலையங்கங்களில் படித்த பளிச் வரிகள் வரை என் டைரியில் குறித்து வைப்பேன்.

"இரவில் ஒருபோதும் எழுத மாட்டேன். காலை கண் விழித்ததும் முதல் வேலை, 'முந்தைய நாள் சரித்திரத்தை' எழுதி வைப்பதுதான். என் உணர்வுகளைப் பதிவு செய்வதோடு, என்னைப் பண்படுத்திக் கொள்ளவும் டைரி எழுதும் பழக்கம் வெகு சௌகர்யமாயிருக்கிறது!" என்கிறார் கே.ஏ.கே.

கனரா வங்கியின் சீனியர் மானேஜராக இருந்து ஓய்வு பெற்ற மீனாட்சி சுந்தரம் நாற்பது வருடங்களாக டைரி எழுதும் வழக்கம் உள்ளவர்.


"அற்ப விஷயங்கள் முதல் மிக முக்கிய ஆபீஸ் விஷயங்கள் வரை எழுதி வைத்து விடுவேன். புதிதாக வரும் தமிழ்ப் பத்திரிகைகள் பற்றிய என் உடனடி அபிப்பிராயங்கள் முதல் சிவாஜியுடன் போட்டோ எடுத்துக்கொண்ட தனிப்பட்ட சம்பவங்கள் வரை அதில் இருக்கும்.

"டைரி எழுதுவதால் என்ன லாபம்? எனக்கொரு பெரிய லாபம் கிடைத்தது! கொஞ்ச நாள் ஜம்முவில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு, மாற்றலாகிச் சென்னை வந்த பின் பத்து வருடங்கள் கழித்து, நான் அங்கிருந்தபோது வழங்கிய ஒரு 'கடன்' வழக்காகி, என்னை வம்புக்கிழுத்தது.

• ரம்யா

மாதம் ஒரு நகரம்

ஸலாம், சேலம்வாசிகளே!



சேலத்துக்கு வருகிறோம்! சும்மா மாம்பழம் சாப்பிட அல்ல! மாநகராட்சியின் செயல்பாடுகளை அலசி ஆராயவும் மற்றுமுள்ள சாதனைகளையும் சோதனைகளையும் கவனிக்கவும்தான்!

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உடனே எங்களுக்குக் கடிதம் எழுத வேண்டியதுதான். சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளின் பிரச்னைகள், அதிகாரிகள் அல்லது தனியாரின் சாதனைகள், பிற வியப்பூட்டும் விஷயங்கள் — வளர்ப்பானேன்? — 'இந்தச் செய்தி அவசியம் வெளி வர வேண்டும்' என்று நீங்கள் கருதுவதையெல்லாம் உடனே எழுதியனுப்புங்கள்.

உங்கள் கடிதங்களின் அடிப்படையில் செய்தி சேகரிக்க எமது நிருபர்கள், பிப்ரவரி 17,18, 19 தேதிகளில் சேலத்துக்கு வருவார்கள்.

ஆகவே கடிதங்கள் வந்து சேரக் கடைசித் தேதி 16.2.2000

"கோர்ட்டுக்குப் போக வேண்டி வந்தது. பத்து வருடத்தில் பல நூறு கடன்கள்; நபர்கள். எது ஞாபகம் இருக்கும்?

"ஆனால் அந்த நேரத்தில் என் 'ஜம்மு டைரி'தான் உதவியது. பழைய விஷயங்களை அச்சு பிசகாமல் கோர்ட்டில் எடுத்துச் சொல்லி சாட்சியளித்தேன். டைரியையும் சமர்ப்பிக்க முடிந்ததில் வழக்கில் என் சாட்சி அதி முக்கியமானதாகி விட்டது!"

நாற்பது வருஷத்துக்காரர்கள் டைரி எழுதுவது பெரிய விஷயமில்லை. இன்றைக்கு இருக்கிற கல்லூரிச் சிட்டுகளிடம் இப் பழக்கம் இருக்கிறதா என்று விசாரித்தோம்.

நான்காமாண்டு பொறியியல் மாணவி ரம்யா, தான் கல்லூரியில் சேர்ந்த பின் டைரி எழுத ஆரம்பித்திருப்பதாகச் சொன்னார்.

"அது ஒரு இன்ட்ரஸ்டிங்கான விஷயம். தினம் ஐந்து அல்லது பத்து நிமிடம்தான் ஆகும். கூடிய வரை தினமும் எழுதி விட முயற்சி செய்வேன். தவறி விட்டால் மறு நாள் காலை.

"ஆரம்பத்தில் ஒரு பக்கத்தில் இரண்டு நாள் எழுதும்படியான டைரியாய் உபயோகித்தேன். இப்போது ஒரு நாளைக்கு ஒரு பக்கம் போதவில்லை" என்கிறார் ரம்யா.

பிளஸ்டூ நாட்களிலிருந்தே காலை முதல் வேலையாக டைரி எழுதும் ராமசாமி, சி.ஏ., படித்துக் கொண்டிருந்தபோது ஒவ்வொரு தினத்தின் ஒவ்வொரு மணி நேரத்தையும் 'பிளான்' செய்ய டைரி எழுதும் பழக்கம் மிக உதவியாக இருந்ததாகச் சொல்கிறார்.

"பரீட்சை தினத்தில்கூட டைரி எழுதத் தவறியதில்லை. அப்படியொரு ஈடுபாடு டைரியின் மேல்" என்றவர், சி.ஏ முடித்து, வேலைக்குப் போன பிறகும் தொடர்ந்த பழக்கம், சமீபத்தில் திருமணமானபோது தாற்காலிக ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பதாக வெட்கமுடன் குறிப்பிடுகிறார்.

ஹிட்லர் காலத்துக் கொடுமைகளை எழுதிய சிறுமி ஆன் ஃபிராங்கின் டைரி சரித்திரமானது; ஆனந்தரங்கம் பிள்ளையின் டைரிக் குறிப்புகள் இலக்கியம்!

ஜெயின் டைரி சாட்சியம்! நாம் எழுதும் டைரி கூட நாளை...

எங்கே புறப்பட்டு விட்டீர்கள்? டைரி வாங்கவா அல்லது எழுத ஆரம்பித்து நிறுத்தி விட்ட டைரியைத் தேடி எடுக்கவா?

— கௌதம் ராம்

அட்டை வண்ணப்படம்: **ப்ரவீண்குமார்**

மாடல்: **வர்ணா**

இரண்டாயிரத்தி ஒன்றில் காமராஜர் ஆட்சியை அமைப்போம் என்று த.மா.கா.காரர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாயிரத்தில் அழகிய சென்னையை அமைத்து விடுவதாக வணக்கத்துக்குரிய மேயர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

நம்மவர்கள் மட்டுந்தான் இரண்டாயிரத்தை ஒரு வழி பண்ண வேண்டுமா என்ன?

"2003ல் இந்தக் கூட்டு வீடுகளை முற்றிலுமாக ஒழித்து விடுவோம்" என்று வீரசபதமெடுத்திருக்கிறார்கள், ரஷ்யாவிலுள்ள மாஸ்கோ, பீட்டர்ஸ்பர்க் நகரங்களின் மேயர்கள்.

ஒரு டீ ஸ்பூன் சரித்திரம் படியுங்கள் :

ரஷ்யாவில் கம்யூனிஸம் உயிர் வாழ்ந்து கொண்டிருந்த போது, 'இருக்க இடம், உண்ண உணவு, செய்ய வேலை' மூன்றும் உறுதி என அறிவித்தார்கள் ஆட்சியாளர்கள்.

அதன்படி உணவுக்கு ரேஷன் கார்டு (பாதி வயிறு கண்டிப்பாக நிறைந்து விடும் அளவுக்கு உணவுப் பொருட்கள் தரப்படும்.) கொடுத்தவர்கள், எல்லோருக்கும்





வேலை கொடுக்க இயலாதபோது, 'வேலையில்லாதோர் அலவன்ஸ்' என்று ஒரு தொகை கொடுத்து விட்டார்கள்.

தங்க இடம் என்பதில் தான் பிரச்னை வந்தது!

ஏராளமான வீடுகள் அரசு செலவில் கட்டப்பட்டும் அது போதுமானதாக இல்லை. ஆகவே ஒரு 'நவீன' திட்டம் கொண்டு வந்தார்கள். அதுதான் 'கம்யூனவிகா' என்கிற கூட்டு வீடுகள்.

கூட்டு வீடுகள் என்றால் கூட்டுக் குடித்தனம் என்பதல்ல! அரசாங்கம் தேர்ந்தெடுத்து பேட்ச் பேட்சாக அனுப்பும் ஆறு பேர்கள் சேர்ந்து ஒரு வீட்டில் (அதாவது, ஓர் அறையில்) வசிக்க வேண்டும். அவர்கள் உறவுக்காரர்களாகவோ, நண்பர்களாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை.

அரசின் இத்திட்டத்தை 'சோஷலிச சமத்துவம்' என்று விளம்பரப்படுத்தினாலும் உண்மைக் காரணம் வேறு.

'எதையும்-யாரையும் சந்தேகப்படு' என்பதே அப்போதைய ரஷ்ய அரசின் தாரக மந்திரமாக இருந்தது.

இதன்படி ஒரு கூட்டு வீட்டில் ஆறுபேர் இருந்தால், ஒவ்வொருவனும் அடுத்த

வனைப் பற்றி, அவன் நடவடிக்கைகளைப் பற்றி, அரசுக்கு 'உளவு' சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

சொல்லப்படும் விஷயம் தண்டனைக்குரியது என்று அதிகாரிகள் கருதிவிட்டால் போதும்; ரேஷனை 'கட்' பண்ணி விடுவார்கள். அலவன்ஸ் இருந்தால் அது அம்பேலாகிவிடும்!

தன்னைப் 'போட்டுக் கொடுத்தவ'னை, காத்திருந்து, தன் சந்தர்ப்பம் வரும்போது அடுத்தவன் ஏதாவது பொய்ப் புகார் சொல்லி மாட்டி விடுவது வழக்கம்.

செலவுகளைக் குறைப்பதற்காக "என்ன புகாரோடு வந்திருக்கிறாய்?'' என்று அதிகாரிகள் நச்சரிப்பதும் வேறு வழியில்லாமல் கற்பனையான பொய்ப் புகார்களை அடுத்தவன் மேல் திணிக்க மக்கள் முனைவதுமாக ரஷ்ய நகரங்களின் அவலம் கணக்கு வழக்கின்றிப் போனது.

மொத்த தேசத்திலும் சுமார் பத்து லட்சம் பேர் இத்தகைய கம்யூனலிகா வீடுகளில் வசித்து வந்தார்கள்.

45 சதுர அடிதான் ஓர் அறையின் அதிகபட்ச பரப்பளவு. இந்த அறையிலேயே பிறந்து வளர்ந்த ஒரு 75 வயதுக் கிழவர் சொல்கிறார்: "1960ல் குருட்ஷேவ் நிறைய வீடுகள் கட்டினார். இந்தக் கூட்டு வீடுகள் சற்றே குறைந்தன. ஆனால் கடந்த 10 வருடங்களாக ஒரு தனி வீடு கூட இங்கு கட்டப்படவில்லை. அரசாங்கம் எப்போதாவது பிளாட் கட்டி விற்றால் பணமிருப்பவர்கள் வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். வாடகை கொடுக்க முடிந்தவர்கள் தனி வீடு போய்விடுவார்கள். ரஷ்யாவின் மெஜாரிடிகளான ஏழைகளுக்குத்தான் இந்த கம்யூனலிகாவை விட்டால் வேறு போக்கிடமில்லை."

கம்யூனலிகா வீடுகளில் சமையலறை மட்டும் விஸ்தாரமாக, தனியே 20 பேருக்குச் சமைக்கும் வசதியுடன் இருக்கிறது. ஒரே பாத்ரூம்தான்! குளிருக்கு மட்டும் கணப்பு வசதி உண்டு.

மாஸ்கோ மேயரின் சபதம்!



• 'கம்யூனலிகா' சமையலறை

இந்த வீடுகளில் இருப்பவர்கள் தமது மகன், மகளுக்கும் அதே 'வீட்டுக் கொத்தி'ல் இடம் வேண்டும் என்று மனுச் செய்தால்–அபூர்வமாக அலாட் ஆக வாய்ப்புண்டாம்.


சில சமயம் வேண்டுமென்றே கொடூரமாகக் குடும்பத்தைப் பிரிப்பார்களாம்.

ரஷ்யாவில் 'மக்களாட்சி' தலையெடுத்த பிறகு நிலைமை சற்று மாறியிருக்கிறது. நீண்ட நாட்களாக வசிப்பவர்கள், சந்ததியினருக்குத் திருமணமானால், அவர்களும் அங்கேயே இடத்தைப் பகிர்ந்து வாழ அனுமதித்திருக்கிறார்கள்.

இரண்டாயிரத்தில், நம் மேயர் செய்த சபதம் பலிக்கிறதா, ரஷ்ய மேயர்கள் செய்த சபதம் பலிக்கிறதா என்று பார்க்கத்தானே போகிறோம்?


— பானுமதி நீலகண்டன்

நடக்குமென்பார்




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்க திறமை வெளிப்படற வாரம் இது. தொட்ட காரியமெல்லாம் ஜெயிக்கறதுக்கான சந்தர்ப்பங்கள் கூடி வரும். உங்க சம்பந்தப்பட்ட ஃபைல் ஏதும் கவர்ன்மென்டுல பெண்டிங்கா இருந்தா இப்ப மூவ் ஆகும். கோர்ட் சம்பந்தமான விஷயங்களிலும் நல்ல திருப்பம் ஏற்படும். லேவாதேவி ஸ்பெகுலேஷன் சமாசாரங்களில் லாபம் லிமிட்டாத்தான் இருக்கும். சிலருக்குப் புதிய பொறுப்புகள் வரலாம். பணப் பிரச்னை ஏதும் இருக்காதுன்னாலும் எதிர்பாராத செலவுகள் வரலாம். அப்படி வர்றது வீண் செலவாகவும் இருக்கலாம். உஷாரா இருங்க.



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

மத்தவங்க பாராட்டற மாதிரியான காரியங்களைச் செய்வீங்க. நீங்க ரொம்ப நாளா எதிர்பார்த்துக்கிட்டிருக்கற செய்தி உற்சாகத்தைத் தரும்படியா வந்து சேரும். சிலருக்குப் பயணத்தால் லாபம் கிடைக்கும். சிலருக்குப் புதுசு புதுசா பொருள் வாங்கற யோகம் இருக்கு. வியாபாரிங்களுக்கு அளவோடுதான் லாபம் கிடைக்கும்கறதால எதிலும் அகலக் கால் வெக்காம இருக்கறதுதான் நல்லது. பொதுவாவே உங்க வீட்டுப் பிரச்னைகளை வேலைக்காரங்க முன்னாடி பேசாதீங்க. அவங்களாலயும் பிரச்னை வரலாம். பண விஷயம் சீரா இருந்தாலும் சிக்கனம் அவசியம். தந்தையின் உடல் நலனில் அக்கறை அவசியம்.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

நீங்க சும்மா இருந்தாக்கூட சனியும் குருவும் உங்க புத்திசாலித்தனத்தை வெளிக்காட்டாம இருக்க மாட்டாங்க. பண விஷயம் சுமார்தான்னாலும் வீட்டுல கல்யாணம் மாதிரியான விசேஷங்கள் நடக்கறதுக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகும். சிலருக்கு வெளிநாடு போற சான்ஸுன்னா, சிலருக்கு வெளிநாட்டுலேர்ந்து உற்சாகமான செய்தி வந்து சேரும். கொடுக்கல், வாங்கல் லாபகரமாவே இருக்கும். புது ஆளுங்கிட்ட பழக நேர்ந்தா ரொம்பவே உஷாரா இருங்க. பயணத்தைத் தவிர்க்கப் பாருங்க; முடியலேன்னா ரொம்ப ரொம்ப எச்சரிக்கையா இருங்க.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

முக்கியமான சில கிரகங்கள் மக்கர் பண்றதால உங்க காரியங்களில் தடங்கலும் தாமதமும் வர்றதைத் தவிர்க்க முடியாது. அதோட நீங்க நினைச்சபடியே எல்லாம் நடந்துடாது. கூடப் பிறந்தவங்களோடு மனஸ்தாபம் வர்றதுக்கான சான்ஸும் இருக்கு. அதனால பேச்சுல நிதானம் காட்டுங்க. இல்லேன்னா கணவன் - மனைவிக்குள்ளயே சலசலப்பு வந்துடும். கொடுக்கல் - வாங்கல் சமாசாரமே இந்த வாரம் வேணாம். பயணத்திலும் உடல் நலனிலும் கவனமா இருக்கணும். மின்சாரம், நெருப்பு மாதிரியானவற்றோடு தொழில் பண்றவங்க உஷாரா இல்லேன்னா விபத்துக்கு சான்ஸ் ஆயிடும்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


மனசுக்குள்ள தேனைக் கொட்டுன மாதிரி நினைவுகளெல்லாம் இனிமையாவே இருக்கும். புரியலையா? காதல் கை கூடுற வாரங்க இது. இந்த உற்சாகமே உங்க மத்த காரியங்களிலும் திறமைகளை வெளிப்படச் செஞ்சிடும். பிறருடைய உதவிகளும் மறுப்பில்லாம கிடைக்கும். கல்யாணம் போன்ற மங்கள காரியங்கள் நடக்கறதுக்கான வாய்ப்புகளும் கூடி வரும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவியுயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கற சான்ஸ் இருக்கு. பொதுவா இது எல்லோருக்குமே நல்ல வாரம்தான்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


சனி, குரு, செவ்வாய் கிரகங்கள் மக்கர் பண்ணினாலும் ராகுவும் சுக்கிரனும் உங்க சைடுல இருக்கறதால பத்துல நாலு பழுதாகாம நடக்கும். மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் பிறக்கும். சிலருக்கு வெளிநாட்டுத் தொடர்பால பயன் கிடைக்கும். புது நட்புகள் ஏற்படும்; அது பயனுள்ளதாவும்

இருக்கும். உடல் நலத்துல அஜாக்கிரதை காட்டிடாதீங்க. சிலருக்குத் தோல் சம்பந்தமான வியாதிகள் வர்றதுக்கு சான்ஸ் இருக்கு. உத்தியோகஸ்தர்கள் குறுக்கு வழியில சம்பாதிக்க நினைச்சா, மாட்டிக்குவீங்க!



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*


'நல்லவங்க எல்லாரும் உங்க பின்னால; நீங்க நெனச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே'ன்னு எம்.ஜி.ஆர். படப்பாட்டு ஒண்ணு இருக்கே. அது உங்களுக்கு அப்படியே பொருந்தும். குரு பலம் அப்படியிருக்கு உங்களுக்கு. சிலருக்கு லாட்டரி மாதிரியான அதிர்ஷ்டத்துக்குப் பயணத்தின் மூலமும் வெளிநாட்டுத் தொடர்பாலும் ஆதாயம் காத்திருக்கு. சிலருக்குப் புதிய பொருள் வாங்கற - இளம் பெண்களா இருந்தா கணவனை வாங்கற யோகமும் இருக்கு.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

எடுத்த காரியம் எதுவானாலும் எத்தனை கஷ்டமானாலும் முடிச்சுக் காட்டுவீங்க. அதுவும் ஏனோதானோன்னு இல்லீங்க; மத்தவங்க பாராட்டும்படி செஞ்சு காட்டுவீங்க. உங்க பேச்சு சாமர்த்தியமே பல வெற்றிகளுக்குக் காரணமா இருக்கும். குடும்பச் சூழ்நிலை உற்சாகமா இருக்கறதால கலைப் பொருள்கள் வாங்கிச் சேர்ப்பீங்க. அந்த அளவுக்குப் பணப் புழக்கமும் இருக்கும். கூட்டுத் தொழில் பண்றவங்களுக்கும் நல்ல வளர்ச்சி உண்டு. மாணவர்கள் சிலருக்கு வெளிநாடு போய்ப் படிக்கற சான்ஸூம் இருக்கு.

நடக்கும்!



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

மனசுல ஒரு தெளிவும் துணிவும் பிறக்கற வாரம் இது. வரவு செலவுகள் திருப்தியா இருக்கறதோடு, சில திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கும் சான்ஸ் இருக்கு. குடும்பத்தில் சுப காரியங்களுக்கான வாய்ப்புகள் கூடி வரும். கொடுக்கல், வாங்கல் ஸ்பெகுலேஷனாலும் ஆதாயம் உண்டு. சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு நல்ல முன்னேற்றம் தெரியும். சிலருக்குப் பலமுனைத் தாக்குதல் போல, பல இனங்களிலும் லாபம் கிடைக்கும்.



கன்னி ராசிக்காரரான சு.சுவாமிக்குப் புது நட்புகள் ஏற்படுமாம்; அது பயனுள்ளதாவும் இருக்குமாம்!




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

முக்கியமான கிரகங்கள் நேர்ருட்டுல வராததால சில சங்கடங்கள் வரவே செய்யும். அதனால் எதிலும் விழிப்புணர்ச்சி அவசியம். பதற்றம், அவசரமெல்லாம் கூடவே கூடாது. பேச்சிலும் நிதானம் காட்ட வேண்டியது மிக மிக அவசியம். உத்தியோகஸ்தர்களும், ஃபேக்டரி தொழிலாளர்களும் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படணும். கொடுக்கல், வாங்கலில் பிரச்னைகள் வரலாம். பண விஷயம் அத்தனை பிரமாதமா இல்லை. அதனாலயே கணவன் மனைவிக்குள்ள சலசலப்புகள் வரலாம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

அண்ணன் - தம்பிகள் அனுகூலமா இருப்பாங்க. வாழ்க்கையில் ஏதாவது லட்சியம் வெச்சிருக்கறவங்களுக்கு அது நிறைவேறச் சந்தர்ப்பம் கூடி வர்ற வாரம் இது. வெளிநாட்டுச் சேதி உற்சாகமானதா இருக்கும். ஆனாலும் செலவினங்கள் கட்டுக்கடங்காம போற சான்ஸ் இருக்கறதால சிக்கனம் அவசியம். கொடுக்கல், வாங்கலில் ரொம்பவே உஷாராயிருக்கணும். உத்தியோகஸ்தர்கள் விழிப்போடு வேலை செய்யாம, கடனுக்குச் செஞ்சா, சிக்கல்ல மாட்டிக்க வேண்டியிருக்கும்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

பண நடமாட்டம் சிராவே இருக்கும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டமும் உண்டு. அரசுப் பணியாளர்களுக்குப் பதவியுயர்வு வரலாம். கவர்மெண்ட் சமாசாரங்கள் சுலபமா முடியும். கல்யாணமாகாதவங்களுக்கு அதற்கான வாய்ப்புகள் கூடி வரும். இந்தக் கடன் தொல்லையிலிருந்து மீளவே முடியாதான்னு ஏங்கிக்கிட்டிருக்கறவங்க கவலையை விட்டுடுங்க. இந்த வாரம் கடன் தீர்ந்திடும். ஆனாலும் பயணத்தில் உஷாரா இருக்கணும். சிலருக்கு மருத்துவச் செலவைத் தவிர்க்க முடியாம போகும் வாய்ப்பும் வம்புச் சண்டைகளில் மாட்டிக்கறதுக்கான வாய்ப்பும் இருக்கு.

ஜோடிப் பொருத்தம் நிகழ்ச்சி மேடையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எங்கள் ஸ்டாலிலிருந்து பார்த்தால் மேடை ஓரளவுக்குத் தெரியும்தான். ஆனாலும் எங்கள் ஸ்டால் முதலாளி, ஜோடிப் பொருத்தம் நிகழ்ச்சியைப் பார்க்க மேடைக்குப் பக்கத்தில் சென்றிருந்தார். ஸ்டாலில் நானும், சித்ராவும் மாத்திரம் இருந்தோம்.

நாங்கள் பணிபுரிவது மிக்ஸி கம்பெனி ஸ்டால் ஒன்றில். சித்ரா மேடைப் பக்கம் பார்வையைத் திருப்பினாள். திமுர் திடீரென்று கூச்சல், ஆரவாரம். எனக்கு அதை வேடிக்கை பார்க்க ஆர்வமில்லை. வேறு விதமான கவலைகள் இருப்பதால், இதன் மீதெல்லாம் ஆசையில்லை. இன்றோடு முடிகிறது - இந்த வீட்டு உபயோகப் பொருட் கண்காட்சி. பத்து நாட்கள் நடந்தது. தினசரி ஐம்பது ரூபாய் சம்பளம். மொத்தம் ஐந்நூறு ரூபாய் வரும்.

நாளை திரும்ப வேறு வேலை தேடி அலைய வேண்டும். தீபாவளி வேறு நெருங்கிற்று. நிறைய செலவு. சித்ரா சொன்னாள்: "ஒரு ஜவுளி ஷோரூம்ல தீபாவளிக்காக ஆட்களை வேலைக்குச் சேர்க்கிறாங்க. நான் நாளையிலிருந்து போறேன். பதினெட்டு நாளைக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம். வர்றீங்களா?"

நான் எதுவும் சொல்லவில்லை. பதினெட்டு நாளைக்கு ஆயிரம் ரூபாய். ஆயிரம் ரூபாய் கிடைத்தால் அந்தப் பணத்திற்குச் செலவு சரியாய் இருக்கும்.

அக்காவுக்கு இது இரண்டாவது தீபாவளி. அக்காவுக்கும், அத்தானுக்கும் புது டிரஸ் எடுக்க வேண்டும். தங்கை கடிதார் வேண்டும் என்றாள். அது போக, அத்தானுக்கு போன வருஷம் தீபா வளிக்கு மோதிரம் எடுக்கவில்லை என்றும், இந்த வருஷமாவது மோதிரம் போடும்படி அத்தான் கூறுவதாகவும் அக்கா கேட்கிறாள்.



இப்போதைக்கு ஆயிரம் ரூபாய் அவசியத் தேவைதான். இல்லை, கடன் வாங்க வேண்டும். இந்த வேலைக்குப் போனால் கிடைக்கும்தான். ஆனால் பி.எஸ்ஸி., முடித்துவிட்டு ஜவுளிக் கடையில் துணி கிழிப்பதா என்று சங்கடமாயிருந்தது. தெரிந்தவர்கள், கூடப் படித்தவர்கள் எவரேனும் ஜவுளிக் கடைக்கு வரலாம். "என்னப்பா... காலேஜுக்குப் போனே. கடைசில ஜவுளிக் கடைக்கு வந்துட்டே" என்று பரிகாசமாய்க் கேட்பார்கள்.


எந்தத் தொழில் பார்ப்பதிலும் கேவலம் இல்லை. ஆனால் நாம் பார்க்கும் வேலையைப் பிறர் இளக்காரமாய்ப் பார்க்கையில், தொழில் மீது பிடிப்புப் போய் விடுகிறது.

"என்ன ரமேஷ்... உம்முன்னு இருக்கீங்க... என்ன சிந்தனை?" சித்ரா கேட்டாள்.

"ஒண்ணும் இல்ல. நாளைய பொழுதை எப்படித் துவக்குறதுன்னு தெரியலை... அதான் சிந்தனை. பத்து நாள் பொழுது எப்படியோ போயிடுச்சு."

"விடுங்க. கொஞ்ச நேரம் ப்ரோக்ராமைப் பாருங்க. ரொம்ப இண்ட்ரஸ்டிங்கா இருக்கு" என்றாள்.

கண்காட்சியுடன் தினசரி ஏதாவது ஒரு போட்டி நடந்து கொண்டிருந்தது. தினசரி குலுக்கல் முறையில் பரிசுகள். ஜனங்களைக் கண்காட்சிக்கு வரவழைக்க இத்தனையையும் செய்ய வேண்டியுள்ளது. மேடையில் நடக்கும் நிகழ்ச்சி ஓரளவுதான் தெரிந்தது. இருந்தாலும் ஸ்பீக்கர் வழியே நிகழ்ச்சியைத் தெள்ளத் தெளிவாய்க் கேட்க முடிந்தது. அசட்டுத்தனமான கேள்விகள். அசட்டுத்தனமான பதில்கள். கண்காட்சிக்கு வருபவர்களை எல்லாம் பார்க்கும்போது, மக்கள் இத்தனை பணக்காரர்களாய் இருக்கிறார்களா.... பணம்



யோகி

இவ்வளவு கொட்டிக் கிடக்கிறதா என்று ஆச்சர்யமாய் இருக்கும்.

எனக்கு இங்கே காலையில் ஒன்பது மணியிலிருந்து இரவு ஒன்பதரை மணி வரை தொடர்ந்து பன்னிரண்டரை மணி நேரம் பணி செய்தால்தான் ஐம்பது ரூபாய்ச் சம்பளம். ஐம்பது ரூபாய் சம்பாதிக்கவே எவ்வளவு போராட வேண்டியுள்ளது. ஆனால் இங்கே வரும் ஜனங்கள் ஒரு பெரிய கூல்டிரிங் பாட்டிலை ஐம்பது ரூபாய் விலை கொடுத்து வாங்கிக் குடிக்கிறது.

"எல்லாருக்கும் பிரச்னைகள், கவலைகள் இருக்கிறது ரமேஷ்... நாம் ஏன் ஓயாம அதையே நினைக்கணும். கொஞ்ச நேரம் ப்ரோக்ராமைப் பாருங்க. கவலைகளை மறங்க" என்றாள் சித்ரா.

சித்ராவும் என்னை மாதிரியே கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டிருப்பவள். என்னை மாதிரியே நாளையைப் பற்றிய கவலைகள் அவளுக்கும் நிறைய உண்டு. ஆனாலும் தன்னை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொண்டிருப்பவள்.

"நா இந்த ப்ரோக்ராமைப் பார்க்கிறதால எனக்கேதும் பலன் கிடைச்சா பார்க்கலாம். எனக்கென்ன கிடைக்கப் போகுது?" என்றேன்.

சித்ரா சிரித்தாள்.

"பணம் கொடுத்தாத்தான் பார்ப்பீங்களா... என்கிட்ட பேசுவதற்குக் கூட காசு கேட்பீங்க போலிருக்கு?"

"ம். உங்ககிட்டே பேச காசு கேட்க மாட்டேன். பிறர் கிட்ட பேச காசு கேட்பேன்" என்றேன்.

சித்ரா சிரித்தாள். சித்ராவால் சிரித்துக் கொண்டேயிருக்க முடிகிறது. அவளது வீட்டுத் துயரங்களோடு ஒப்பிடுகையில், என் வீடு எவ்வளவோ மேல். பெரிய குடும்பம், குறைந்த வருமானம், இவள் வீட்டில் உள்ள யாருக்கும் பொறுப்பு என்பதே இல்லை. இவள் தப்பிப் பிறந்து விட்டாள். பாசம் இவளை அலைக்கழிக்கிறது. குடும்பச் சுமையைத் தூக்கித் தூக்கி கூன் விழுந்து விட்டதோ என்று கூடத் தோன்றும். லேசான கூன் உண்டு அவளுக்கு – இயற்கையாகவே.

இந்தப் பத்து நாளாகத்தான் சித்ராவின் சிநேகம். காலேஜுக்குப் போய் இருக்கிறாள். இரண்டாம் வருஷத்தோடு நிறுத்தி விட்டார்கள். இவள் டிகிரி முடித்திருந்தால், இவளது புத்திசாலித்தனத்திற்கு நல்ல வேலை கிடைத்து, நன்றாய் இருந்திருப்பாள் என்று தோன்றும்.

அநேகமாய் இனி இன்று வியாபாரம் இருக்காது. இன்னும் கொஞ்ச நேரத்தில் நிறைவு விழா நடக்கும். பரிசளிப்பு விழா நடக்கும். வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியது. இன்று கொஞ்சம் மந்தம்தான் - வியாபாரம். நாலைந்து நாட்கள் நல்ல வியாபாரம் இருந்தது.

''என்ன ரமேஷ்... நாளைக்கு அந்த ஷோரூமுக்கு வர்றீங்களா...'' என்று திரும்ப சித்ரா கேட்டாள்.

"நைட்தான் முடிவு பண்ணணும்."

"நான் போறேன். பதினெட்டு நாளைக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம். அது போக தீபாவளிக்கு முந்தின தினம் டிரஸ் கொடுத்தாலும் கொடுப்பாங்க'' என்றாள்.

"நீங்க ஏன் ஏதாவது ஒரே இடத்துல வேலை பார்க்கக் கூடாது. இங்க பத்து நாள். அங்க பத்து நாள்னு கஷ்டப்பட்டுட்டு'' என்று கேட்டேன்.

''ஒரே இடத்துல இருந்து ஒரு மாசம் வாங்குற சம்பளத்தை இங்க பத்து நாள்ல வாங்கிக்கலாம். அதோட சும்மா இருக்கிற நாட்கள்ல தையல் கிளாஸ் போறேன். கரஸ் பாண்டன்ஸ் கோர்ஸ்ல திரும்ப பி.ஏ. எழுதறேன். அப்புறம் ஒரே இடத்துல இருந்தா, நம் குடும்பச் சூழ்நிலையை புரிஞ்சிட்டு சில முதலாளிங்க வேற மாதிரி தொந்தரவு தர ஆரம்பிச்சிக்குறாங்க. எனக்கு இந்த மாதிரி இருக்கறது பிடிச்சிருக்கு."

"இப்படியே அலைய வேண்டியதுதானா... கல்யாணம் பண்ற ஐடியாவெல்லாம் இல்லையா?"

''கல்யாணமா.. யாருக்கும் அது பற்றி அக்கறையில்லை. நானா யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டாத்தான் உண்டுன்னு நினைக்கிறேன்'' என்றாள்.

"உங்க கதைதான் என் கதையும். நீங்க சொன்ன மாதிரிதான் நானே யாரையாவது முடிச்சுக்கிட்டாத் தான் உண்டு'' என்றேன்.

சித்ராவை எனக்குப் பிடிக்கும். சித்ராவை மணந்து கொண்டால், நிச்சயம் வாழ்க்கை சுகமானதாய் தான் இருக்கும். என்னை அவளுக்குப் பிடிக்குமா என்று தெரியவில்லை. நான் சிகரெட் பிடிப்பதைக் குற்றம் சொல்வாள்.

"உங்க வருமானத்துக்கு நீங்க ஒரு நாளைக்கு ஏழெட்டு சிகரெட் பிடிக்கிறீங்க. அதுவும் பில்டர் சிகரெட். தேவையா? பத்து ரூபாயைக் கரியாக்குறீங்க'' என்பாள்.

"ரொம்ப உரிமை எடுத்துட்டேனா" என்று கேட்டாள். இங்கு வந்த நான்காம் நாள் இது பற்றிப் பேசினாள். இந்த ஆறு நாளாய் நான் சிகரெட்டை நிறுத்தி விட்டேன். எப்படி என்னால் இது சாத்தியப்பட்டது என்று தெரியவில்லை.

பஸ் ஸ்டாப்பிற்கு வந்தோம். பத்து நாள் வாழ்க்கை முடிந்து விட்டது. பையில் பத்து நாள் சம்பளம் இருக்கிறது. தினசரி பஸ் ஸ்டாப் வரை சேர்ந்துதான் வருவோம். பிறகு அவரவருக்கான பஸ்ஸில் ஏறிக் கொள்வோம்.

"என்ன, நாளைக்கு வர்றீங்களா'' என்று கேட்டாள்.

மறுக்க முடியாமல் போனதற்குப் பணம் மட்டுமே காரணமாகத் தோன்றவில்லை. ●



படத்தைப் பார்த்தவுடன் கார்கிலை நினைவூட்டும் கொலு என்று நினைக்கத் தோன்றுகிறதா? இது பொம்மை இல்லை. கேக். ஆம்! அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற ஒரு கேக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்த 'கார்கில் கேக்' இது.

- சி.எம்.



அழகு பார்க்கவா காஷ்மீர்?

✉ காஷ்மீர் பிரச்னை தீர வாக்கெடுப்புதான் ஒரே வழி என்ற தலையங்கம் வியப்பை அளித்தது. வாக்கெடுப்பு அன்றைய சூழ்நிலையில் நடத்தியிருந்தால் ஷேக் அப்துல்லா தலைமையில், பெரும்பாலோர் இந்தியாவுடன் இணையவே வாக்களித்திருப்பார்கள். ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு மதவெறி எனும் நச்சு பரவி விட்ட இன்றைய நிலையில் வாக்குக் கணிப்பு நடந்தால் அது பள்ளத்தாக்குப் பகுதியை அல்லது முழுவதையும் பாகிஸ்தானுக்குத் தாரை வார்ப்பதில் தான் முடியும்.

பெங்களூர், அ. ஷண்முகசுந்தரம்.

✉ காஷ்மீர் மக்களின் பிரச்னைகளை ஏறெடுத்துப் பார்த்து எழுத்தாய் வடித்த தலையங்கம் அருமை. காஷ்மீர் பாரத வரைபடத்தில் வைத்து அழகு பார்ப்பதற்கு மட்டுமே பயன்பட்டு வருகிறது. மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்களா என்று எண்ணிப் பார்ப்போர் யாருமில்லை. இந்த நிலையில் மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து மாற்றுப் பாதையை உருவாக்குவதைத் தவிர நிரந்தர அமைதிக்கு வேறு வழியேயில்லை!

நெல்லை, டி. செல்வன்.

✉ "தி.மு.க.வின் உட்கட்சி சவால்கள்" கட்டுரையில் ஜனநாயகத் தோற்றத்துடன் எடுக்கப்படும் சர்வாதிகார முடிவுகள் என்ற வரி உண்மையிலேயே சரிதான். இல்லையென்றால் கலைஞரால் கட்சியை ஐம்பதாண்டு காலம் கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடியாது!

சென்னை - 63, என்.வி. சீனிவாசன்.

✉ வரலொட்டி ரெங்கசாமியின் சிறுகதை, 'சமத்துவபுரம்' மற்றும் கிருஷ்ணாவின் சிறுகதை 'ஸ்டிரைக்' அற்புதமான படைப்புகள்.

விழுப்புரம், வை. வெங்கடேசன்.

✉ சாருகேசியின் ஹைஜாக் கற்பனை படித்து சிரித்துச் சிரித்து வயிறு வலித்து விட்டது. அரசியல்வாதிகள் கடத்தப்பட்டால் எப்படியெல்லாம் புலம்புவார்கள் என்பதை மிகத் தெளிவாகக் கூறி விட்டார்கள்!

சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ இருபது வாரங்களாக 'உயிர்களைத் தேடித் தேடி...' தொடர் வித்தியாசமான விண்வெளிப் பயணம் ஒன்றை மேற்கொண்ட அனுபவத்தையளித்தது! ஸயன்ஸ்பிக்ஷன் கதைகளில் சாதனைகளைக் கற்பனையில் சாதித்து விட்டு இறுதியில் சாகடிக்கும் வழக்கமான பார்முலாவை செய்யாது நாராயணனாவது மீறியிருக்கலாம்! அரஸின் ஓவியங்கள் தொடருக்கு பிளஸ் பாயிண்ட்!

நெய்வேலி, க. சுந்தர்.

✉ 'உயிர்களைத் தேடித் தேடி' தொடர் கதையை ஒவ்வொரு வாரமும் மிகவும் ரசித்துப் படித்து வந்தேன். ஒரு நல்ல த்ரில்லான ஆங்கிலத் திரைப்படம் பார்ப்பது போல் மிகவும் சுவாரசியமாக இருந்தது.

பெங்களூர், என்.ஆர். ஆதித்தன்.

✉ தெய்வ தரிசனம் பகுதியில் திருக்காரவாசல் என்ற திருக்காறாயில் குறித்து எழுதியிருப்பது பற்றி மகிழ்ச்சி. 90 ஆண்டுகளுக்கு முன்னால் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளதாக எழுதியுள்ளீர்கள். அதன் பின் இரண்டு கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. கடைசியாக 12.2.1987 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்சமயம் இக் கோவிலின் மேல்தளம் பழுதுபட்டுள்ளது. ஆகையால் மழை பெய்தால் கோவிலில் மழை நீர் ஒழுகுகிறது. அதை சீர்செய்வதற்கும் திருப்பணி செய்யவும் அன்பு உள்ளம் கொண்ட நபர்கள் மனமுவந்து முன்வர வேண்டும்.

திருக்காரவாசல், கே. ஆர். அருணாசலம்.

✉ 'கல்கி' வார இதழில் (16.1.2000) பேராசிரியர் பெரியார்தாசன் "நான் நாத்திகனில்லை" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையைப் படித்துப் பார்த்து வியந்தேன். தந்தை பெரியார் பேசாததையெல்லாம் பேசியதாக இவ்வளவு 'துணிச்சலாக' எழுத முடிகிறது - அதனைத் தங்களைப் போன்றவர்கள் இதழ்களில் வெளியிட முடிகிறது என்றால் இவற்றை என்ன சொல்ல!

சென்னை - 7, கலி. பூங்குன்றன்,
உதவி பொதுச் செயலாளர்,
திராவிடர் கழகம்.

(பெரியார்தாசன் தாம் எழுதியவை உண்மை என்பதில் உறுதியாக இருக்கிறார். - ஆர்.)

வட்டமேஜை

பெரியார் உள்பட சுற்றி அமர்ந்திருந்த பலரும் என்னைக் கூர்ந்து பார்த்தபோதும் எனக்கு எந்தவிதமான பயமும் ஏற்படவில்லை. அவரைச் சுற்றியிருந்தவர்கள் வேண்டுமானால் எனக்கு அறிமுகமில்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் பெரியார் அப்படி அல்லவே! அவரது நூல்களின் மூலம் ஏற்கெனவே அவர் எனக்கு மிகமிகப் பரிச்சயமாகி விட்டார் என்பதால், தைரியமாக அவரது பதிலை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தேன்.

"தம்பி! நாம் சொல்ற சமூக சீர் திருத்தக் கருத்துக்களையெல்லாம் எந்தவொரு பார்ப்பானும் சொல்ல மாட்டான். அப்படி ஒருத்தன் சொன்னா, அந்தப் பார்ப்பானை மத்த பார்ப்பான், பார்ப்பான்னு ஒத்துக்க மாட்டான். அதனால சீர் திருத்தம் பேசறவன் தானாகவே நம்மகிட்ட வந்து சேர்ந்திடுவான்!" என்று அமைதியாகச் சொன்னார் பெரியார்.

உண்மைதானே! பேதமற்ற சமூகத் தன்மையை ஒப்புக் கொண்டால், தான் உயர்ந்தவர்- பிறர் தாழ்ந்தவர் என்று கருதாதவராக இருந்தால் அவர் பார்ப்பனர் அல்லவே- ஏற்றத் தாழ்வு பாராட்டும் பிற பார்ப்பனர்கள் அவரைத் தங்களுள் ஒருவராக ஒப்புக் கொள்ள மாட்டார்களே. மகாகவி பாரதி இறந்தபோது பதினோரு பேர் மட்டும் சவ ஊர்



ரசிக்கத் தெரிந்தால் பேசத் தெரியும்!

நான் நாத்திகனில்லை - 4

பேராசிரியர் **பெரியார்தாசன்**

வலத்தில் வந்தது அதனால்தானே? இப்படி யோசித்ததால் என் கேள்விக்குப் பெரியார் தந்த பதில் எனக்குப் பொருத்தமாகப் பட்டது. எனவே, மனத்தளவில் அவரோடு இன்னும் நெருக்கமாகி விட்டதாக உணர்ந்தேன்.

இதன் காரணமாக வாரத்திற்கு ஒருமுறை பெரியார் திடலுக்குச் செல்ல ஆரம்பித்தேன். பிறகு அது இரண்டு முறை மூன்று முறை என்று வளர்ந்து, தினசரி ஒருமுறையாவது அவரைப் பார்க்கச் செல்வது என்றானது. அதன் பிறகு விடுமுறை நாட்களென்றால், நாள் முழுக்க அங்கேயே இருப்பது என்கிற நிலைக்கே வந்து விட்டேன்.

இப்படி நான் அங்கே இருந்ததாலேயே, தினசரி அவருடன் கருத்துக்களை விவாதித்தேன், கேள்விகள் கேட்டேன் என்றெல்லாம் அர்த்தமில்லை. போவேன். அவரைப் பார்ப்பேன். அவ்வளவுதான்!

நான் பெரியாரை இப்படிச் சந்திக்கிற போது, எண்பத்தைந்து வயதுக்குமேல் இருக்கும் அவருக்கு. அந்த வயதிலும் அவர் படித்துக் கொண்டேயிருப்பார். அவருக்குப் பக்கத்தில் ஒரு பை இருக்கும். பையைச் சுற்றிப் புத்தகங்கள் இரைந்து கிடக்கும்.

படிப்பதற்காக அவர் ஒரு பூதக் கண்ணாடி வைத்திருப்பார். அந்தக் கண்ணாடி கைரேகை ஜோதிடம் பார்ப்பவர்கள் வைத்திருப்பதுபோல் பெரிதாக இருக்கும். அதை வைத்துக் கொண்டுதான் படிப்பார். படித்துக் கொண்டே இருக்கும் போது, திடீரென்று கண்ணாடியைக் கீழே வைத்துவிட்டு, விரலில் எச்சிலைத் தொட்டு, புத்தகத்தின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடையாளம் வைப்பார். பிறகு ஒரு பெரிய பேனாவை எடுத்து, வாயால் கடித்து அதன் மூடியைத் திறந்து குறிப்புகள் எடுப்பார்.

இதையெல்லாம் நான் ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். யாராவது அவரைப் பார்க்க வந்தால் பேசுவார். யாருடனாவது பேச்சைத் தவிர்க்க எண்ணினால், பேசுவதை நிறுத்தி விட்டு உடனே புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்து விடுவார்! அப்படிச் செய்தால், 'இனி உங்களுடன் பேசுவதற்கு விருப்பமில்லை; போய் வாருங்கள்!' என்று அர்த்தம்!

இதற்கிடையில்தான் நான் அங்கே அங்குமிங்குமாகப் போய் வந்து கொண்டிருப்பேன். சமயத்தில் அவருக்கு அருகில் கிடக்கும் புத்தகங்களில் ஒன்றை எடுத்துப் படித்துக் கொண்டும் இருப்பேன். இடையிடையே அவருக்கு ஏதாவது எடுபிடி வேலைகளும் செய்து கொண்டிருப்பேன். ஆம்; எனக்கு நானே அவருடைய வேலையாளாக நியமனம் செய்து கொண்டேன்!

இருந்த போதிலும் என்னை பெரியார் கவனிக்கிறாரா என்று எனக்குத் தெரியாது. அது பற்றியெல்லாம் கவலைப்படாமல் தான் இந்த வேலைகளையெல்லாம் செய்து கொண்டிருந்தேன். சமயத்தில் அவருடைய உதவியாளரைப் போல், "ஐயா உங்களைப் பார்க்க இன்னொர் வந்திருக்காங்கய்யா!" என்றெல்லாம் அவரிடம் போய்ச் சொல்லுவேன். இன்னும் சில சந்தர்ப்பங்களில், "ஐயா ரெஸ்ட்டுல இருக்காங்க. அவரைப் போய் தொந்தரவு செய்யக் கூடாது! போங்க... போங்க..." என்று வந்திருப்பவர்களிடம் கடுமையாகக் கூட நான் நடந்து கொள்வதுண்டு! எல்லாமே எனக்கு நானே கொடுத்துக் கொண்ட அதிகாரம் தானே தவிர, வேறு யாரும் அங்கே எனக்கு வழங்கியதல்ல!

ஒருநாள் பெரியார் படித்துக் கொண்டிருந்தபோது நானும் பக்கத்தில் இருந்தேன். அப்போது பெரியாரின் (நான் உள்பட அனைவரும் பெரியாரை 'ஐயா' என்று குறிப்பிடுவதுதான் வழக்கம்) உதவியாளரான விடுதலை சம்பந்தம் உள்ளே வந்தார். "ஐயா, உங்களைப் பார்ப்பதற்காகப் புலவர் ஒருவர் வந்திருக்கிறார்!" என்றார்.

"வரச் சொல்லுங்கய்யா! வரச் சொல்லுங்கய்யா! ரொம்ப சந்தோஷம்!" என்றார் பெரியார்.

"ஐயா, அவர் உங்ககிட்ட பேசணும்னு வந்திருக்கார்!"

"அதான் சொன்னேனுங்களே! வரச் சொல்லுங்க!"

அந்தப் புலவரின் பெயரைச் சொன்ன சம்பந்தம், "ஐயா, அவரு பெரிய புலவருங்க.



"திபெத்தில் புதிய புத்தராக இரண்டு வயதுச் சிறுவனை சீன அரசு நியமித்திருக்கிறதாமே ஏன்?"

"எப்படியும் இன்னும் ஒரு ஏழு, எட்டு வருடங்களுக்காவது இந்தப் பையன் வெளிநாட்டுக்குத் தப்பி தனியா ஓடிட முடியாதுங்கற தைரியம்தான்!"

– காவிரி மணாளன்



ஆனாலும் கொஞ்சம் கிறுக்குங்க!'' என்று தயங்கியபடியே சொன்னார்.

''அதையேங்க ரெண்டு தடவை சொல்றீங்க? அதுதான் முதல்லயே புலவர்னு சொல்லிட்டீங்களே!'' என்றார் பெரியார்.

அவர் இப்படிச் சொன்னதும் அருகிலிருந்த எனக்கு சிரிப்புத் தாங்கவில்லை. வாய்விட்டுச் சிரித்தேன்.

அப்போதுதான் பெரியார் என் பக்கம் திரும்பி முழுமையாக என்னைக் கூர்ந்து பார்த்தார். "ம்... நல்லா ரசிக்கிறயே! (பெரியார் அனைவரையும் மரியாதையாகத்தான் அழைப்பார் என்றாலும் என்னை ஒருமையில் கூப்பிடுகிற அளவுக்கு நான் அவருக்கு அறிமுகமாகிவிட்டேன்!) நல்லாப் பேசுவே போலிருக்கு. இன்னைக்குச் சாயங்காலம் சிந்தாதிரிப்பேட்டைல கூட்டம் இருக்கு. வந்து பேசு!" என்றார்.

ஒரு விஷயத்தை ரசிக்கத் தெரிந்தவனால் நன்றாகப் பேசவும் முடியும் என்கிற கணிப்பு பெரியாருக்கு! அந்தக் கணிப்பில்தான் என்னைப் பேசச் சொல்லியிருக்கிறார்.

பெரியார் இப்படிச் சொன்னதும் எனக்குத் தலைகால் புரியவில்லை. கல்லூரியில் சிறுசிறு பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு பேசுபவன்தான் என்றாலும் பொதுக் கூட்டத்தில்– அதுவும் பெரியார் பேசுகிற சுயமரியாதைக் கூட்டத்தில் பேசுகிற வாய்ப்பு என்பது சாதாரணமானதா! மனம் முழுதும் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்தது.

ஆனாலும் ஒருபயம். என்ன பேசுவது? எப்படிப் பேசுவது? பெரியாரின் பல புத்தகங்களை நான் படித்திருந்தாலும் பொதுக் கூட்டத்தில் பேசுகிற அளவுக்கு எனக்கு விஷயம் தெரியுமா என்று பல கேள்விகள்.

இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டு பிடிக்கிற நோக்கத்தில், பெரியார் திடலில் கறுப்புச் சட்டை போட்டுக் கொண்டிருந்த அனைவரிடமும் போய் பேசுவதற்குக் குறிப்புகள் தருமாறு கேட்டேன். நானும் சுயமாகக் குறிப்புகளைத் தயார் செய்து கொண்டேன்.

மாலை–அதாவது முன்னிரவில் பொதுக் கூட்டமாயிற்றே! அதனால் வீட்டுக்கு வந்து குளித்து உடைமாற்றிக் கொண்டு, அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னேன். நான் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வந்து கொண்டிருக்கிற விஷயம் அவருக்குத் தெரியுமே! அதனால் கிண்டலாக, "டேய்! முதல் முதலா பொதுக்கூட்டம் பேசப் போற. நல்லாப் பேசணுமே. அதுக்காக சாமி கும்பிட்டுட்டு, திருநீறு வெச்சுக்கிட்டுப் போ!" என்றார். நான் சீர்திருத்தக் கருத்துக்களை பேசி என்ன சாதித்துவிடப் போகிறேன் என்கிற நக்கல் அவருக்கு.

என் தந்தையின் கிண்டலையெல்லாம் நான் காதில் போட்டுக் கொள்ளவில்லை. நேராக சிந்தாதிரிப் பேட்டைக்குச் சென்றேன். அப்போது ஒரே மழை. அதன் காரணமாகப் பெரியாருக்கு முன்பு பேச வேண்டியவர்கள் யாரையும் பேசவிடாமல், நேரடியாகப் பெரியாரையே பேசச் சொல்லி விட்டார்கள்.

நான் அரும்பாடுபட்டுச் சேகரித்துத் தொகுத்து, மனத்துக்குள்ளேயே ஒத்திகை பார்த்து வைத்திருந்த என் கன்னிப் பேச்சு அரங்கேறாமல் போனதில் மிகவும் நொந்து போனேன்!

(தொடரும்)

அம்மாவின் நகைகளும் பெரியம்மாவின் நகைகளும் கிடப்பது இந்தக் கிணற்றுக்குள்தான். அவை, முக்குளித்தும், பாதாள ஜோதியிட்டும், சேறு அள்ளியும் எடுக்கவும் மீட்கவும் முடியாதபடிக்கு வெடிக் குச்சிகளாகவும், ஆட் கூலியாகவும் மாறி கிணறு ஆழமாக்கப் பயன்பட்டன. அழுக்கேறிய மஞ்சள் சரடுகளையே ஆபரணமென அணிந்து தாயார்கள் வாழ்கிறார்கள்.

பெண்களின் மனதுக்கு உவமை சொல்லும்படியாக கிணறு ஆழமாகி விட்டது. எங்கள் பகுதியில் கிணறாழத் துக்கும் தண்ணீருக்கும் சம்பந்தமொன்றுமில்லை - ஆகாயம் பார்த்த பூமி.

இந்நிலையில் 'போர்வெல்' (ஆழ்துளை) ஒன்று போடு வதாக முடிவெடுத்துச் செயல்பட்டோம். 'போர்' ஒத்துக் கொண்டு விட்டது. இருபத்து நாலு மணி நேரமும் 'ஒரு கவலைத் தண்ணீர்' ஊற்றும் அதில் உண்டு. என் ஜாதகத் தின் 'கடக' ராசி இது விஷயத்தில் வொர்க் அவுட் ஆகி உதவி விட்டது. போர்வெல்லுக்குத் தனியாக கம்ப்ரெஸர் வைத்தோம். அதிலிருந்து கிணறுக்குள் நீரிறைத்து கிணறுக் குள்ளிருந்து 'மோட்டார்' மூலம் காட்டுக்குப் பாய்ச்சு வோம். நீரை உறிஞ்சுகிற நிலம், வாழ்வதற்குத் தேவையான நம்பிக்கைக்கும் கடனுக்கும் இடையறாது ஏற்பாடு செய்து வந்தது.

அந்தஸ்து உள்ள இடத்தில் நேர்கிற அதிர்ஷ்டத் திற்குத்தான் அதிர்ஷ்டம் என்று பெயர். குடும்பத்தின் நீரியல், நிலவியல் மேலாண்மை அவ்வளவு புத்திசாலித் தனம் கொண்டிருக்கவில்லை. ஆகவே, இதுகாறும், 'மோட் டாருக்கு மட்டுமே செலவு செய்து வந்த நாங்கள் இந்த சாதாரண நீர் வரத்தால் கம்ப்ரஸருக்கும் செலவு செய்யும் வாய்ப்பு பெற்றவர்களானோம்.

செலவுகளை ஒருபக்கம் வையுங்கள்.

இந்தச் சாதனங்களைக் கழற்றி மாற்றுகிற செய்கை இருக்கிறதே? பக்கவாட்டில் நின்று வடம்பிடித்து மோட் டாரைத் தூக்கினாலோ, கிணறில் ஒருமுறை ஏறி இறங் கினாலோ இக்கடுமையின் கால் பகுதியை நீங்கள் உணர்வீர்கள்.

இதைப் பற்றி என்னை விடச் சரியாக அடிக்கடி கிணறேறி இறங்கும் கள்ளி மேட்டுச் சித்தப்பாவோ, தங்கவேல் ஃபிட்டரோ சொல்லக்கூடும். ஆனாலும் பாருங்கள்... இந்த நீர் நிலை கள் - மனிதர்கள் சந்திக்கிற மனிதர்களை விட - அதிக எண்ணிக்கையில் ஆட்களைச் சந்தித்து விடுகின்றன.

போர்வெல் கம்ப்ரஸரில் ஒரு குழாயில் காற்று உள்ளே போய் பிறி தொரு குழாயில் தண்ணீர் வந்தால் ஆயிற்று. சமயத்தில் இக் குழாய் களின் பிடிமான 'கிளிப்' தகர்ந்து இருநூற்று அறுபது அடிக் குழாயும் புஸ்ஸென்று





மேற்கிளம்பி கிணற்றுக்குள் சுற் றும் பாருங்கள்... காண் பதற்கு இருகண்ணும் ஒரு



மனகம் தாங்காது. கருள் வளையல் போலிருக்கும். அதன் தலைப்பைக் கண்டுபிடித்து மேலிழுத்து குழாயை காட்டுப் பரவுக்கு இழுத்துப் போய்த் திரும்பவும் துளையில் இட்டு 'கிளிப்' போட வேண்டும்.

தண்ணீருக்குள் பாலம் எல்லாம் போட்டு விடுகிற இக்காலத்தில் எங்களுக்கு காங்கிரீட் போட்டு நிரந்தரமாய் நிறுத்தத் திராணியில்லை.

ஏப்பை சாப்பைகள் இல்லாமல் உலகம் பூரண மடையாதோ என்னவோ. சரியான சமயத்தில் 'ஆயில்' மாற்றாததால் பேரிங் வகையறாக்கள் டப்பாக்கள் ஆனதில் மூணும் மாதம் இரண்டாயிரம் தெண்டமானது. மோட்டார் வகையறாக்கள் தரும் சிரமம் பற்றி விவரிப்பது எமது மடத்தனத்தைப் பட்டியலிடுவது போலாகி விடும். இவைகளிலிருந்து மீட்சியடையும் நாள் வந்துவிட்டது.

இந்த மீட்சியைக் கொணர்ந்தது 'கள்ள மடையார்'தான்.

நாங்கள் ஒரு பரிகாரம் செய்ய வேண்டுமென்றும் அதைச் செய்வதன் மூலம் அடையப்போகும் நன்மைகளையும் எடுத்துரைத்தார்.

தொடர் ஓட்டத்தைப் போன்ற எங்கள் வாழ்க்கையில் துயரக் குச்சிகளைத் திணித்துப் போகிற தீயசக்திகளை இதன் மூலம் வென்று புறங்காணலாம். பரிகாரம் எனப்படும் மகாயக்ஞம் நேற்றிரவு நடந்தது.

காலையிலேயே கள்ள மடையாரும் மாந்திரீகரும் வந்து விட்டார்கள். மாந்திரீகர்களிடம் உள்ள சிக்கலே அவர்கள் அபூர்வமான பொருட்களைக் கேட்பதுதான். அதில் நம்பிக்கை வைத்து அந்தப் பொருட்களைச் சலித்துத் தேடிக் கண்டுபிடிக்கிற ஒருவன் ஏதோ ஒரு தருணத்தில் வாழ்வில் வென்றேயாக வேண்டும்.

முதற்கண் அவர் மண் சட்டி ஒன்றும் பதினொரு மண் விளக்குகளும் கேட்டார். கார்த்திகை மாதத்தில் மெழுகில் விளக்கெரிக்கும் வழவழத்த காலமிதில் இந்த ஐட்டங்களுக்காக நான் மல்லம்பாளையம் போய் வந்தேன். தேங்காய், பழம், சாம்பிராணி... தோட்டமே ஒரு பர்ணசாலை

க. சீ. சிவகுமார்



யு ரேகா!

இந்தி நடிகை ரேகா, சுயசரிதை எழுதியிருக்கிறார். இந்திப் பட உலகில், புகழின் உச்சியினைத் தொட்ட இவரது வாழ்க்கை பல சர்ச்சைகள், பரபரப்புகள் கொண்டது. திரையுலகில் நுழையப்பட்ட சிரமங்கள் தொடங்கி, அமிதாபுடனான நெருக்கம், திருமணம், மற்றும் பல சென்சேஷனான விஷயங்கள் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதால், புத்தகத்துக்கு பலத்த எதிர்பார்ப்பு. புத்தகத்தின் தலைப்பு?

யுரேகா!

— சி. எம்.

போலாயிற்று. அசையாப் பொருட்களுக்கு மத்தியில் ஒரு ஆட்டுக்குட்டியும். பலிக் குட்டி.

அது பலியிடப்பட்டு அதன் ஆன்மா எங்கள் குடும்பத்தை ரட்சிக்க வேண்டும். மாதக்கணக்கில் வெயில் பொரிந்து, மழை நனைந்து கூரையற்றுக் கம்ப்ரஸ்ஸர் கிடக்க, இப்படி 'கிடாய்' வெட்டிக் கொண்டிருப்பது அபத்தமாய்ப் பட்டது. ஆனால் வீட்டு முடிவுக்குக் கட்டுப்படுகிற அசக்தன் நான். விமர்சனத்தை வீட்டுக்கு வெளியில் தீவிரமாக உரைத்து உணவைக் காப்பாற்றி விடுகிறேன்.

இந்தப் புள்ளியில் நானும் கிடாயும் ஒன்று போல் தோன்றினோம். ஆட்டுக் கறிக்கு கிலோ நூற்றியிருபது போல விலையிருக்கிறது.

வெட்டப்படும் கிடாய் மாந்திரீகருக்குச் சொந்தம். சாயங்காலம் முதலே நண்பர்களும் வேண்டப்பட்டவர்களுமாய்ப் பத்துப் பதினைந்து பேர் கூட்டம். மாந்திரீகர் மண் சட்டியின் மேல் பாதியை உடைத்தார். கிண்ணம் போன்ற – அல்லது பூச்சட்டி போன்ற அடிப்பகுதி மீந்தது. அதற்கு வெளிப்பக்கம் வெள்ளையடித்தார். பொடக்காளியிலிருந்து அடுப்புக்கரி கொணர்ந்து குழைத்து கறுப்பு கறுப்பாய் புள்ளிகள் இட்டார்.

விளக்குகளை ஏற்ற முற்பட்ட போது காற்றின் வேகத்தில் அணைந்து விட்டன. பாவத்தை வாயு பகவான் மீது போட்டு விட்டு விளக்குகள் ஓரமாய் சுடரின்றி ஒதுங்கின.

பூஜைப் பொருட்கள் ஆட்டுக்குட்டி சகிதம் கிணற்றுமேட்டுக்கு வந்தாயிற்று. இரும்புக் கழி ஒன்றிலும் தென்னை மட்டை ஒன்றிலும் ஓரத்தில் துணி சுற்றி மண்ணெண்ணெய் நனைத்து, பந்தம் தயாரானது.

கிழ்ப்பாய்ச்சக் கோவணம் கட்டியிருந்த மாந்திரீகர் நெஞ்சு மற்றும் கைப் பகுதிகள் எங்கும் கரியைப் பூசியிருந்தார். அவரது இடுப்பில் கயிறு ஒன்று கட்டப்பட்டு அதைப் பிடித்தவாறு பின்னால் ஒருத்தர் நின்று கொண்டிருந்தார். அவர் 'எவ்வளவு' ஆவேசம் கொள்ளப் போகிறாரோ என்ற கிலியை அது அதிகரித்தவண்ணமேயிருந்தது.

சில பூர்வாங்க ஏற்பாடுகளுக்குப் பின் அவர் கிடாயை வெட்டத் தயாரானார். ஏற்கெனவே தயாரான ப்ளாக் அண்ட் வைட் மண் சட்டியில் அம்மா வேகவைத்த சோறு நிறைந்திருந்தது. நான் ரொம்ப நேரமாய் கிடாயை இடுப்போடு அணைத்தவாறிருக்கிறேன்.

தென்னை மட்டையில் செய்த பந்தம் 'டொணங்'கென்று துணிப் பகுதியோடு முறிந்து விழுந்தது. ஒரு பந்தம் மட்டும் மீந்ததில் அந்த முழு இருளில் அரை வெளிச்சத்தில் நாங்கள் மூழ்க வேண்டியதாயிற்று. முழு இருள் என்று குறிப்பிடுவது 'அமாவாசை' இரவு என்பதைத்தான். கிடா வெட்டுகிறபோது நிலவின் பிறை, சுனை, முழுமை எதுவும் சாட்சிக்குத் தேவையில்லை. எங்கள் இரண்டு செல் பேட்டரியே தோட்டத் தரையில் மஞ்சள் நிலாவை உற்பத்தி செய்யும். மஞ்சள் நிலா என்பதன் மூலமாகவே அதனது ஒளியுமிழ் திறனை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

நான் கிடாயை கொடுவாள்கையரான மாந்திரீகரின் முன் நிறுத்தினேன். யாரோ, "கிடா துலுக்கட்டும். தண்ணி தெளிங்க" என்றார்கள்.

கிடாய் தலையை இடதும்வலதுமாக ஆட்டி தன்னையே வெட்டுவதற்கு ஒப்புக் கொடுக்கும் செய்கைக்கு 'துலுக்குவது' என்று பெயர். தண்ணீர்த் தெளிக்கப்பட்டும் அது சற்று நேரம் அமைதியாய் நின்றிருந்தது. சடாரென திமிறிக் கொண்டு வேலி கடந்தது. கள்ளிமேட்டுச் சித்தப்பா ஜான்டி ரோட்ஸ் மாதிரி ஒரு முயற்சி செய்தார்.

புண்ணியமில்லை. மாந்திரீகருக்கு அவ்வளவு பெரிய கயிறைக் கட்டியவர்கள் ஆட்டுக்கு சிறு கயிறையாவது கட்டியிருக்கலாம்.

பக்கத்துத் தோட்டத்துள் படை புகுந்தோம். ஒரு தீப்பந்தம், ஒரு டார்ச், முருங்கை அடர் தோட்டம், அமாவாசை, கறுப்பு ஆடு... (வெள்ளாடு என்றால் வெள்ளையாக இருக்க வேண்டாமா? அது ஏன் கறுப்பாக இருக்கிறது?)

அரவம் கேட்டு பவர்புல் பேட்டரி லைட்டோடு பக்கத்துத் தோட்டத்துக்காரரான மாமா வந்து விட்டார். எங்களுக்கு மரபு மீறின வெட்கம் வந்து விட்டது. இம்மாதிரியான அதிபூஜைகளை எல்லாம் அண்டை வீட்டாரும், அண்டைத் தோட்டத்தாரும் அறியாமல் நிகழ்த்துவதுதான் கொங்குப் பகுதி மரபு.

எங்கள் இரண்டு தோட்டக் கிணறுகளுக்கும் இடையேயான பாதையில் அந்தச் சந்திப்பு நிகழ்கிறது. மாமாவும் கூட கூடச் சேர்ந்து ஆட்டைத் தேட ஆயத்தப்படுகையில் அதுவாக வந்து நிற்கிறது ஆடு. அதன் கண்கள் ஆட்டுக் குட்டியின் கண்களே போலிருக்கின்றன. இதற்குத்தானே ஆசைப்பட்டீர்கள் மானுட குமாரர்களே! என்பது போல் கனைத்து என் முழங்கால் உரசி நிற்கிறது. அடைக்கலப் பொருளைக் கொல்வது உலகின் சுலப காரியம். அதைப் பிடித்துக் கொண்டு பலியிடத்துக்கு வந்தாயிற்று. எளியவைகளுக்கென்று பீடம் ஏதுமில்லை.

இனி கிடாயை துலுக்க வைக்கிற ரிஸ்க் எடுக்க யாரும் தயாரில்லை. காரியம் முடிந்தது. குடும்பச் சார்பாக மாந்திரீகர் தேவதைகளை வேண்டிக் கொண்டார்.

தேடி வரும் இடர்கள் பாதி வழியில் மடங்கிப் போகவும், அதிர்ஷ்டத்தின் வண்டி எம் வீட்டு வாசல் தேடி வந்து மூட்டை மூட்டையாக இறக்கித் தள்ளவுமான தொழுகை.

தோட்டத்தின் வேலியெல்லை முழுக்க நடந்து பலிச்சோற்றை வேலிக்கு அப்பால் வீச வேண்டும். மாந்திரீகர் ஓட்டை ஏந்திக் கொண்டு முன்னால் நடந்து வீசிச் செல்ல கயிறு பிடித்துக் கொண்டு பின்னொருவர். அந்தச் சோறு கீழே விழாதென ஐதீக நம்பகம். இருளின் சிறு அலகு காக்கையென மாறி அந்தரத்தில் லபக்கி விடுமோ?

மாந்திரீகர் வயசில் இருந்த காலத்தில் ஆவேசக் கூக்குரல்களையும் எழும்புதல் குதித்தல்களையும் நிகழ்த்தியிருப்பார் என்பதற்குச் சில தடயங்கள் இன்னும் கிடைக்கின்றன. பழைய ஆவேசத்தின் முன் கயிறு கட்டி இழுத்தல் தேவையாயிருந்திருக்கின்றது. இப்போது இடுப்புக் கயிறு அவசியமற்றது என்றபோதும் அது இன்றி ஓரணுவும் அசையாது அவருக்கு. ஒற்றைப் பந்தம் மற்றும் டார்ச் ஒளியில் இந்த ஊர்வலம் நடக்கிறது. ஒரு தட்டில் எலுமிச்சத் துண்டுகளை வைத்துக் கொண்டு வேலி தொண்ணூறு பாகைக்கு திசை மாறுகிற சந்திகளில் வீசி வருகிறேன் நான். சிட்ரிக் அமிலத்தின் மூலம் பிசாசுகளை வெல்லும் வேலை எனக்கு. தீப்பந்தம் மற்றும் பேட்டரி லைட்டோடு நாங்கள் தோட்டம் சுற்றி வந்ததில் மாட்டுக்கிடாரிக் கன்றுகள் இரண்டு 'சரித்திர காலத்தையும் நவீன காலத்தையும்' ஒருசேரக் கண்ணுற்ற அதிர்ச்சியில் ஓடிப் போய் விட்டன. சேனாபதிபாளையம் பக்கம் போய் அவற்றைக் காலையில் கொணர்ந்தேன்.

சடங்குகள் ஒருவழியாக முடிந்தன. மாந்திரீகன் தொகையையும், கறியையும் பெற்றுக் கொண்டு திரும்பிப் பாராது சென்று விட்டார். நிஜமாகவே திரும்பிப் பார்க்கக்கூடாதாம்.

வழக்கம் போல எங்கள் பண்ணையம் நடந்து கொண்டிருக்கிறது. இடுப்பணைந்த சிறு குட்டியின் வெப்பம் இன்னும் உண்டு என் உள்ளங்கையில்.



படத்தில் ஜம்மென்று உடையணிந்து கொண்டிருக்கிற மனிதக் குரங்கின் பெயர் மொமொ. ஜப்பானில் உள்ள நாசு குரங்கு பார்க் மிருகக் காட்சிச் சாலையில் இருக்கிறது. வயது இரண்டு. மிருகக் காட்சிச் சாலை நிர்வாகம், பயிற்சியளித்து, மிருகக் காட்சிச் சாலையின் உணவகத்திற்கு அனுப்பி விட்டார்கள் மொமொவை. உணவகத்தில் மொமொவைக் காண்பதற்கே கூட்டம் நெரிகிறது!

— சி. எம்.

ஒரு தொப்பிக்கு அடியில்...

உண்மையில், அவரது தொப்பியைப் பற்றி விசாரிப்பதற்காகத்தான் சென்றோம். ஆனால், அந்தத் 'தொப்பிக்குக் கீழே இருக்கிற சமாசாரம்' செய்திருக்கிற காரியங்கள் தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்குமே பலவிதத்தில் முன்மாதிரியாக அமையத்தக்கனவாக இருப்பதைக் கண்டு வியக்காமலிருக்க முடியாது, யாராலும்.

பத்து வருடங்களுக்கு முன் தொடங்கப் பட்ட நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் மூன்றாவது துணைவேந்தராகப் பொறுப்பேற்றிருப்பவர் க.ப. அறவாணன். (தினமணி மூலம் இவரது கல்விச் சிந்தனைகளும் தொப்பியும் வெகு பிரபலம்.)

சென்னை லயோலா கல்லூரியிலும் புதுவை பல்கலைக்கழகத்திலும் முன்னதாகத் தமிழ் போதித்திருக்கும் இவர் ஒரு பிரெஞ்சு அறிஞரும் கூட. ஆனால் இவரது ஆய்வு சங்கத் தமிழ் இலக்கியத்திலோ, சமகாலத் தமிழ் இலக்கியத்திலோ அல்ல. 'ஆன்த்ரபாலஜி' எனப்படும் மானுடவியலில்! பண்டைய ஆப்பிரிக்கர்களுக்கும் தென்னிந்தியர்களுக்குமுள்ள பண்பாட்டு ஒற்றுமை பற்றி ஆராய்ந்திருக்கிறார்.

''எத்தனை ஆர்வமூட்டும் ஆய்வு தெரியுமா அது? நம் மக்களிடையே உள்ள முருகர் வழிபாடு, பாம்பு வழிபாடு, அம்மன் வழிபாடு, மர வழிபாடு, முன்னோர் வழிபாடு போன்ற வழக்கங்களெல்லாம் ஆதி ஆப்பிரிக்கக் கலாசாரத்திலும் இருந்து வந்திருக்கின்றன.



இங்கே மன நிலை சரியில்லாதவர்களைச் சில கோயில்களுக்கு அழைத்துச் சென்று கட்டிப் போடுவதைப் பார்க்கிறோமல்லவா? இந்த வழக்கம் அங்கேயும் உண்டு.

''மாமல்லபுரம் கடல் கோயிலின் சுற்றுச் சுவரில் வரிசையாக நந்திகள் இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். கெய்ரோவில் ஒரு பழங்குடி இனத்தாரின் கோயில் மதில்சுவர்களில் அதேபோல, வரிசையாகச் செம்மறி ஆடுகளின் சிலைகளைக் கண்டபோது சிலிர்த்துவிட்டது எனக்கு...''

நாம் வணங்கும் முருகன் அங்கே 'முருங்கூ' என்ற கடவுளாக வணங்கப்படு



• மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்





"ஆ! அது எத்தனை சுகமான அனுபவம். சிறுகதைகள் எழுதிக் கொண்டிருந்தபோது மிதந்து கொண்டல்லவா இருந்தேன்! சுமார் முப்பது சிறுகதைகள் எழுதியிருப்பேன்!" என்பவரின் முதல் கதை பிரசுரமானது கல்கியில் தானாம்!

வதையும் நமது பாண்டியாட்டம் அங்கும் பாண்டு என ஆதிவாசிகளால் ஆடப்படுவதையும் குறிப்பிட்டார் அறவாணன். ஒரு கிராமத்தில் இந்தப் 'பாண்டு' ஆட்டத்தில் ஜெயிப்பவரைத் தான் ஊராட்சித் தலைவராக நியமிக்கிறார்களாம்.

"மானுடவியல் ஆய்வு மிகவும் சுவாரசியமானதுதான். ஆனால், இதில் முழுமூச்சாக இறங்கியதில் நான் என் பிரத்யேகக் கனவுலகத்தை இழக்க வேண்டியதாகி விட்டது!" என்று சிரித்துக்கொண்டே சொல்லும் அறவாணன், தான் ஒரு சிறுகதை எழுத்தாளர் என்பதைச் சற்றே தாழ்ந்த தொனியில் வெளிப்படுத்துகிறார்.

அறவாணன் ஒரு முழு நேர எழுத்தாளராக ஆகிவிடாமல் போனது மாணவர் சமுதாயத்துக்குப் பெரிய சௌகர்யமாகி விட்டது. நெல்லை மனோன்மணீயம் சுந்தரனாரில் அவர் பொறுப்பேற்றதும் செய்திருக்கிற சில காரியங்கள் அப்படிப்பட்டவை.

"முதல் முதலில் என் கவனம் பி.எச்டி ஆய்வு செய்பவர்களின் மீதுதான் விழுந்தது. மூன்றாண்டுப் படிப்பு அதுவென்றால், ஆய்வை ஒழுங்காக முடித்து, தேர்வாளரின் ஒப்பம் பெற்றபிறகும் மாணவர்கள் தம் பட்டத்தைப் பெற மேலும் சில ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. காரணமே இல்லாத தாமதம் அது. சமயத்தில் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் கூட இழுத்தடிப்பார்கள். சிண்டிகேட்டின் அனுமதி, துணை வேந்தரின் கையொப்பம் என சடங்குகள் முடிவற்று நீண்டுகொண்டே போகும்.

"நானும் டாக்டர் பட்டத்தைப் பெற்று, அந்த நீண்ட வருடங்களைச் சகித்துக் கொண்டு கடந்து வந்தவன்தானே? இங்கு வந்ததும் முதலில், பி.எச்டி துறையை என் அறைக்கு எதிரே, கண் பார்வையில் மாற்றியமைத்தேன். தேர்வாளர் கையெழுத்து



தெரியுமா?

'மாப்பிள்ளை பஜார்' என்கிற தொலைக்காட்சித் தொடரில் நடிகர் லிவிங்ஸ்டன் சொந்தக் குரலில் முதல்முறையாக ஒரு பாடல் பாடியிருக்கிறார். ஆனால், நடிக்கவில்லை!

இட்டு விட்டால் போதும். உடனே பட்டச் சான்றிதழ் நேராக என்னிடம் வந்து விடும். அரைக்கணம் கூடத் தாமதிக்காமல் கையெழுத்திட்டு அனுப்பி விடுவேன்."

நாம் பார்த்துக் கொண்டிருந்தபோதே ஒரு மாணவரின் சான்றிதழ் வந்தது. அட்டன்டன்ஸ் ரிஜிஸ்தரில் கையெழுத்திடுவதைப் போல அதில் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கிறார் அறவாணன்!

"என்ன, 'முதல்வன்' படம் போலிருக்கிறதா?" என்று கேட்டு விட்டுச் சிரிக்கிறார். "அந்தப் படத்தில் காட்டப்பட்ட இத்தகைய விஷயங்கள் அமானுஷ்யமானவை என்று நான் நினைக்கவில்லை. அடிப்படை மனோபாவத்தில் சில மாற்றங்கள் நிகழ்ந்தால் போதும். நிர்வாகம் சீராகிவிடும்" என்கிறார்.

'முயன்று வரலாற்றைப் படிக்க வேண்டும். முனைந்து வரலாற்றைப் படைக்க வேண்டும். முடிந்தால் வரலாறாகவே வாழ வேண்டும்' என்று தன் மேசையில் எழுதி வைத்திருக்கும் அறவாணன், கல்வித் துறையில் சமீபத்தில் ஒரு புதிய வரலாறு படைத்திருப்பது ஏனோ பரவலாகாமலிருக்கிறது.

ம.சு. பல்கலையில் சமீபத்தில் சமுதாயக் கல்வி என்கிற புதிய திட்டத்தைக் கொண்டு வந்து, பல்கலைக் கழகத்துக்குட்பட்ட பல புதிய சமுதாயக் கல்லூரிகளைத் தொடங்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

அதென்ன சமுதாயக் கல்வி?

"நம் சமூகத்தில் உயர்கல்வி என்பதை 'mass education' ஆக்கி விட்டார்கள். எல்லாரும் பி.எஸ்ஸி., எல்லாரும் இன்ஜினியரிங். எல்லாரும் மருத்துவம். கல்லூரியில் சேருவது ஒரு ரேஸ் என்றால், பிறகு வேலை வாய்ப்புக்கு அலைவது மற்றொரு ரேஸ். இது தவறான அணுகுமுறை என்று நினைக்கிறேன்.

"சமுதாயக் கல்லூரிகள் என்பவை, வேலை வாய்ப்பை - அதுவும் சுய வேலை வாய்ப்பை மட்டும் பிரதானமான நோக்கமாகக் கொண்டு, பெரும்பாலும் கிராமப் புறங்களில் அமைக்கப்படும்.

"அந்தந்தப் பிரதேசத்தில் என்ன தொழில் செய்து பிழைக்க வழியுண்டோ, அந்தத் தொழிலே இக்கல்லூரியில் பாடமாக இருக்கும். இங்கு பயின்று முடித்த மாணவன் ஒருவன் கூட வேலையில்லை என்று சுற்றக் கூடாது என்பதுதான் இதன் முதல் நோக்கம்" என்கிறார் அறவாணன்.

எந்தெந்த கோர்ஸ்களை எங்கு நடத்தலாம் என்று ஆராயவும் வேலை வாய்ப்புகளைப் பற்றி மதிப்பிடவும் ஒரு குழு அமைத்திருக்கிறார்கள்.

இந்தக் குழு ஆராய்ந்து சிபாரிசு செய்யும் இடத்தில் குறிப்பிட்ட கல்விச் சாலைகளை அமைக்கத் தனியாருக்கு அழைப்பு விடுக்கிறது பல்கலைக் கழகம். பாடத் திட்டம், தேர்வு உள்ளிட்ட விஷயங்களைப் பல்கலைக் கழகமே வகுத்துக் கொடுத்துவிட, குறுகிய கால டிப்ளோமா வகுப்புகளை இந்தச் சமுதாயக் கல்லூரிகள் நடத்துகின்றன.

"இந்த வருடம் 16 கல்லூரிகள் அடுத்தடுத்துத் தொடங்கப்பட்டு விட்டதே இத்திட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்தி விட்டது. அடுத்தக் கல்வியாண்டில் மேலும் 27 கல்லூரிகள் தொடங்குவதற்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன."

அறவாணன் இப்போது செய்து கொண்டிருக்கும் எழுத்துப் பணி, 'தமிழர் சமுதாய வரலாறு' எழுதுவது.

"சங்க காலம் தொடங்கி பல்லவர் வரை எழுதியிருக்கிறேன். மொத்தம் எட்டு தொகுதிகள் வரக்கூடிய இம் மாபெரும் பணியைச் செய்து முடிப்பதுதான் என் வாழ்நாள் லட்சியம்!" என்கிறார்.

எல்லாம் சரி, அந்தத் தொப்பி?...

சிரிக்கிறார்.

"சகாரா பாலைவனத்தை ஒட்டிய பகுதிகளில் ஆய்வுக்காகச் சென்றிருந்தபோது வெயிலிலிருந்து தப்பிக்க தொப்பி அணிய ஆரம்பித்தேன். இயற்கை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த வழுக்கையை மறைக்கவும் அது பயன்படுவதால், சரி, இருந்து விட்டுப் போகட்டும் என்று நினைத்தேன்.

"81ல் நாடு திரும்பியபோது தொப்பியுடன்தான் இறங்கினேன். நல்லவேளை, லயோலா மாணவர்கள் என்னைக் கிண்டல் செய்யாமல், பட்டப் பெயர் வைக்காமல் விட்டதனால் தொப்பி தொடர்கிறது!" என்பவர், மொத்தம் 52 தொப்பிகள் வைத்திருக்கிறாராம்!

— ஔரங்கசீப்

படங்கள் : வெங்கடேஷ்



பத்தொன்பதாம் அத்தியாயம்

சிரிப்பும் நெருப்பும்

பூங்குழலி தன்னைப் படகுடன் சேர்த்துக் கட்டியிருந்த கட்டுக்களை அவிழ்க்க அவசர அவசரமாக முயன்றாள். அது அவ்வளவு இலகுவான காரியமாக இல்லை. சண்டாளப் பாவிகள்! கயிற்றைத் தாறு மாறாக விட்டு முடிச்சுக்கு மேல் முடிச்சாகப் போட்டிருந்தார்கள். பூங்குழலியின் சிறிய கத்தி படகின் அடியில் கிடந்தது. ஒரு கரத்துக்காவது விடுதலை கிடைத்தால் கத்தியை எடுத்துக் கட்டுக்களை அறுத்து எறியலாம். ஆனால் பாவிகள் மணிக்கட்டுகளைச் சேர்த்துத் தான் பலமாகப் பின்புறத்தில் கட்டியிருந்தார்கள். பூங்குழலி மிகவும் கஷ்டப்பட்டுக் குனிந்து பற்களினால் கத்தியின் பிடியைக் கவ்வி எடுத்துக்கொண்டாள். பற்களினால் கௌவிய வண்ணமே கத்தியை ஓரிடத்தில் அறுத்தாள். கைகளின் கட்டுச் சிறிது தளர்ந்தது. ஒரு கையை மிகவும் பிரயாசையின் பேரில் கட்டிலிருந்து விடுதலை செய்து கொண்டாள். பிறகு கயிறுகளை அறுப்பது சிறிது எளிதாயிற்று.

கட்டுக்களிலிருந்து முழுவதும் விடுவித்துக் கொள்வதற்கு ஏறக்குறைய ஒரு நாழிகை நேரம் ஆகிவிட்டது.

இந்தச் சமயத்தில் ஓடைக்கரை மீது காலடிச் சத்தம் கேட்டது. பிறகு ஒரு நிழல் தெரிந்தது. தன்னைக் கட்டிப் போட்டவர்களில் ஒருவன்தான் திரும்பி வருகிறான் போலும்! அல்லது தான் கட்டுக்களை அவிழ்த்துக்கொண்டு தப்பி வந்து விடாமல் பார்த்துக் கொள்வதற்

காக ஒருவனைப் பின்னால் விட்டு வைத்துச் சென்றிருக்கிறார்கள் போலும்! அவன் தன் கண் முன்னால் தெரிந்ததும் கையிலிருந்த கத்தியை அவன் மீது எறிந்து கொன்று விடுவது என்று பூங்குழலி தீர்மானித்துக்கொண்டு அதற்கு ஆயத்தமாகக் கத்தியைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் எத்தகைய ஏமாற்றம்!

"பூங்குழலி! பூங்குழலி!" என்று சேந்தன் அமுதனுடைய குரல் கேட்டது.

அடுத்த வினாடி அமுதனுடைய பயப் பிராந்தியுற்ற முகம் ஓடைக் கரையின் மேலிருந்து எட்டிப் பார்த்தது.

பூங்குழலி கத்தியை இடுப்பில் செருகிக்கொண்டாள்.

அமுதனும் அவளைப் பார்த்து விட்டான். "பூங்குழலி! நீ உயிரோடு இருக்கிறாயா?" என்று சொல்லிக்கொண்டே பாய்ந்து ஓடி வந்தான்.

"நான் உயிரோடிருப்பது உனக்குக் கஷ்டமாயிருக்கிறதாக்கும்! வேண்டுமானால் உன் கையாலேயே கொன்று விட்டுப் போய் விடு! ஆனால் அவ்வளவு தைரியம் உனக்கு எங்கிருந்து வரப் போகிறது?" என்றாள் பூங்குழலி.

"சிவ சிவா! எவ்வளவு கொடூரமான வார்த்தைகளைக் கூறுகிறாய்? நான் எதற்காக உன்னைக் கொல்லப் போகிறேன்? நீதான் உன் வார்த்தைகளினால் என்னைக் கொல்லுகிறாய்!" என்றான் அமுதன்.

"பின்னே, சற்று முன்னாலேயே ஏன் வந்திருக்கக் கூடாது? கட்டுக்களை நானாக அறுத்து விடுவித்துக் கொள்ளுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டுப் போனேன், தெரியுமா?" என்று சொல்லிக்கொண்டே பூங்குழலி எழுந்து நிற்க முயன்றாள். கால்கள் கயிறுகளில் தாறுமாறாகச் சிக்கிக் கொண்டிருந்தபடியால் தடுமாறி விழப் பார்த்தாள்.

அமுதன் அலறிப் புடைத்துக் கொண்டு அவளைப் பிடித்து விழாமல் தடுத்தான்.

"ஐயையோ! இப்படியா பாவிகள் உன்னைக் கட்டிப் போட்டு விட்டுப் போனார்கள்? உடம்பெல்லாம் தடித்துப் போயிருக்கிறதே?" என்றான்.

"இப்போது இவ்வளவு கரிசனப் படுகிறாயே? சற்று முன்னாலேயே வருவதற்கு என்ன?"

"மறுபடியும் அப்படியே கேட்கிறாயே? உனக்கு இப்பேர்ப்பட்ட ஆபத்து வந்திருக்கிறது என்று நான் என்ன கண்டேன்! நீ என்னைப் 'போ' 'போ' என்று விரட்டினாய். நான் போய்க்கொண்டிருந்தேன்..."

"பின், எதற்காகத் திரும்பி வந்தாய்? ஒருவேளை நான் செத்துப் போயிருந்தால் என் உடலைத் தகனம் செய்து விட்டுப் போகலாம் என்பதற்காகவா?"

"சிவபெருமான் தொண்டையில் விஷத்தை வைத்துக்கொண்டார்; நீ நாக்கிலேயே வைத்துக்கொண்டிருக்கிறாய். உனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்கலாம் என்று உன் அண்ணி சொன்னதைக் கேட்டு ஓடோடியும் வந்தேன். அதற்கு நல்ல பரிசு கிடைத்தது!"

இதற்குள் படகிலிருந்து ஓடைக் கரையில் இறங்கியிருந்தாள் பூங்குழலி.

"இந்தக் கத்தியை உன் மீது எறியலாம் என்றிருந்தேன். நீ தப்பித்தாய். இதே கத்தியினால் என் அண்ணியை முதலில் குத்திக் கொன்று விட்டுத்தான் மறு காரியம் பார்க்கப் போகிறேன். அந்தச் சண்டாளி எங்கே இருக்கிறாள்?"

"என்னை விட்டுவிட்டு உன் அண்ணியின் பேரில் எதற்காகப் பாய்கிறாய்? அவள் பேரில் எதற்காக இத்தனை கோபம்? உன்னைப் பற்றி எனக்கு அவள் சொன்னது குற்றமா...?"

"அவள்தான் என் அத்தையைக் காட்டிக் கொடுத்தவள். புதர் மறைவில் அவள் யாருடனோ இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்ததை நீ கூடத்தான்

அமரர் கல்கி

பார்த்தாயே?'' என்றாள் பூங்குழலி.

"நீ நினைப்பது தவறு! உன் அண்ணி, யாருடன் என்ன இரகசியம் பேசிக் கொண்டிருந்தாளோ, என்னமோ? உன் அத்தையை அவள் காட்டிக் கொடுக்க வில்லை என்பது நிச்சயம். உன் அத்தையைப் பலாத்கார மாகப் பிடித்துக்கொண்டு



போனவர்கள் உன் அண்ணியையும் மரத்தோடு சேர்த்துக் கட்டி விட்டுப் போய் விட்டார்கள். அவளுடைய தலையில் அடித்துக் காயப்படுத்தி விட்டும் போய் விட்டார்கள்..."

"இது என்ன வேடிக்கை? நம்புவதற்கு முடியவில்லையே? உன்னை அவள் ஏமாற்றி விட்டிருக்கிறாள்! நல்லது; நீ ஏன் திரும்பி வந்தாய், அண்ணியை எவ்விடத்தில் பார்த்தாய், – எல்லாம் விவரமாகச் சொல்லு!" என்று பரபரப்புடன் பூங்குழலி கேட்டாள்.

சேந்தன் அமுதன் அவ்வாறே விவரமாகக் கூறினான். அவன் தஞ்சாவூர் செல்லும் சாலையில் போய்க்கொண்டிருந்தான். பூங்குழலியைப் பிரிந்து போக மனமின்றித் தயக்கத்துடனேதான் போய்க்கொண்டிருந்தான். அப்போது பக்கத்துக் காட்டிலிருந்து ஏதோ கூச்சலும் அலறும் குரலும் கேட்டன. பலர் விரைந்து நடந்து வரும் சத்தமும் கேட்டது. சேந்தன் அமுதன் சாலை ஓரத்து மரம் ஒன்றின் பின்னால் மறைந்துகொண்டான். கையில் வேல் பிடித்த வீரர்கள் ஏழெட்டுப் பேர் காட்டு வழியாகத் திடுதிடுவென்று நடந்து வந்து இராஜ பாட்டையில் பிரவேசித்தார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒரு பெண் பிள்ளை இருப்பது போலத் தோன்றியது. மனிதர்களிடையில் சற்று இடைவெளி தெரிந்தபோது மத்தியில் இருந்தவள் பூங்குழலியின் அத்தை மாதிரி தோன்றினாள். அவள் அத்தையாக இருக்க முடியாது. அது தன்னுடைய மனப்பிரமை என்று சேந்தன் அமுதன் எண்ணிக்கொண்டான்.


அந்த வீரர் கூட்டம் சென்ற பிறகும் காட்டிற்குள்ளேயிருந்து ஒரு பெண் பிள்ளையின் கூக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது. சேந்தன் அமுதன் முதலில், 'நமக்கு என்னத்திற்கு வம்பு? நம் வழியே நாம் போய் விடலாமா?' என்று நினைத்தான். ஆனாலும் மனம் கேட்கவில்லை. யார் அலறுவது என்று பார்த்து, தன்னால் ஏதேனும் உதவி செய்யக் கூடுமானால் செய்யலாம் என்று எண்ணிக் கூக்குரல் வந்த திசையை நோக்கிப் போனான். அங்கே ராக்கம்மாள் மரத்தில் கட்டப்பட்டிருந்ததைக் கண்டான். அவள் தலையிலிருந்து இரத்தம் வழிந்து முகமெல்லாம் ஒரே கோரமாயிருந்தது. அமுதனுக்கு அருகில் நெருங்கவே பயமாயிருந்தது. மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு சென்று கட்டுக்களை அவிழ்த்து விட்டான். அவிழ்க்கும்போதே 'இந்த அக்கிரமம் யார் செய்தது? எதற்காகச் செய்தார்கள்? சற்று முன் சாலையில் வந்து ஏறின மனிதர்கள் யார்? அவர்கள் மத்தியில் ஒரு பெண் பிள்ளையும் போனது போலிருந்ததே? அவள் யார்?' என்றெல்லாம் கேட்டான். 'ஆம், தம்பி! அவர்கள் உன் பெரியம்மாவைக் கட்டி இழுத்துக் கொண்டு போகிறார்கள். அதைத் தடுப்பதற்கு நான் முயன்றேன். அதற்காகத்தான் என்னை இப்படி அடித்துக் கட்டி விட்டுப் போனார்கள். உன் மாமன் மகளும் பெரியம்மாவும் படகிலேறிப் போய்க்கொண்டிருந்தார்கள். படகிலிருந்துதான் பெரியம்மாவைக் கட்டி இழுத்து வந்தார்கள். பூங்குழலியின் கதி என்ன ஆயிற்றோ தெரியவில்லை. ஓடிப் போய்ப் பார்!" என்றாள். சேந்தன் அமுதன் திடுக்கிட்டுப் பூங்குழலியைத் தேடிக்கொண்டு புறப்பட்டான். அச்சமயம்-ராக்கம்மாள், 'கொஞ்சம் பொறு, தம்பி! பூங்குழலியும் அந்த ஊமைப் பிசாசும் படகில் ஏறி எங்கே புறப்பட்டார்கள்? உனக்குத் தெரியுமா? உன்னை ஏன் விட்டு விட்டுப் போனார்கள்? நீ எங்கே தனியாகக் கிளம்பினாய்?' என்று கேட்டாள். இப்படி அவள் கேட்டது, முக்கியமாக 'ஊமைப் பிசாசு' என்று சொன்னது, சேந்தன் அமுதனுக்குப் பிடிக்கவில்லை. 'எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன்' என்று கூறிவிட்டு, கால்வாயை நோக்கி ஓடி வந்தான். பூங்குழலியையும் அந்த மனிதர்கள் அடித்துப் போட்டிருப்பார்களோ, ஒருவேளை கொன்றே இருப்பார்களோ என்ற பதைபதைப்புடனே வந்தான். பூங்குழலி உயிரோடிருப்பதையும் இரத்தக் காயமில்லாமலிருப்பதையும் பார்த்ததும்



அவனுக்கு ஆறுதல் உண்டா யிற்று....

இந்த விவரங்களைக் கூறி விட்டு "பூங்குழலி! இப்போது என்ன சொல்லுகிறாய்? உன் அண்ணியின் பேரில் நீ கோபித்துக்கொண்டது தவறு தான் அல்லவா?" என்று சேந்தன் அமுதன் கேட்டான்.

"நீ சொல்லு



வதைக் கேட்டால் அப்படித்தான் தோன்றுகிறது. அவளை எந்த இடத்தில் விட்டு விட்டு வந்தாய்? அங்கே போய்ப் பார்க்கலாம், வா!" என்றாள் பூங்குழலி.

"அவள் அங்கேயே இருப்பாள் என்பது என்ன நிச்சயம்?"

"அங்கே இல்லாவிட்டால் அக்கம் பக்கத்தில் இருப்பாள். இல்லாவிடில் நம்மைத் தேடிக்கொண்டு வருவாள். அமுதா! நானும் என் அத்தையும் படகில் ஏறி எங்கே புறப்பட்டோம் என்று அண்ணி கேட்டாள் அல்லவா?"

"ஆம், கேட்டாள்."

"நீ அதற்கு மறுமொழி சொல்லவில்லையே? நிச்சயந்தானே?"

"நிச்சயந்தான். 'ஊமைப் பிசாசு' என்று அவள் சொன்னதும் எனக்கு உண்டான அருவருப்பினால் மறுமொழி சொல்லாமலே வந்து விட்டேன்."

"இனிமேல் நல்ல வார்த்தையாகக் கேட்டாலும் சொல்லாதே! நாங்கள் எங்கே புறப்பட்டோம் என்பதை அவள் ஏன் தெரிந்து கொள்ள விரும்புகிறாள்? அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் அல்லவா? அமுதா! அத்தையைப் பிடித்துக்கொண்டு போனவர்களுக்கும் அண்ணிக்கும் தொடர்பு இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அண்ணியின் மூலமாக அவர்கள் உளவறிந்துகொண்டு, தங்கள் காரியம் முடிந்ததும் அவளை அடித்துக் கட்டிப் போட்டு விட்டுப் போயிருக்கலாம். அப்படியில்லா விட்டாலும், அண்ணி வேறு ஏதோ துர்நோக்கத்துடனேதான் எங்களைத் தொடர்ந்து வந்திருக்க வேண்டும். ஆகையால் அவளுடன் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்! முழுதும் அவளை நம்பி மோசம் போய் விடாதே...!"

"பூங்குழலி உன் அண்ணியின் சந்நிதானத்தில் உன் அண்ணன் ஊமையாக இருந்து விடுவான் என்று சொல்லியிருக்கிறாய் அல்லவா? அதுபோல் நானும் இருந்து விடுகிறேன். பேச வேண்டியதை நீயே பேசிக்கொள்...!"

இதைக் கேட்ட பூங்குழலி சிரித்தாள்.

"உன் சிரிப்பு என் செவிகளுக்கு இன்னமுதமாயிருக்கிறது. திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகத்தைப் போல் இனிக்கிறது" என்றான் அமுதன்.

"ஏதோ தவறிச் சிரித்து விட்டேன். அதைக் கேட்டு ஏமாந்து விடாதே! என் உள்ளத்தில் அனல் பொங்குகிறது. நெஞ்சில் நெருப்புப் பற்றி எரிகிறது!"

"நெஞ்சின் தாபத்தைத் தணிப்பதற்கு இறைவனுடைய கருணை வெள்ளத்தைக் காட்டிலும் சிறந்த உபாயம் வேறு இல்லை!" என்றான் சேந்தன் அமுதன்.

இருபதாம் அத்தியாயம்

மீண்டும் வைத்தியர் மகன்

சிறிது நேரம் பூங்குழலியும் அவளுடைய அத்தை மகனும் காட்டு வழியில் மௌனமாக நடந்து சென்றார்கள்.

பூங்குழலி ஒரு நெடு மூச்சு விட்டு, "அமுதா! உனக்கும் எனக்கும் ஏதோ ஜன்மாந்தரத் தொடர்பு இருக்குமென்று தோன்றுகிறது" என்றாள்.

"பூர்வ ஜன்மங்களைப் பற்றி இப்போது யாருக்கு என்ன கவலை? இந்த ஜன்மத்தைப் பற்றி ஏதாவது நல்ல செய்தி இருந்தால் சொல்லு!" என்றான் சேந்தன் அமுதன்.

"முந்தைப் பிறவிகளின் தொந்தம் இந்தப் பிறவியிலும் தொடரும் என்று சொல்லுகிறார்கள் அல்லவா? அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். இன்று உச்சி வேளையில் 'உன்னைப் பிரிந்தபோது, இனி உன்னைப் பார்க்கப் போவதே இல்லை என்று எண்ணினேன். இரண்டு நாழிகைக்குள்ளாக உன்னை மறுபடி பார்க்கும்படி நேர்ந்தது..."

"அதற்காக வருத்தப்பட வேண்டாம். இந்தக் காட்டு வழியைக் கடந்து தஞ்சாவூர் சாலையை அடைந்ததும் நான் என் வழியே செல்வேன். நீ உன் இஷ்டம் போல் போகலாம்..."

"உன்னை நான் அப்படித் தனியே விட்டு விடப் போவதில்லை. அண்ணியைக் கண்டு பேசிய பிறகு உன்னுடன் நான் தஞ்சாவூருக்கு வரப் போகிறேன். என் அத்தைக்கு நேர்ந்த துன்பத்துக்குப் பரிகாரம் தேடப் போகிறேன். சோழ சக்கரவர்த்தியின் சந்நிதானத்தில் சென்று முறையிடப் போகிறேன்..."

"பூங்குழலி! சக்கரவர்த்தியின் சந்நிதானத்தை அடைவது அவ்வளவு எளிது என்று கருதுகிறாயா? நம் போன்றவர்கள் தஞ்சாவூர்க் கோட்டைக்குள்ளேயே பிரவேசிக்க முடியாதே?"

"ஏன் முடியாது? கோட்டைக் கதவு திறக்காவிட்டால் கதவை உடைத்துத் திறப்பேன். அது முடியாவிட்டால் மதில் சுவரில் ஏறிக் குதித்துப் போவேன்..."

"அரண்மனை வாசலில் காவலிருக்கும் சேவகர்களை என்ன செய்வாய்?"

"நான் போடுகிற கூச்சலைக் கேட்டு அவர்கள் மிரண்டு போய் என்னைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போவார்கள்..."

"சின்னப் பழுவேட்டரையரை அப்படியெல்லாம் மிரட்டி விட முடியாது. அவருடைய அநுமதியில்லாமல் யமன் கூடச் சக்கரவர்த்தியை அணுக முடியாது என்று தஞ்சாவூர்ப் பக்கங்களில் ஜனங்கள் பேசிக் கொள்வது வழக்கம். அதனாலேதான் சக்கரவர்த்தி இன்னும் உயிரோடிருக்கிறார் என்று சிலர் சொல்லுவதையும் கேட்டிருக்கிறேன்..."

"சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாவிட்டால், பழுவேட்டரையர்களையே பார்த்து இந்த அக்கிரமத்துக்குப் பரிகாரம் உண்டா, இல்லையா என்று கேட்பேன்! அவர்கள் தக்க பரிகாரம் செய்யாவிட்டால், முதன்மந்திரி பிரம்மராயரிடம் போவேன். அதிலும் பயனில்லா விட்டால், பழையாறையிலுள்ள ராணிகளிடம் போய் முறையிடுவேன். என் அத்தையின் கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ளும் வரையில் ஓரிடத்தில் தங்க மாட்டேன். அவளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் கிடைக்கும் வரையில் இரவு பகல் தூங்க மாட்டேன். அண்ணி என் அத்தையை 'ஊமைப் பிசாசு' என்று சொன்னான் அல்லவா? நானும் ஒரு பிசாசாக மாறி நாடு நகரமெல்லாம் சுற்றி அலைவேன். 'நீதி!' 'நீதி!' என்று அலறிக்கொண்டு அலைந்து திரிவேன். அமுதா! நீயும் என்னோடு வருவாயா...?"

"நிச்சயமாய் வருவேன். பூங்குழலி! நீ விரும்பினால் வருவேன். ஆனால் ஏன் நீ உன் மனத்தை இப்படியெல்லாம் குழம்ப விடுகிறாய்? எங்கெல்லாமோ வெகு தூரத்துக்குப் போய் விட்டாயே? முதலில், உன் அத்தையைக் கண்டு பிடித்துக் காப்பாற்ற வேண்டியதல்லவா முக்கியமான காரியம்? அவளைப் பிடித்துக்கொண்டு போன துஷ்டர்களிடமிருந்து அவளை விடுதலை செய்ய வேண்டாமா? உன் தந்தை, அண்ணன் முதலியவர்களிடம் சொல்ல வேண்டாமா...?"

"அமுதா! என் அத்தை தெய்வீக சக்தி உள்ளவள். அவளுக்கு யாரும் எந்தவிதமான கெடுதலும் செய்ய முடியாது. தமயந்தி வேடனை எரித்தது போல் கண் பார்வையினாலேயே எரித்து விடுவாள். ஆகையால் அவளைப் பற்றிக்கூட எனக்கு அவ்வளவு கவலையில்லை. ஆனால் இந்தச் சோழ ராஜ்யத்தில் பட்டப் பகலில் இவ்வளவு பெரிய அக்கிரமம் நடக்கிறதே? - இதற்குப் பரிகாரம் தேடுவதே என் முக்கியமான வேலை! பராந்தக சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து இந்த நாட்டில் தர்மராஜ்யம் நடப்பதாகச் சொல்கிறார்கள். மகா சிவ பக்தராகிய கண்டராதித்த மன்னர் அரசு புரிந்த நாட்டில் பசுவும் புலியும் ஒரு துறையில் தண்ணீர் குடித்தது என்று பெருமை பேசிக் கொள்கிறார்கள். சுந்தர சோழரின் அரசாட்சியின் கீழ் சோழ நாட்டில் எந்தச் சிறு பெண்ணும் இரவு பகல் எந்த நேரத்திலும் பயமின்றிப் பிரயாணம் செய்யலாம் என்று பறை யறைந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் புகழ் பெற்ற இராஜ்யத்தில், ஒரு மூதாட்டியை, - காது கேளாத, பேசத் தெரியாத ஒரு பேதை ஸ்திரீயை, - பட்டப் பகலில் துஷ்டர்கள் பிடித்துக்கொண்டு போவதென்றால், அது எப்படிப்பட்ட அக்கிரமம்?

என் அத்தையைப் பற்றிக் கூட எனக்கு அவ்வளவு கவலை இல்லை. இன்றைக்கு என் அத்தைக்கு நேர்ந்தது நாளைக்கு எனக்கு நேரலாம் அல்லவா? இன்னும் இந்த நாட்டிலுள்ள கன்னிப் பெண்கள் பலருக்கும் நேரலாம் அல்லவா?''

சேந்தன் அமுதன் இப்போது குறுக்கிட்டு, "ஆமாம்; அத்தகைய அபாயம் இந்த நாட்டில் இப்போது இருக்கத்தான் இருக்கிறது. சுந்தர சோழர் நோயாளியாகிப் படுத்ததிலிருந்து சோழ நாட்டில் தர்மம் தலைகீழாகி விட்டது. கட்டுக் காவல் அற்றுப் போய்விட்டது. கன்னிப் பெண்களுக்கு அபாயம் எங்கே என்று காத்திருக்கிறது. ஆகையால் கன்னிப் பெண்களெல்லாம் கூடிய சீக்கிரம் கலியாணம் செய்துகொண்டு விடுவதுதான் நல்லது!'' என்றான்.

பூங்குழலி கலகலவென்று சிரித்தாள். "அமுதா! ஒரு கன்னிப் பெண் உன்னைக் கலியாணம் செய்துகொண்டால், அவளை உன்னால் காப்பாற்ற முடியுமா? உனக்குக் கத்தி எடுத்துப் போர் செய்யத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

"மலர் எடுத்து மாலை தொடுக்கவும் பதிகம் பாடிப் பரமனை துதிக்கவுந்தான் நான் கற்றிருக்கிறேன். கத்தி எடுத்து யுத்தம் செய்ய நான் கற்கவில்லை. அதனால் என்ன? துடுப்புப் பிடித்துப் படகு தள்ள நீ எனக்கு கற்றுக் கொடுத்து விடவில்லையா? அதுபோல் வாள் எடுத்துப் போர் செய்யவும் கற்றுக்கொண்டு விடுகிறேன். மதுராந்தகத் தேவர் சிங்காதனம் ஏறி இராஜ்யம் ஆள ஆசைப்படும்போது, நான் கத்திச் சண்டை கற்றுக் கொள்வதுதானா முடியாத காரியம்?'' என்றான் சேந்தன் அமுதன்.

இதற்குள் பூங்குழலியின் அண்ணியைக் கட்டிப் போட்டிருந்த மரத்தடிக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அங்கே அந்த மாதரசியைக் காணவில்லை. அவளுடைய மண்டையில் பட்ட காயத்திலிருந்து தரையில் சிந்தியிருந்த இரத்தத் துளிகளைச் சேந்தன் அமுதன் பூங்குழலிக்குச் சுட்டிக் காட்டினான்.

"நன்றாக அடித்து விட்டிருக்கிறார்கள். அத்தையைப் பிடித்துக்கொண்டு போனவர்களுக்கு அண்ணி உளவு சொல்லவில்லையென்பது நிச்சயமாகிறது. ஆனால் அவள் வேறு யாருக்காக என்ன உளவு பார்த்துக்கொண்டிருந்தாள் என்பதை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும்!'' என்றாள் பூங்குழலி.

"மாமன் மகளே! இதைக் கேள்! இங்கே நடந்திருப்பதெல்லாம் காரணம் தெரியாத மர்மமான காரியங்களாயிருக்கின்றன. இரகசியத்துக்குள் இரகசியமாகவும் சுழலுக்குள் சுழலாகவும் இருக்கின்றன. எல்லாம் இராஜாங்கத்தோடும் இராஜ வம்சத்தாரோடும் சம்பந்தப்பட்ட சிக்கல்களாக இருக்கின்றன. இவற்றைக் குறித்து நீயும் நானும் ஏன் கவலைப்பட வேண்டும்? நம்மை நாமே ஏன் சங்கடத்துக்கு உள்ளாக்கிக் கொள்ள வேண்டும்?''

"அமுதா! எவ்வளவு பெரிய இராஜாங்க விஷயமாயிருந்தால் என்ன? எத்தகைய மர்மமாக இருந்தால்தான் என்ன? என் அத்தை சம்பந்தப்பட்ட காரியத்தில் நான் கவலை எடுத்துப் பாடு படாமலிருக்க முடியுமா? உன் பெரியம்மாவின் கதியைப் பற்றி நீ சிந்திக்காமலிருக்க முடியுமா?

"என் மனத்தில் பட்டதை நான் சொல்கிறேன், பூங்குழலி! நான் பார்த்த ஏழெட்டு மனிதர்களுக்கு நடுவில் ஒரு பெண் பிள்ளையும் சென்றாள் என்று சொன்னேன் அல்லவா? அவள் என் பெரியம்மாவாக இருக்கக் கூடும் என்றும் சொன்னேன் அல்லவா? அவள் நடந்து போன விதத்தைப் பார்த்தால், கட்டாயப்படுத்தி அவளை அழைத்துப் போனதாகத் தோன்றவில்லை. தன் இஷ்டத்துடனே யதேச்சையாகச் சென்றவள் போலவே காணப்பட்டது...''

"இருக்கலாம், அமுதா! அப்படியும் இருக்கலாம். என் அத்தையின் இயல்பே அப்படி! எங்கேதான் அழைத்துப் போகிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக அவளே இஷ்டப்பட்டுப் போயிருக்கலாம். அவளுக்கு விருப்ப



மில்லாவிட்டால், ஆயிரம் பேருக்கு நடுவிலிருந்தும் அவள் தப்பிச் சென்று விடுவாள். கோட்டை கொத்தளங்களும் பாதாளச் சிறைகளும்கூட அவளைப் பத்திரப்படுத்தி வைக்க முடியாது. ஆகையினால்தான் அத்தைக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றி நான் அவ்வளவு கவலைப்படவில்லையென்று சொன்னேன். அத்தைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் தேடுவதே என் முக்கிய நோக்கம். அந்த அநீதி இன்றைக்கு இழைக்கப்பட்டதன்று. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்ட கொடும் அநீதி! அதற்குப் பரிகாரம் கிடைக்கும் வரையில் எனக்கு நிம்மதி இல்லை'' என்றாள் பூங்குழலி.

''கடவுளே! எவ்வளவு அசாத்தியமான காரியத்தில் உன் மனத்தைப் பிரவேசிக்க விட்டிருக்கிறாய்?'' என்று சேந்தன் அமுதன் கூறி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

சற்றுத் தூரத்தில் பேச்சுக் குரல் கேட்டது. ஒரு குரல் பெண் குரலாகத் தோன்றியது. பேசியவர்களைத் தஞ்சாவூர் இராஜபாட்டை சந்திப்பில் அமுதனும் பூங்குழலியும் கண்டார்கள்.

அன்னி ராக்கம்மாளுடன் பேசிக்கொண்டிருந்தவன் பழையாறை வைத்தியர் மகன் என்று அறிந்ததும் பூங்குழலியின் முகத்தில் அருவருப்பின் அறிகுறி காணப்பட்டது.

ராக்கம்மாள் பூங்குழலியைப் பார்த்ததும் "அடி பெண்ணே! பிழைத்து வந்தாயா! உன்னைக் கொன்று போட்டிருப்பார்களோ என்று பயந்து போனேன். இதோ பார்! உன் அத்தையைக் காப்பாற்ற முயன்றதில் என் மண்டையில் எவ்வளவு பெரிய காயம்? வைத்தியர் மகனிடம் காயத்துக்கு மருந்து ஏதேனும் இருக்கிறதா என்று கேட்டுக்கொண்டிருந்தேன்'' என்றாள்.

"கரையர் மகளுக்கு ஏதேனும் காயம் பட்டிருந்தாலும் மருந்து போட்டுக் குணப்படுத்துகிறேன்'' என்றான் வைத்தியர் மகன்.

பூங்குழலி அவனுக்கு மறுமொழி சொல்லாமல், "அன்னி! அத்தையைப் பிடித்துக்கொண்டு போனவர்கள் எந்தப் பக்கம் போனார்கள்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"நான் பார்க்கவில்லை. தஞ்சாவூர்ச் சாலையோடு போனதாக இந்த வைத்தியர் மகன் சொல்லுகிறான்..."

"அன்னி! நானும் அமுதனும் அத்தையைத் தொடர்ந்து போகிறோம். அப்பாவிடம் சொல்லி விடு! வா, அமுதா!" என்று பூங்குழலி அங்கிருந்து உடனே போகத் தொடங்கினாள்.

அப்போது வைத்தியர் மகன் "பூங்குழலி! சற்று நில்! உங்களால் அவர்களைத் தொடர்ந்து போக முடியாது. இங்கிருந்து சற்றுத் தூரத்தில் காத்திருந்த குதிரைகள் மீதேறி அவர்கள் போகிறார்கள். என்னிடம் குதிரை இருக்கிறது. நான் வாயு வேக மனோ வேகமாய்க் குதிரையை விட்டுக்கொண்டு சென்று அவர்கள் போய்ச் சேரும் இடத்தைக் கண்டுபிடித்து உங்களுக்குச் சொல்வேன். அதற்குப் பிரதியாக நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். நீயும் உன் அத்தையும் படகில் ஏறிக்கொண்டு எங்கே போவதற்குக் கிளம்பினீர்கள்? அதை மட்டும் சொல்லிவிடு!" என்றான்.

பூங்குழலி, ''அன்னி! இவருடைய உதவி எங்களுக்குத் தேவையில்லை! நாங்கள் போகிறோம். அப்பாவிடம் மட்டும் சொல்லி விடு!" என்றாள்.

வைத்தியர் மகன் அப்போதும் விடவில்லை. "ஆகா! கரையர் மகளின் கர்வத்தைப் பார்! என் உதவி தேவை இல்லையாம்! பெண்ணே! உனக்கு ஏன் என் பேரில் இத்தனை கோபம்? நீ அரசகுமாரனைக் கலியாணம் செய்து கொள்வதை நானா குறுக்கே நின்று தடுத்தேன்? என்னை வஞ்சித்து ஏமாற்றி விட்டுப் படகில் ஏற்றிக்கொண்டு போனாயே? அந்த வாணர்குலத்து வந்தியத்தேவனல்லவா உன் ஆசைக்குகந்த இராஜகுமாரனை நடுக்கடலில் தள்ளிக் கொன்று விட்டான்? என் பேரில் கோபித்து என்ன பயன்? என்று சொல்லிவிட்டு 'ஹா ஹா ஹா' என்று பேய்ச் சிரிப்புச் சிரித்தான்.

பூங்குழலி கண்களில் தீப்பொறி பறக்க அவனை ஒரு தடவை விழித்துப் பார்த்து விட்டு, அமுதனுடைய கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு சாலையோடு மேலே சென்றாள்.

கொஞ்ச தூரம் போனதும், "அமுதா! நீ கத்தி எடுத்துப் போர் செய்யக் கற்றுக் கொண்டதும் முதலில் இந்தத் தூர்த்தனாகிய வைத்தியர் மகனின் உயிரை வாங்க வேண்டும். உன் கத்திக்கு முதல் பலி இவன்தான்!" என்றாள்.

இரவும் பகலும் வழி நடந்து பூங்குழலியும் சேந்தன் அமுதனும் தஞ்சாவூரை நோக்கிச் சென்றார்கள். ஏழெட்டுக் குதிரை வீரர்கள் ஒரு பெண்மணியை அழைத்துச் சென்றதைக் குறித்து வழியில் விசாரித்துக்கொண்டு போனார்கள். பாதி வழி வரையில் கொஞ்சம் தகவல் கிடைத்தது. அப்புறம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் தஞ்சாவூர் வரையிலும் போய்த் தேடிப் பார்த்து விடுவது என்று போனார்கள்.

சேந்தன் அமுதனுக்கு இந்தப் பிரயாணம் வெகு உற்சாகமாயிருந்தது. பூங்குழலியுடன் பேசிக்கொண்டு சென்றது உற்சாகத்துக்கு ஒரு காரணம்; கத்திப் பயிற்சி கற்றுக்கொண்டே போனது மற்றொரு காரணம். கோடிக்கரைக்கு அருகிலேயே பூங்குழலிக்குத் தெரிந்த ஒரு கொல்லுப் பட்டரையில் அவன் கத்தி வாங்கிக்கொண்டிருந்தான். போகும் போதெல்லாம் அதைச் சுழற்றிக் கொண்டே போனான். சில சமயம் எதிரில் பகைவன் வருவதாகவும் அவனுடன் சண்டை போடுவதாகவும் எண்ணிக் கொண்டு கத்தியைத் தாறுமாறாக வீசினான். அவ்வப்போது பூங்குழலி அவனுக்குக் கத்தியை இப்படிப் பிடித்துக் கொள்ள வேண்டும். இப்படிச் சுழற்ற வேண்டும் என்று கற்பித்துக் கொடுத்துக் கொண்டு வந்தாள்.

இதனால் இரண்டு பேருக்குமே பிரயாணம் உற்சாகமாயிருந்தது.

தஞ்சாவூர்க் கோட்டை கண்ணெதிரே தென்பட்டபோது தான் வந்த காரியத்தை எப்படிச் சாதிப்பது என்ற கவலை பூங்குழலிக்கு ஏற்பட்டது. அவளுடைய கவலையைச் சேந்தன் அமுதனும் சேர்ந்து பகிர்ந்துகொண்டான்.

கோட்டைக்குள் பிரவேசிப்பதே பிரம்மப் பிரயத்தனமாக காரியமாயிற்றே? பூங்குழலி எண்ணியுள்ள காரியங்களையெல்லாம் எப்படி நிறைவேற்றுவது?

வந்தியத்தேவனுடைய அகடவிகட சாமர்த்தியங்களெல்லாம் சேந்தன் அமுதனுக்கு நினைவு வந்தன. அவனுடைய சாமர்த்தியங்களில் பத்தில் ஒரு பங்கு தனக்கு இருக்கக் கூடாதா? அல்லது அந்த வந்தியத்தேவனே இந்தச் சமயம் இங்கே வரக் கூடாதா...!

வந்தியத்தேவனாயிருந்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி நடந்து கொள்வான் என்று சேந்தன் அமுதன் சிந்திக்கத் தொடங்கினான்.

அச்சமயத்தில் சாலையில் மூடு பல்லக்கு ஒன்று வந்தது. சூரியன் மேற்குத் திசையில் மறைந்து இருள் சூழ்ந்து வந்த நேரம். மூடு பல்லக்கின் மேல் திரையில் பனை மரச் சித்திரங்கள் காணப்பட்டன.

"ஆகா! பழுவூர் இளையராணியின் பல்லக்குப் போலல்லவா காண்கிறது? கோட்டைக்கு வெளியிலேயே பழுவூர் இராணியைச் சந்தித்து முத்திரை மோதிர இலச்சினையைப் பெற முடியுமானால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்?" என்று அமுதன் எண்ணினான். இதைப் பூங்குழலியிடமும் வெளியிட்டான். அவளும் அது நல்ல யோசனைதான் என்று சொன்னாள்.

ஆனால் மூடுபல்லக்கின் உள்ளே இருக்கும் ராணியை எப்படிப் பார்ப்பது?

சிவிகைக்கு முன்னும் பின்னும் காவலர்கள் போகிறார்களே? பல்லக்கின் அருகில் போக முயன்றாலே அவர்கள் தடுப்பார்கள் அல்லவா?

"அமுதா! கவலைப்படாதே! தஞ்சாவூர்க் கோட்டை இன்னும் அரைக் காதம் இருக்கிறது. அதற்குள் நமக்கு ஏதேனும் சந்தர்ப்பம் கிட்டாமற் போகாது!" என்றாள் பூங்குழலி.

எதிர்பாராத விதத்தில் அச் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டியது.

(தொடரும்)



பிடித்த யுவதிகளுக்கெல்லாம், தர்லா தலாவின் சமையல் வகுப்புகள் ஒரு அவசியத் தேவையாகி விட்டது. பெண் பார்க்க வருகின்ற வரன்களே அதை ஒரு கண்டிஷனாகப் போடுகிறார்களாம்!

பரேல் ஆபீசில், புதிய உணவு வகை ஒன்றின் தயாரிப்புக்கு கட்டளைகள் பிறப்பித்தவாறே, நம்மிடம் பேசினார் தர்லா.

"1957ல் கிராஜுவேஷன் முடித்த கையோடு தலால் அவர்களைக் கைப்பிடித்த



16.1.2000 கல்கி உணவு ஸ்பெஷலில் 'சமைத்துப் பார்' மீனாட்சியம்மாளைப் பற்றியொரு கட்டுரை வந்திருந்தது. மும்பையில் ஒரு 'வாழும் மீனாட்சியம்மாள்' இருக்கிறார். அவர் பெயர் தர்லா தலால்.

'சமைத்துப் பார்' தென்னக உணவுகளின் பைபிளாக இருந்தது போல், தர்லா தலாலின் புத்தகங்கள் உலகளாவிய 'வெஜ்' பிரியர்களின் கீதை!

லோயர் பரேலில் ஆபீசை வைத்துக் கொண்டு, நவீன உணவு விற்பன்னர்களையும், உணவு வகைகளையும் உற்பத்தி செய்து வரும் தர்லா, அவ்வப்போது புதுப்புது ரெஸிபிகளை அநேக தினசரிகளில் எழுதி வரும் 'ஃபுட் காலம்னிஸ்ட்'டும் கூட!

இன்று திருமண வயதை எட்டிப்

போது, எனக்கு சமையலுக்கு ஸ்பெல்லிங்கே தெரியாது...'' என ஆரம்பித்தார்.

உயர் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவராக இருந்ததால், தொட்டதற்கெல்லாம் வேலை யாட்கள் என்ற சூழலில் தர்லாவுக்குக் கரண்டி பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தமே எழ வில்லை! புகுந்த வீட்டிலும் அதே செல்வச் செழிப்பு! போதாக்குறைக்கு கூட்டுக் குடும் பம் வேறு; இவருக்கு வேலையே இருக்கா தாம்!

"டெஸர்ட் (மேலை நாட்டு உணவின் இறுதியில் பரிமாறப்படும் இனிப்பு) என்றால் என்ன என்று கூடத் தெரியாமல் விழித்திருக் கிறேன்'' என அந்த நாட்களை அசை போடு கிறார்.

பொழுது போவதே பெரும் பிரச்னை யாகிவிட, எல்லா இளம் மணப் பெண்களை யும் போல், கணவனை நச்சரித்திருக்கிறார். சாப்பாட்டுப் பிரியரான தலால், மனை

மெனு மகாராணி!

வியைச் சமைக்கத் தூண்டி, அவர் செய்யும் ஒவ் வொரு ஐட்டத்தையும் ஆஹா ஓஹோ வென்று புகழ்ந்து தள்ளியிருக்கிறார்.

புளகாங்கிதமடைந்த புது மனைவியும், நாளொரு ரெஸிபியும் பொழுதொரு உணவு வகையுமாக (எல்லாம் புத்தகங் களைப் பார்த்துத்தான்...) களத்தில் இறங்கி விட்டார்.

வீட்டிலிருந்த அனைவருமே ஒரு சேரப் பாராட்டத் துவங்கியதால், தர்லா வுக்கு, தன்னாலும் சமைக்க முடியும் என்ற நம்பிக்கை வேர்விடத் தொடங்கி யிருக்கிறது. சிறிது சிறிதாக இந்திய வகைகளையெல்லாம் தேர்ச்சி பெற்ற பின்னர், மனைவிக்கு, சைனீஸ், மெக் ஸிகன், இத்தாலியன், ஃப்ரெஞ்ச் என்று பிற நாட்டு உணவு வகைகளை அறி முகப்படுத்தியிருக்கிறார் தலால். கற்றுக் கொள்ள வேண்டுமென்ற துடிப்பும், சோத னைகள் செய்து பார்ப்பதில் ஆர்வமுமிருந் ததால், தர்லாவால் எல்லாவற்றையும் ஒரு கை பார்த்து விட முடிந்திருக்கிறது.

ஒரு கலையைக் கற்று, அதில் பாண் டித்யமும் அடைந்த பின், அதை மற்றவர் களுக்குக் கற்பிப்பதுதானே அடுத்தப்படி? 1966ல், ஆறே ஆறு மாணவிகளுடன், தன் வீட்டிலேயே சமையல் வகுப்புகள் தொடங்கியிருக்கிறார் தர்லா. அது கொடுத்த வெற்றி, பாட்ச் பாட்சாக குக்கிங் கிளாஸ்"கள் அவர் நடத்த, மாணவிகள் சேர்வதற்கு வெயிட்டிங் லிஸ்டில் காத்துக் கிடக்க வேண்டிய நிலை!

இன்று 16லிருந்து 61 வரையிலான ஆண் – பெண்கள் இவரிடம் சமையல் கலை பயில் வதை நினைத்து சந்தோஷிக் கும் தர்லா, "என் மாண விகள் சிலர், ஹை ஃபை பார்ட்டிகளுக்கு காக்- டெயில்கூட தயாரிக்கும் அளவுக்கு பயிற்சி பெற்றுள் ளனர். அவர்களால் எந்த வகை விருந்தையும் 'மானேஜ்' பண்ண முடியும்!'' என சிலாகிக் கிறார்.

வகுப்புகள் ஆரம்பித்த கையுடன், இந் தியாவிலும், அயல் நாடுகளிலும் நிறைய டெமான்ஸ்ட்ரேஷன்கள் கொடுக்கத் துவங்கினார் தர்லா.

உலகம் தழுவிய உணவுக்கலை நிபுண ராக இருப்பினும், அதிசயமாக சில உண்மை





''என்ன சார் போன வாரம் பிரசுரமான உங்க கதையையே மறுபடி எழுதி அனுப் பிச்சிருக்கீங்க?''

''எடிட்டர் ஸார், கதை நல்லாருக்கு. தொடர்ந்து இதே மாதிரி எழுதுங்கன்னு நீங்கதானே சொன்னீங்க?''

— சி.பி. செந்தில்குமார்

● ●

ளை அப்பட்டமாக ஒப்புக் கொள்கிறார்.

''என்னதான் மெக்ஸிகன், இத்தாலியன் என்றெல்லாம் நாம் மார் தட்டினாலும், உண்மையில் இதை எல்லாம் இந்திய – மெக் ஸிகன், இந்திய – சைனீஸ், இந்தோ இத்தாலி யன் என்றுதான் அழைக்க வேண்டும். ஏனென்றால், ஒரிஜினலில் இருக்கும் அதே சுவையைப் பிடிப்பது மிகவும் அசாத்தியம்! காரணம், இந்திய உணவுப் பொருள்களுக் கும், அங்கேயுள்ள உணவுப் பொருள்களுக் கும் உள்ள வித்தியாசம், அரிசி, கோதுமை யிலிருந்து, பால், தயிர், வெண்ணெய், திராட்சை, முந்திரி, பாதம் வரை எதை எடுத் துக்கொண்டாலும், அயல்நாட்டு சரக்கு களின் தரமே வேறு வகைதான்'' என்கிறார்.

மற்றொரு அதிசயம், இவர் வெஜிடேரி யன் உணவுகளையே விடாமல் பிடித்துக் கொண்டிருப்பதுதான். ''நான் – வெஜ்ஜெல் லாம் தொடக் கூட மாட்டேன்; சின்ன வய திலிருந்து அப்படியே வளர்ந்து விட்டேனா... திடீரென்று மாறுவது கடினம்'' என்கிறார்.

'வெஜ்'ஜிலேயே எண்ணற்ற ரெஸிபிகள் இருக்கின்றன என அடித்துப் பேசும் இவர், 1974ல் வெளியிட்ட முதல் சமையல் புத்தகம் "The Plesures of Veg - Cooking". அதில் சொல் லப்பட்ட முறையில் செய்து பார்த்தால், ஒழுங்கான முடிவுகளும் கிடைத்தன என்ப தால் புத்தகம் பெரு வெற்றி பெற்றிருக்கிறது. இன்று 25வது பதிப்பு வெளிவந்த பிறகும் அதன் மவுசு குறைந்தபாடில்லை!

அதன் பிறகு தர்லா இருபது புத்தகங்கள் எழுதி விட்டார். எல்லாமே பலப் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள் ளன. ஒரு மிலியனுக்கு மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகி எல்லாமே சக்கைப் போடு போடுகின்றன! புத்தகங்களெல்லாம் பள பள அட்டையுடன் மினு மினுப்பாக இருக்கும். உணவு வகைகள் கூட இப்படிப் போஸ் கொடுக்குமா என வியக்க வைக்கும் அள வுக்கு, வண்ண வண்ணப் படங்கள் கண் ணைப் பறிக்கும். உள்ளே கொடுக்கப்பட் டிருக்கும் ஒவ்வொரு ரெஸிபியையும் ஒன்றுக்கு மூன்று முறையாக தங்கள் பரிசோதனைச் சாலையில் (அட, பெரிய கிச்சன்தான்!) செய்து பார்ப்பார்களாம். இது வரை கடவுள் புண்ணியத்தில், சமையல்... ஸாரி பரிசோதனைக் கூடத்தில் எந்த ஆக்ஸிடெண்டும் ஆக வில்லையாம்! செய்து பார்த்ததை ருசித்து, பிறகு மாற்றியமைப் பதும் உண்டாம். திருப்திகரமாக அமைந்த பின், அளவு, செய்முறை எல்லாவற்றையும் விரிவாகக் குறித்துக் கொள்வார்களாம். அப்புறம் ஒரு ப்ரொஃபஷனல் ஃபோட்டோ கிராஃபரை வைத்துக் கொண்டு புகைப்படங் கள் எடுத்து, கடைசியாக பெரிய எழுத்து, பளிச் ப்ரிண்டிங், தடிமனான அட்டை யுடன் சிறப்பான பைண்டிங்... விலையும் அப்படியே!

இவரது பிள்ளை சஞ்சய்யே பப்ளிஷிங் வேலைகளைக் கவனித்துக் கொள்கிறார். இவருக்கு இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும்; சமையல் தவிர, தோட்டக் கலையிலும் தர்லாவுக்கு ஆர்வமிருக்கிறது! (ரூஃப் கார்டன் அமைத்து உணவு பரிமாறும் ஐடியா இருக்கலாமோ?) நிறைய ஃபைவ் ஸ்டார் ஓட்டல்கள், வி.ஐ.பி. விருந்துகளுக்கு ஏற்பாடு செய்பவர்கள், இவரது குறிப்பு களால் பயனடைந்துள்ளார்களாம்!

''எனக்குத் தெரிந்த வரையில், சமையல் கலை என்பது மிக எளிமையான ஒன்று; சரியாக சொல்லிக் கொடுத்தால், யாரும் 'கப்'பென்று பிடித்துக் கொள்ளலாம்! சமையலை 'ஒரு 'கரியராக' ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் விளையாட்டாக ஆரம்பித்தது இந்தத் தொழில்; இன்று இந்த அளவு விரிந்து, பரந்து, வேர் விடும் என நான் நினைக்கவே யில்லை'' என்று முடித்தார். இவர் விஷ யத்தில் விளையாட்டு விலையாகியிருக் கிறது!

— ஜெயஸ்ரீ ராஜ்





ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர், (வழி) தாம்பரம்,
சென்னை–63. Tel & FAX: 2376129
E.mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our website at: www.intamm.com/sspeetam

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர் ! வணக்கம், புத்தாயிரமாண்டில் தங்களுக்கு அனைத்து நலன்களும் உண்டாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பிரார்த்திக்கின்றோம்.

தங்களின் அன்பினாலும், ஆதரவினாலும், குருகுலத்தில் 137 மாணவ, மாணவியர்க்ள் நல்ல முறையில் படித்து வருகின்றார்கள். குருகுல மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஒரு உயர்நிலைப்பள்ளியும், மற்றும் கம்ப்யூட்டர் பயிற்சி மையமும் துவக்கப்பட்டுள்ளது.

✱ குருகுல மாணவர்களோடு உங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளுங்கள்.

✱ குருகுல மாணவர்களின், உணவு மற்றும் இதர செலவுகளுக்கு, கல்வி கற்பதற்கு கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு, கட்டிடம் கட்டுவதற்கு, மற்றும் நிரந்தர வைப்பு திட்டத்திற்கு தங்களின் மேலான நன்கொடைகளை அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

● காலை சிற்றுண்டி (137 பேருக்கு)	ரூ 1,000/-
● மதிய உணவு	ரூ 1,500/-
● இரவு சிற்றுண்டி	ரூ 1,000/-
● பிஸ்கட் மற்றும் பால் வழங்குதல்	ரூ 750/-
● ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ 1,000/-
● ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ 3,000/-
● ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ 9,000/-
● குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ 2,00,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/ DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி! நன்றி ! நன்றி !

ஒரிசா புயல் நிவாரணப்பணிக்கு உதவி அளித்த அனைவருக்கும் எங்களின் மன பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்



2

விஸ்வநாத் கோவிலின் வெளிப்புறத்தில் விதவிதமான வண்ண பலூன்களை ஒருவன் விற்றுக்கொண்டிருந்தான். விட்டால் வானத்திற்குச் செல்லத் தயார் என்பதுபோல் தலை நிமிர்ந்து நெட்டுக்குத்தாகக் காட்சியளித்தன அவை.

பெரும்புகழ் பெற்ற காசி கோவிலைத் தவிரவும் அந்த நகரில் வேறு பல விஸ்வநாத் ஆலயங்கள் உண்டு. முக்கியமாக பனாரஸ் ஹிந்து பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்த மேற்படிக் கோவில். அமைப்பு வெகு கம்பீரம். கோவிலைச் சுற்றியுள்ள பரந்த புல்வெளி மிக ரம்மியம்.

டேராடூனில் இருந்தபோது அப்பாவுடன் அங்குள்ள நகராட்சிப் பூங்காவுக்கு ஒரு முறை சுவாதி சென்றிருந்தாள். அப்பாவுடன் வெளியே செல்ல நேர்ந்த அரிதான தருணங்களில் ஒன்று. தனக்கு ஒரு பலூன் வேண்டுமென்று அவள் தயக்கத்துடன் கேட்க, அப்பா அந்த வரத்தை அருளி விட்டார்.

"இது ஹீலியம் பலூன். விட்டா மேலே போயிடும். கெட்டியாப் புடிச்சுக்கோ" என்று அப்பா கூற, அவள் கீழ்ப்படிந்தாள். ஆனாலும் அந்த பலூனின் விருப்பத்துக்கு மாறாகத் தான் செயல்படுகிறோம் என்ற குற்ற உணர்வு உண்டானது.

''அப்பா இதை விட்டுடட்டுமா?'' என்று கேட்டாள். அதுவே தவறாகப் போனது.

"பணம் கொடுத்து வாங்கினது அதை விட்டு விடுவதற்கா? ஏன் கைவலிக்குதா?" என்றபடி அந்தப் பலூனைத் தான் வாங்கிக்கொண்டார். அப்பாவிடம் சொல்லாமலேயே தற்செயலாகத் தவறவிடுவது போல் அந்தப் பலூனுக்கு சுதந்தரம் கொடுத்திருக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

வீட்டுக்கு வந்தவுடன் அங்கிருந்த மேஜையின் ஒரு காலில் அந்த பலூனின் கயிற்றைக் கட்டி முடிச்சுப் போட்டார். மூன்று முடிச்சுகள்.

அருண் சரண்யா



பழ



"நம்ம தலைவரை மாதிரி முன் எச்சரிக்கைப் பேர்வழியை நீ பார்த்திருக்க முடியாது!"

"எப்படிச் சொல்றே?"

"வர்ற இடைத்தேர்தல்ல நாம தோற்கப் போறதுக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க கமிட்டி ஒன்றை இப்பவே அமைச்சுட்டார்!"

— புளியரை கணேசன்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

அடுத்த நாள் பள்ளியிலிருந்து வரும்போதே 'வீட்டுக்குப் போனவுடன் பலூன் கயிற்றை அறுத்து விட வேண்டும். அதே சமயம் அந்த பலூன் வீட்டு உத்திரத்தில் போய் முட்டிக் கொள்ளாதபடி அதைப் பிடித்து வாசலில் கொண்டு வந்து வானத்தை நோக்கிப் பறக்க விட்டு விட வேண்டும்' என்ற தீர்மானத்துடன் நுழைந்தாள்.

ஆனால் ஏமாற்றம்! பலூன் சப்பையாக உயிர்ப்பில்லாமல் இருந்தது. காற்று மட்டும் எப்படியோ வெளியேறியிருந்தது. தான் விடுதலையளிக்க எண்ணியது பலூனுக்கா காற்றுக்கா என்பதில் குழப்பம் ஏற்பட்டது.

"என்ன சுவாதி, ஏதோ கனவிலே மிதக்கிற மாதிரி தெரியுது. இது கோயில். ஞாபகமிருக்கட்டும்" என்று அப்பா அதட்டியவுடன்தான் தாங்கள் விஸ்வநாத் மந்திருக்குள் நுழைந்து விட்டதை அவள் உணர்ந்தாள்.

வழிபாடு முடிந்து வெளியே வரும்போது "அப்பா, அந்தப் புல்வெளியில் கொஞ்ச நேரம் உட்கார்ந்துக்கலாமா?" என்று சுவாதி கேட்க, "இந்த நேரத்திலே வயசுப் பெண்கள் இப்படிப் பொது இடத்தில் உட்காருவதெல்லாம் கூடாது" என்றார் அப்பா.

அவள் வயதுப் பெண்களில் சிலர் அந்தப் புல்வெளியில் உட்கார்ந்துகொண்டு எதற்கோ இடைவிடாமல் சிரித்துக் கொண்டிருந்தனர்.

"வாங்க சந்துருஜி, எப்படியிருக்கீங்க?" என்றபடி அங்கே வந்து சேர்ந்தார் ராம்லால். பல்கலைக் கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணி புரிபவர். முசோரியிலிருந்து ஏதோ செமினாருக்காக அப்பா இங்கு வந்திருந்தபோதே ஏற்பட்ட பழக்கம்.

"உங்க மகள்தானே? ஸ்கூல் படிப்பை முடிச்சுட்டாளாக்கும். எவ்வளவு மார்க்? உங்க மகள் நிறைய மார்க் எடுக்கக் கேட்பானேன்? அடுத்தது எந்தக் கோர்ஸ் படிக்கப் போறா? என்ஜினியரிங்கா? காமர்ஸா? எப்படியும் அவளை ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டு வராம இருந்துடுவீங்களா?"

பதிலையே எதிர்பார்க்காமல் அவர் பேசியது அப்பாவுக்கு சௌகரியமாக இருந்திருக்க வேண்டும். மையமாகத் தலையசைத்து விட்டு அங்கிருந்து கிளம்பினார்.

மீண்டும் சுவாதியின் பார்வை அந்தப் பரந்த புல்வெளியின் மீது பதிந்தது. "ஐந்தே நிமிடங்கள் அப்பா" என்றாள் கெஞ்சும் குரலில். அப்பா வெகு அதிருப்தியுடன் அவளைப் பார்த்தார்.

இதேபோன்ற பார்வையைப் போன வாரம்கூட அவள் சந்தித்திருக்கிறாள். அப்பாவின் நண்பர் ஒருவர் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் அப்பாவின் நண்பர்தானா என்பது சுவாதிக்குத் தெரியாது. ஆனால் அப்பாவைத் தேடிக் கொண்டு வீட்டுக்கு வருபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு என்பதால் வந்தவர் அப்பாவின் நண்பராக இருக்க வேண்டும் என்று அவளாகவே அனுமானித்துக் கொண்டாள்.

ஏதோ ஒரு ஸ்லோகத்தை அப்பா அவருக்கு எழுதிக் கொடுக்கத் தொடங்கினார். பாதி எழுதும்போது பேனாவில் இங்க் தீர்ந்து விட்டது. இங்க்கை நிரப்புவதற்காக பேனாவின் மேல் பகுதியைத் திறக்க அப்பா செய்த முயற்சிகள் பயனற்றுப் போயின. பிறகு அவரது நண்பர், அப்புறம் முன்னா என்று பலரும் முயற்சித்தும் தோல்விதான். "எங்கே என்கிட்டே கொடுங்க" என்றபடி சுவாதி அந்தப் பேனாவை வாங்கி அதை லாகவமாக இயக்க, அது மசிந்து கொடுத்துத் திறந்து கொண்டது. "அட, உங்க மகள் பலசாலிதான். மூணு ஆண்களால் முடியாத காரியத்தைச் செய்துட்டாளே" என்று அந்த நண்பர் பாதி நிஜமாகவும் பாதி கிண்டலாகவும் பாராட்டியபோது அப்பா அவளை உறுத்துப் பார்த்தார். ''இது போன்ற அங்கீகாரங்கள் உனக்குத் தேவையில்லாதவை'' என்கிற மாதிரியான பார்வை.

தெருவில் நுழையும்போதே முன்னா எதுவும் கலாட்டா செய்யாமல் இருந்திருக்க வேண்டுமே என்ற கவலை ஏற்பட்டது. பக்கத்து வீட்டு பீமலா திதியிடம் விட்டு விட்டு வந்திருந்தாள். பொறுப்பாகப் பார்த்துக் கொள்ளக் கூடியவள்தான். சுவாதியின் மீது அபிமானம் கொண்டவள்– 'தாயில்லாப் பெண்'.

என்றாலும் சுவாதியின் வீட்டுக்குச் சென்று எதையும் உரிமையாகச் செய்ய பீமலாவுக்கு அனுமதி கிடையாது! காசிக்கு இரு வருடங்களுக்கு முன் வந்து சேர்ந்த ஆரம்ப நாட்களில், சுவாதிக்கு சமையலில் உதவி செய்ய பீமலா வந்தபோதே அப்பா நறுக்காகக் கூறிவிட்டார்.

"உங்க நல்ல மனசுக்கு நன்றி. ஆனால் நீங்கள் இங்கே வருவது சரியில்லே. நான் மனைவியை இழந்தவன். ஊரில் நம்மை இணைத்து யாரும் கதை கட்டிவிடக் கூடாது பாருங்கள்"

இந்தப் பளீரென்ற பேச்சில் பீமலா அரண்டு விட்டாள். எனினும் சமாளித்துக் கொண்டு, "என் கணவர் கேஷவ் இதையெல்லாம் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டார். சொல்லப் போனால் அவர் அனுமதியைப் பெற்றுதான் இங்கு வந்திருக்கிறேன்" என்ற அவளது வாதத்தை அப்பா ஏற்றுக் கொள்வதாயில்லை. "அதெல்லாம் வேண்டாம். என் பெண்ணுக்கோ, முன்னாவுக்கோ ஏதாவது அவசரத் தேவையென்றால் மட்டும் நீங்கள் உதவினால் போதும்."

முன்னாவைப் பற்றி பீமலாவின் மனதில் ஏற்கெனவே பல கேள்விக் குறிகள். 'அவன் முகத்தில் ஒரு வட இந்தியக் களை சொட்டுகிறதே. சந்துரு, சுவாதி ஆகியோரின் அம்சம் கொஞ்சம் கூட அவனிடம் இல்லையே, அவன் யார்?'

அடுத்த நாள் சந்திரமோகன் கோவிலுக்குச் சென்ற பிறகுதான் சுவாதியிடமிருந்து இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைத்தது – அதுவும் முழுமையாக அல்ல.

"முன்னா யாருன்னு எனக்கும் தெரியாது திதி. அவன் மூணு வயசுப் பையனாக இருக்கும்போது எங்க வீட்டுக்கு அழைச்சிக்கிட்டு வந்தார் அப்பா. "இனிமே இந்தப் பையன் இங்கே உன்னோடு இருப்பான்"னாரு. எனக்கு ஒரு துணையாச்சுன்னு நானும் சந்தோஷப்பட்டேன்... சில சமயம் மட்டும் முன்னா காரணமில்லாம நடந்துக்குவான். மத்தபடி என் மேலே அவனுக்கு ரொம்பப் பாசம்"

பீமலாவின் சந்தேகங்கள் தீர்ந்துவிடவில்லை. முன்னா வாசல்புறம் போவதற்காகக் காத்திருந்துவிட்டு "முன்னாவைத் தேடிக்கிட்டு இத்தனை நாளும் யாருமே வந்ததில்லையா?" என்ற அவள் கேள்விக்கு "இல்லை" என்று பதில் வரவே, 'இதில் ஏதோ மர்மம் இருக்கிறது' என்கிற பாவனையுடன் பீமலா நகர்ந்தாள்.

காலையில் தேநீரை நீட்டும்போதே அப்பாவிடம் ஒரு சோர்வு தெரிவதை சுவாதி கவனித்து விட்டாள். "என்னப்பா உடம்பு சரியில்லையா? ஜுரமா?" என்றபடி அவரது கழுத்தில் கைவைத்துப் பார்த்தாள்.



இது Y2K கண்ணாடி. ஜப்பானில், டோக்கியோ நகரத்துக் கடையொன்றில் ஐயாயிரம் ஜப்பானிய யென் மதிப்புள்ள பொருட்களை வாங்கும் கஸ்டமர்களிலிருந்து ஆறாயிரம் பேரைக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து இலவச புத்தாண்டுப் பரிசாய் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

— கி.எம்.

"உடம்பு சரியில்லேம்மா" என்றார் பலவீனமான குரலில். இத்தனை வருடங்களில் அப்பா இப்படிச் சொல்லி சுவாதி கேட்டது அதுவே முதல் தடவை.

மாலைப் பணியைப் பொருட் படுத்தாமல் அப்பா அடிக்கடி சபுத்ராவை நோக்கிச் செல்வதும், வாசலிலுள்ள அந்த உயர்வான பகுதியில் உட்கார்ந்துகொண்டு, எதையோ மறுபரிசீலனை செய்வது போல் விரல்களை நீட்டுவதும் மடக்குவதுமாக இருப்பதையும் பார்த்தபோது, பாதிக்கப்பட்டது அப்பாவின் உடல் நலம் மட்டுமல்ல என்பது சுவாதிக்குப் புரிந்தது. மனதில் எதை வைத்துக் கொண்டு இவர் தவிக்கிறார்?

(தொடர்ந்து பறக்கும்)



ஹஹா! ஹஹா!

''கபாலி என்ன சொல்லுகிறான்?''

''ஐந்தாம் வகுப்புவரை பயிற்று மொழி மெட்ராஸ் பாஷையில் இருக்கணுமாம்.''

– எஸ். மோகன்

''தலைவருக்குக் குழந்தை மனசு!''

''அதுக்காக கட்சில கணக்குக் கேட்ட உடனே அழறது கொஞ்சம் கூட நல்லா இல்ல!''

– அம்பை தேவா

''நேற்று ஆபீஸ் டைம்ல நீங்க டைப்பிஸ்ட் ராஜேஸ்வரியைக் கூட்டிட்டு சினிமாவுக்குப் போனீங்களாமில்ல, நல்லாவா இருக்கு உங்களுக்கு?''

''எனக்கு நல்லாத்தான் இருந்திச்சு சார். ராஜேஸ்வரிதான் படம் பிடிக்கலைன்னு சொல்லிட்டாங்க!''

– சீகாழி கே.ஆர்.வி.

''போக்குவரத்துக்கு இடைஞ்சலா ஒரு மாடு சாலையில் படுத்துக் கிடக்குது சார்!''

''யாரோட மாடுன்னு விசாரியேன்யா!''

''கேட்டேனே, பதிலே சொல்ல மாட்டேங்குது!''

– பர்வதவர்த்தினி

"நீங்க சுண்டல் வாங்கறப்ப சுண்டல்காரர் ஏதோ முணுமுணுத்தாரே... என்ன அது?"

"உனக்குச் செலவழிக்கற மாதிரியே செலவழிச்சிருந்தா என்னோட முந்தைய காதலி என்னை கட் பண்ணிட்டு போயிருக்க மாட்டான்னு சொன்னார்!"

- அம்பை தேவா

தெய்வ தரிசனம் - 14

சப்தவிடங்க ஸ்தலம் - 6

நீலவிடங்கரின் கமலநடனம்

ஆனந்தி

முசுகுந்த சக்கரவர்த்தி கட்டிய தியாகராஜஸ்வாமி கோவில்களில் திருவாய்மூர் என்ற மருத நிலத்து ஊரில் உள்ள கோவில் சிறியதானாலும் அழகாக இருக்கிறது. நாகையிலிருந்து திருத்துறைப்பூண்டி வழியாகத் திருவாய்மூரை அடையலாம். திருக்கோளிலி, எட்டுக்குடி முதலிய தலங்கள் அருகில் இருக்கின்றன.

இவ்வளவு அடையாளம் சொல்லித்தான் திருவாய்மூரைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது!

ஸ்தல புராணத்தைக் கேளுங்கள்!

தாரகாசுரன் என்ற அசுரன் தேவர்களை ஓட ஓட



• திருவாய்மூர் ஆலயம்



விரட்டினான். பிரும்மாவும் மற்ற பல தேவர்களும் பறவைகளாக உருவமெடுத்துக் கொண்டு தப்பிப் பறந்தார்கள். இந்திரன் பூஜித்த விடங்கரும் தியாகராஜ ஸ்வாமியும் இந்தத் திருவாய்மூர்

கோவிலில் குடிகொண்டிருப்பதை அறிந்து, வானத்திலிருந்து இறங்கி குளக்கரையில் உட்கார்ந்தார்கள். பறவை உருவில் பகவானைத் தரிசிக்க வெட்கப்பட்டு கோவிலின் எதிரே இருக்கிற பாபமேக பிரசண்ட மாருத தீர்த்தத்தில் இறங்கித் தங்கள் சுயரூபத்துடன் ஸ்நானம் செய்து விட்டுக் கோவிலுக்குள்ளே சென்று ஈசுரவனைத் தரிசனம் செய்தார்கள். முன்பு செய்த பாபங்களும் தீவினைகளும் நீங்கித் திவ்ய ரூபம் பெற்றார்கள்.

கோயிலைச் சுற்றிலும் தீர்த்தங்கள்தான்! இந்திர தீர்த்தம், சூரிய தீர்த்தம், அரிச்சந்திர நதி எல்லாம் அருகில் உள்ள புண்ணிய தீர்த்தங்கள்.

குளம் அல்லிக் கொடிகளாலும் இலைகளாலும் மொட்டுக்களாலும் மூடப்பட்டிருக்கிறது. பாப மேகப் பிரசண்ட மாருத தீர்த்தத்தில் இறங்கி ஸ்நானம் செய்ய விருப்பமிருந்தால் செய்து, கரையில் வாய் மூரடிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் கணபதியை வழிபட்டு விட்டுக் கோயிலுக்குள் செல்லலாம்.

கோபுர வாசலில் அறுவடையான நெல்லைப் போரடித்துச் சேர்த்துக் குவித்திருக்கிறார்கள். மெத்தென்ற உமி வைக்கோல் மீது நடந்துதான் கோபுரத்தை அடைகிறோம்.

உள்ளேயும் மண்டபங்களில் நெல்காய வைக்கப்பட்டிருக்கிறது. வாய் மூரடிகளுக்கும் தியாகராஜஸ்வாமிக்கும் அப்படியே நெல்லாகவே நைவேத்தியம் போலிருக்கிறது!

பிற்பகல் நேரம். கோவிலில் பலர் தூங்கிக் கொண்டிருந்தார்கள். உண்ட களைப்புப் போலும்.

குருக்களை அழைத்துக் கொண்டு வர ஒருவர் சென்றார். "இங்கதான் வீடு. வந்திடுவாரு" என்று ஒருவர் சொன்னார். உயரமான மதில்கள் சூழ்ந்த பிராகாரத்தை வலம் வரும்போது அங்கங்கே விரிசல் விட்டிருப்பதைக் கண்டு வருத்தமாக இருக்கிறது.

சிமெண்டாலும், கான்க்ரீட்டாலும் புதிய புதிய கோயில்களைக் கட்டிக் கொண்டிருப்பவர்கள் இந்தப் பழைமையான வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களுக்குத் திருப்பணி செய்து புண்ணியம் தேடிக் கொள்ளக் கூடாதா?

மூச்சிறைக்கத் தள்ளாடிக் கொண்டு அர்ச்சகர் வருகிறார். பாவம் வயதானவர். அர்ச்சனைப் பொருள்களை வாங்கிக் கொண்டு கருவறையில் விளக்கேற்றி வாய் மூர்நாதருக்கு அர்ச்சனை செய்கிறார். நிதானமாக வெகு நேரம் அர்ச்சனை செய்கிறார்.

ரத்னசிம்மாசன நீலவிடங்கத் தியாகராஜரைத் தரிசிக்கிறோம். மூச்சுத் திணறலுடனேயே தீபாராதனை செய்து ஆர்வத்துடன் தரிசனம் செய்வித்தார் குருக்கள்.

சூரியன் பூஜித்த மூர்த்தி. இந்திரன் பூஜித்த மூர்த்தி. அம்மையின் பெயர் நீலோத்பலாம்பாள். நீலவிடங்கருக்கும் நீலோத்பலாம்பாளுக்கும் நடுவில் பாலனான கந்தப்பெருமான். செக்யூரிடி ஆபீசரைக் கூப்பிட்டுப் பக்கத்தில் இருக்கச் சொல்லிவிட்டுப் பெட்டியிலிருந்து பித்தளை சம்புடத்தை எடுத்துத் திறக்கிறார். இரண்டு சிவலிங்கங்கள். ஸ்படிகமும் மரகதமும். "அடடா! இன்று சுதினம். இப்படியொரு தரிசனம்" என்று மகிழ்கிறோம். கற்பூர ஜோதியில் அப்படியே தங்கமயமாய் மின்னுகின்ற சிவலிங்கம் அருள்ஜோதிமயமான அருணாசலேச்வரரை நினைவூட்டுகிறது.


அடுத்து வேதாரண்யேச்வரரைத் தரிசிக்கிறோம். திருவாய்மூரில் மூன்று நிலைக் கோபுரம். மூன்று கருவறைகள். மூலவர் வாய்மூர்நாதர். அவருக்கு வலது புறத்தில் தியாகராஜசுவாமி. இடது பக்கத்தில் திருமறைக்காயர் என்ற தமிழ்ப் பெயருடைய வேதாரண்யேச்வரர்.

"இவர்தான் அப்பரை இங்கு வரச் சொல்லி தரிசனம் கொடுத்தார்" என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார் குருக்கள். அப்போது நடந்த கதையைச் சொல்கிறார் :

அப்பர்பெருமான் வேதாரண்யேச்வரரைத் தரிசிக்க திருமறைக்காட்டுக்குச் சென்றார். மக்களுக்கு ஒரே மகிழ்ச்சி. ஞானசம்பந்தரும் வருகிறார் என்றதும் ஒரே

"நம்ம டீம் போலிங்கை கிழிகிழின்னு கிழிச்சிட்டாங்கன்னு சொன்னேனில்ல?"

— மாதுரி



கோலாகலம்தான்.

திருமறைக்காட்டில் வேதங்கள் பூஜித்து விட்டு ஒரு வாயிலை அடைத்துக் கொண்டு போய் விட்டனர். வேறு கதவு வைத்துத் தான் மற்றவர்கள் கோவிலுக்குள்ளே போய் வந்து கொண்டிருந்தார்கள்.

இந்தக் கதவைத் திறந்து இதன் வழியாகவே போய்த் தரிசிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார் சம்பந்தர். அப்பரிடம், "கதவு திறக்குமாறு பாடுங்கள்" என்றார்.

குழந்தை சொன்னதைக் கேட்டு சந்தோஷமாகப் பதிகம் பாடினார் அப்பர்.

"கண்ணினால் உமைக்காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே"

என்று பாடிக் கொண்டு வந்தார். பத்தாவது பாட்டிலும் கதவு திறக்கவில்லை. கடைசியில், "நான் இவ்வளவு கெஞ்சிக் கேட்கிறேன். இன்னும் திறக்கவில்லையே" என்ற ஆதங்கத்துடன், "இரக்கமொன்றிலீர்! எம்பெருமானீரே" என்று பாடியதும் கதவு திறந்தது. தரிசனம் செய்து கொண்டு வந்த பிறகு அப்பர் சம்பந்தரிடம், "இந்தக் கதவு மூடும்படி பாடு. இனி இது திறந்து மூடும்படி அமைய வேண்டும்" என்றார். சம்பந்தர் ஒரு பாடல் பாடியவுடனேயே கதவு மூடிக் கொண்டது.


அப்பர்பெருமானுக்கும் மற்றையோருக்கும் இது மகிழ்ச்சியளித்தபோதிலும் அப்பர் மனத்தில் ஒரு குறை. "நான் பத்துப் பாடல் பாடிக் கூடக் கதவு திறக்கவில்லை. பதினோராவது பாடல் பாடியபோதுதான் திறந்தது. இந்த இளம்பிள்ளை ஒரு பாட்டுப் பாடியதும் கதவு மூடிக் கொண்டதே" என்று சற்று வருத்தம் அடைந்தார்.

அப்போது கனவில் தோன்றி வேதாரண்யேச்வரர், "வாய்மூருக்கு வா" என்று சொல்லிவிட்டுப் போனாராம். உடனே புறப்பட்டு விட்டார் அப்பர்.

"மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி யுன்னி உறங்கு கின்றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவனா மாசொல்லி
என்னை வா வென்று போனார் அதென்கொலோ!"

என்று தன்னை மறைக்காட்டீசர் அழைத்ததை எண்ணிப் பாடியபடி சென்றார்.

ஜப்பான் பாராளுமன்ற பெண் எம்.பி. சீகோ ஹசிமோடோ (வயது 35). ஜப்பானில் பெண்களுக்கு பிரசவ கால விடுமுறைச் சலுகை கிடையாது. நிறைமாத கர்ப்பிணியான சீகோ ஹசிமோடோவுக்கு சபையில் இருந்தபோதே பிரசவ வேதனை ஏற்பட்டது. சபையிலேயே அழகான குழந்தையைப் பெற்றெடுத்தார்.



நன்றி: மாலை முரசு
தகவல்: ப. இராம்முருகன்

அப்பரைத் தொடர்ந்து சம்பந்தரும் வந்தார். ஈச்வரன் வழிகாட்டிக் கொண்டே போய் ஒரு கோவிலுக்குள் நுழைந்து மறைந்து விட்டாராம். அப்பரும் சம்பந்தரும் பகவான் மறைந்ததைக் கண்டார்கள். கோவிலுக்குள் சென்று வாய்மூரடிகளைத் தரிசனம் செய்தார்கள். வாய்மூரடிகள் நேரில் தரிசனம் தரவேண்டுமென்று அப்பர் வேண்டினார்.

"தேடிக் கொண்டு திருவாய்மூர்க்கு வா என்று சொல்லிவிட்டு ஓடி வந்து இங்கே ஒளிந்து கொண்டு விட்டீரே. கதவு திறக்கப் பாடிய என்னை விடச் செந்தமிழால் உன்னை உறைக்கப் பாடிக் கதவை அடைத்த பிள்ளை வந்திருக்கிறானே. திருவாய்மூர் விளக்கைத் தூண்டிக் கொள்வேன் நான் என்றதும் தோன்ற மாட்டீரா?" என்று பாடிக் காட்சி தர வேண்டினாராம்.

பகவான் தோன்றி நடனம் செய்தாராம். உமாதேவியும் மற்ற தேவர்களும் கூடக் காட்சியளித்தார்களாம். இந்தக் கதையைச் சொன்னார் குருக்கள்.

பாட அடியார் பரவக் கண்டேன்
பக்தர்கணம் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல்முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல் கண்டேன். கங்கையாளைக்
கோடலரவார் சடையிற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையில் கண்டேன்

வாய்மூரடிகளைநான் கண்டவாறே

என்று பத்துப் பாடல்களில் தான் கண்ட சிவதரிசனத்தைப் பரவசமாகப் பாடியிருக்கிறார் நாவுக்கரசர் பெருமான்.

இன்னும் 'மண்ணைத் திகழ நடமதாடும் வரை சிலம்பார்க்கின்ற பாதங் கண்டேன்' என்று சிலம்பொலிக்க நடனமாடியதைக் கண்டதாகப் பாடுகிறார். சம்பந்தரும் பத்துப் பாடல் பாடிச் சிறப்பித்திருக்கிறார். திவ்யதரிசனம் என்பது உள்ளத்தினுள்ளே இருந்தாலென்ன? புறக்காட்சியாக இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்.

சில அபூர்வ சிலா வடிவங்களை இக்கோயிலில் பார்க்கலாம். காரைக்கால் அம்மையாரின் பேய் வடிவம் கையில் தாளத்துடன் நிற்கும் கோலம் மனத்தை உருக்குகிறது. ஆடவல்லானின் விக்ரஹம் மிக அழகான அமைப்புடன் நடு மண்டபத்தில் இருக்கிறது. சடை சற்றுத் தாழ்வாகத் தோளில் படிவது போலக் காணப்படுகிறது. நடனமாடி முடியும் தருவாயில் சடை சற்று இறங்குவது போல் தோன்றுகிறது. முயலகனது தலையில் கால் ஊன்றி எடுத்த பொற்பாதத்துடன் பார்க்கப் பார்க்கத் திகட்டாத மூர்த்தி.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பிறந்த தினத்தையொட்டி தென் மாவட்டங்களிலுள்ள பள்ளி மாணவ மாணவியர்களுக்கான பண்பாட்டுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது தற்செயலாக கன்னியாகுமரிக்கு சுற்றுலா வந்த அருணாச்சல பிரதேசத்துப் பள்ளி மாணவிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அப்போது "குமரி முதல் இமயம் வரை ஒரே பூமி" என்ற தமிழ் பாடலை அட்சரசுத்தமாக (தமிழ் தெரியாத) அம்மாணவிகள் பாடியது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்ததோடு "வாழ்க, வளர்க நமது தேச ஒற்றுமை" என்று சொல்லவும் வைத்தது.



நேரில் கண்டு மகிழ்ந்தவர்
நாஞ்சில் க. நாகராஜன், பரமக்குடி.

1959 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்திருக்கிறது. அப்போது வெளியிட்ட சிறு மலரிலேயே, "இக் கோவிலில் பிரும்மோற்சவப் பெருவிழா நடைபெறுவதில்லை" என்று எழுதியிருக்கிறது.

மற்ற மாதாந்திர விழாக்களுக்கு உபயதாரர்கள் இருக்கிறார்கள்.

இந்தத் தலத்தில் ஒரு சிறப்பு : பங்குனி மாதம் பன்னிரண்டு – பதின்மூன்றாம் தேதிகளில் சூரிய கிரணங்கள் நேராக சுவாமி, அம்மன் மீது படுகிறது. சூரிய பகவான் அவ்விரு தினங்களிலும் அம்மையப்பனைப் பூஜிப்பதாக ஐதிகம்.

பாலின் நன்மொழியாளான அம்மை. வடமொழியில் க்ஷீரோப வசனி.

பாலின் மொழியாளோர் பாகம்
கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
......
மாலைச் சடை முடியும் கண்டேன்
வாய்மூரடிகளை நான் கண்டவாறே"

என்று திருத்தாண்டகம் பாடியருளியிருக்கிறாரே அப்பர். இந்தத் தொடரையே பாலின் நன்மொழியாள் என்று தேவியின் பெயராக வைத்து அழைக்கிறோம். ஞான சம்பந்தருக்கு ஞானப்பால் அளித்த அன்னையல்லவா? பாலைவிட இனிமையானவள். பாலைப் போல உயிரைக் காப்பவள். பாலைப் போல சத்துவ குணமுடையவள். உணவுகளுக்குள்ளே உயிரூட்டும் சக்தியாக விளங்குபவள். பாலின் நன்மொழியாளை வணங்கி விடைபெறுகிறோம்.

குருக்களிடம் "உற்சவங்கள் எல்லாம் நடைபெறுகிறதா" என்று கேட்டேன். 22 நாள் உற்சவம் ஒரு நாளாகக் குறுகி விட்டதாம்!

"ஏதோ எங்களால் முடிந்ததைச் செய்து வருகிறோம்" என்று ஏக்கத்துடன் சொன்னார்.

வழக்கமான கதைதான். நூறு வேலி நிலம் தியாகராஜஸ்வாமிக்கு சோழ மன்னர்களும் பல்லவ மன்னர்களும் இறையிலியாக வழங்கியிருக்கிறார்கள். இன்று குத்தகைக்காரர்கள் படியளப்பது குறைந்து போய் விட்டது.

"நீலவிடங்கர் கமல நடனம் ஆடுவதுண்டா? அது எப்படி இருக்கும்?"

"தாமரை மலர் தண்ணீரில் அலையில் ஆடுவது போலவும், காற்றில் ஆடுவது போலவும் இப்படியும் அப்படியும் மிதக்கிறாற்போலே ஆடுவார்" என்று, கைகளை ஆட்டிக் காட்டினார் குருக்கள்!

படங்கள் : **ஸ்ரீஹரி**

• க. கந்தவேல், ராதாநல்லூர்.

? உலகப் பொதுமறையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட திருக்குறளை ஏன் தேசிய நூலாக்க வேண்டும்?

! தேர்தல் வருவதால்!

• கோ. ராமநாதன், கணபதி அக்ரஹாரம்.

? ஆன்ரே அகாசி – ஸ்டெபி கிராப் – காதல் எப்படி?

! கடந்த வாரம் டீ.வி.யில் மேட்ச் பார்த்தீர்களா? அகாஸியின் ஒவ்வொரு ஸ்ட்ரோக்குக்கும் அம்மணியின் முகம் எப்படி அப்பளம் பொறிகிற மாதிரி பிரகாசிக்கிறது கவனித்தீர்களா? அந்தக் கண்களில் தெரிந்ததே, அது காதல்! பந்தடிக்கிற வேகத்துக்கு அந்தக் கண்ணையும் விடாமல் காட்டிக் கொண்டிருந்த அந்த ஊர் பேர் தெரியாத காமெராமேனுக்கு ஒரு மலர்ச் செண்டு!

• என். பாலகிருஷ்ணன், மதுரை.

? இன்னும் ஓராண்டில் தி.மு.கவை அழித்துவிடப் போவதாக நடிகர் ராதாரவி கூறுகிறாரே?

! இந்த ரேஞ்சில் அபத்தங்களை உதிர்த்தாலாவது 'ஜெ'வின் பார்வை தம் மீது விழாதா என்கிற நப்பாசைதான். வேறென்ன!

• எல். துர்காதேவி, மங்கைநல்லூர் அஞ்சல்.

? ஸ்டாலின் துணைமுதல்வராக வேண்டும் என்று ஒரு திருமண விழாவில் ராம்தாஸ் பேசியுள்ளாரே?

! கலைஞரை சந்தோஷப்படுத்துவதாக நினைத்துச் சங்கடப்படுத்துகிறார் அல்லது சங்கடப்படுத்துவதற்காகவே பேசுகிறாரா என்பது டாக்டரின் மனச்சாட்சியில் ஸ்டெத் வைத்துப் பார்த்தால்தான் தெரியும்.

• சூரியன், லால்குடி.

? சென்னை குறளகம் கதர் பவனிலேயே இரண்டரை கோடி கையாடியிருப்பது காந்தியையும் கதரையும் அவமானப்படுத்தும் செயல் அல்லவா?


! கையாடல், லஞ்சம், ஊழல் எங்கே நடந்தாலும் அவை காந்தியையும் அவர் தூய்மையின் சின்னமாகக் கருதிய கதரையும் அவமானப்படுத்தும் செயல்கள்தான். கதர் பவனில் மட்டும் தூய்மை இருந்துவிட்டால் காந்தி திருப்தியடைந்துவிட மாட்டார்.

• சு. அருணாசலம், தென்காசி.

? ஆஸியில் இந்திய கிரிக்கெட் அணி ஆடும் 'அழகை'ப் பார்த்தால் டீ.வி.யில் கிரிக்கெட் பார்க்கும் ஆசையே போய் விடுகிறதே?

! உண்மைதான்; சபாஷ், சரியான போட்டி என்ற நிலையில்தான் ஆட்டத்தைக் காணும் ஆர்வம் ஏற்படும்.

• க. இராகவன், தஞ்சாவூர் – 4. ❑





• நிஜம் உணர்ந்த....



• ரீங்காரச் சென்னை!




• ...ஆட்டம்!



• கண்களில்...



• ஆசை சபதம்!



• மனச்சாட்சிக்கு ஸ்டெத்!

? அன்று 'ராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலையில்லை' என்று பாடிய ரஜினிகாந்த், ஜெயலலிதா ஆட்சியைப் பற்றிக் கவலைப்பட்டது ஏன்?

! தாம் சினிமாவில் பாடியதை மக்கள் நிஜமென்று நினைத்து அதே போக்கை மேற்கொண்டு விடக் கூடாது என்பதால்தான். சினிமா வேறு, நிஜம் வேறு என்று உணர்த்தத்தான்.

● ஆர். சுப்பராவ், சென்னை – 61.

? கொசுத் தொல்லையால் தூங்க இயலாமல் இரவு முழுதும் கொட்ட கொட்ட விழித்துக் கொண்டிருக்கும் மக்களிடம், 'கொசுத் தொல்லையை ஒழிக்க மக்களிடையே விழிப்புணர்வு வேண்டும்' என்று சென்னை மேயர் கூறுகிறாரே – புரியவில்லையே?

! தெரு மற்றும் வீடுகளில் குழாயடியில் நீர் தேங்காமலிருந்தால், நீர்த் தொட்டிகள் – கிணறுகள் மூடப்பட்டிருந்தால், மழை நீரும் தேங்காதிருந்தால் கொசு உற்பத்தியாகாது. இதில் முதலிரண்டு காரியங்களுக்கும் மக்களின் ஒத்துழைப்பும் விழிப்புணர்வும் அவசியம். மழை நீர் வடிகால்களைச் சரியாக அமைப்பது மாநகராட்சியின் விழிப்புணர்வு சம்பந்தப்பட்டது.

● சக்தி சரவணன், மோகனூர்.

? இந்திய கிரிக்கெட் அணியை என்ன செய்யலாம்?

! தலைமை உள்பட மாற்றி அமைக்கலாம். சரியான பயிற்சி அளிக்கலாம். வீடியோ உதவியுடன் தவறுகளைத் திருத்திக் கொள்ளச் செய்யலாம். டீம் ஸ்பிரிட்டை வளர்க்கலாம். இன்னும் எவ்வளவோ உருப்படியாகச் செய்யலாம்.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? பொங்கலுக்காக தமிழக அரசு சார்பில் ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட சேலைகளில் தி.மு.க. கரை போட்ட கறுப்பு – சிவப்பு பார்டர் இருந்தது பற்றி...?

! கண்டிக்கத்தக்கது!

● ஆர். எஸ். லட்சுமி, கோவை – 1. *

? கலைஞர் எதிரிலேயே அவரை அளவுக்கு மீறிப் புகழும் புலவர்களுக்கு – அறிவு ஜீவிகளுக்குக் கூச்சமாக இராதா...?

! சரித்திர கால அறிவு ஜீவிகளும் (புலவர்கள்) இப்படித்தான் இருந்தார்கள் என்பதற்கு ஏராள சான்றுகள் உள்ளன. அதே பழக்கம் தொடர்கிறது போலும். ஒருவேளை ஜீன் தொடர்பாக இருக்கலாம்!?

● ப. லக்ஷ்மி நரசிம்மன், கோவை – 11.

? பாக் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீபுக்கு இந்திய உளவு அமைப்பான 'ரா'வுடன் தொடர்பு இருந்தது என்று ராணுவ அரசு குற்றம்சாட்டியுள்ளதே?

! அது வளமான கற்பனை; முஷரஃபின் சர்வாதிகாரப் போக்கு பிடிக்காமல் பாகிஸ்தானின் ஆறு உச்சநீதிமன்ற நீதிபதிகள் ராஜினாமா செய்திருப்பது நிதர்சன நிஜம்.

● எஸ். அழகேசன், திருச்சுழி.

? பல பள்ளிக்கூடங்களில் மரத்தடியில் தான் பாடம் நடக்கிறது. அதற்காகவாவது பயன்படட்டுமே என்றுதான் பள்ளிகளில் மரம் நடும் இயக்கத்தை நடத்துகிறோம் என்று பா.ம.க. தலைவர் ராம்தாஸ் கூறியிருப்பது பற்றி...?

! மரம் நடுவதும் சரி, மரத்தடியில் பள்ளி நடப்பதும் சரி, நக்கலுக்குரிய விஷயங்களல்ல. வகுப்பறைகள் உள்ள பள்ளிகளிலும் மரம் நட்டாக வேண்டும். மரத்தடி வகுப்புகள் நடக்கும் பள்ளிகளில் வகுப்பறைகளும் கட்டியாக வேண்டும்.

● க. குழந்தைவேலு,
மேட்டுத்திருக்காம்புலியூர்.

? 'அய்யன்' என்றால் என்ன அர்த்தம்...?

! முனிவன், ஆசான், பார்ப்பான், ஸ்மார்த்த பிராமணர், பட்டப் பெயர், தந்தை, உயர்ந்தோன், எசமானன், அரசன் என்றெல்லாம் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ் லெக்சிகனில் பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் கருணாநிதி ஆதரவாளரா எதிர்ப்பாளரா என்பதைப் பொறுத்து எந்த அர்த்தம் வேண்டுமோ எடுத்துக் கொள்ளலாம்!


❑ ரூ. 50 முதல் பரிசு பெறுபவர் : க. ராகவன், பிளாட் எண் 6, 6வது தெரு, சுந்தரம் நகர், எம். ச. ரோடு, தஞ்சை - 613 004.

• ரூ. 25 இரண்டாவது பரிசு பெறுபவர்: ஆர். எஸ். லட்சுமி, ராஜம்மாள் இல்லம், 20, வி.என்.ஆர். நகர் முதல் தெரு, வடவள்ளி அஞ்சல், கோவை - 641 041.



ஆஸ்துமாவா? ஈஸ்னோபீலியாவா? சைனஸா? காசநோயா?

இனி கவலையே வேண்டாம்



இருமல், மூச்சுத்திணறல், மூக்கில் நீர் வடிதல், சளி, தும்மல், மூக்கடைப்பு மலச்சிக்கல் போன்ற அறிகுறிகள் இருந்தால் அவர் ஆஸ்துமா, ஈஸ்னோபீலியா, மலேரியா, காய்ச்சல், டைபாய்டு, காசநோய், டான்சில் மற்றும் சைனஸ்போன்ற நோய்களால் பாதிக்கப்படலாம் என்று அறிந்துக் கொள்ளலாம். இக்குறைபாடுகள் நாம் சுவாசிக்கும்போது மூக்கு முதல் மூச்சுக் குழல் வரை சீலியேட்டடு எபித்லியம் என்று சொல்லக்கூடிய முடிகள் உள்ளது. இது நாம் சுவாசிக்கும் காற்றில் உள்ள தேவையற்ற மாசுக்களை தடுத்து தூய்மையான மற்றும் ஈரப்பதமான காற்றை மட்டும் நுரையீரலுக்கு இரத்தத்தை சுத்தம் செய்ய அனுப்புகின்றது. இந்த முடிகள் காலப்போக்கில் பொடி போடுதல், (Inhaler) உபயோகித்தல், இரசாயன உரத் தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை, தீப்பெட்டி தொழிற்சாலை, அலுமினி தொழிற்சாலை, வெடி மருந்து தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, வாகனப்புகை, போதை பொருட்கள் தொழிற்சாலை போன்றவைகளில் வேலை செய்பவர்கள் மற்றும் அதன் அருகில் வசிப்பவர்கள் மற்றும் தூய்மையான காற்றோட்டம் இல்லாத இடத்தில் வாழ்பவர்களுக்கும் இந்த காற்றுப்பாதையில் உள்ள முடிகளானது (Air Filter) அளவுக்கு மிஞ்சிய நஞ்சுக் காற்றினால் அழிந்து விடுகின்றது.

இதனால் காற்றில் உள்ள கிருமிகள், நஞ்சுக்கள் அப்படியே நுரையீரலுக்கு செல்வதால், நுரையீரல் பாதிக்கப்பட்டு பலஹீனம் அடைந்து செயல்திறன் குறைகின்றது. இதனால் நுரையீரலுக்கு வரும் அசுத்தரத்தமானது சரிவர சுத்தம் செய்யப்படாமல் உடலின் எல்லா பகுதிகளுக்கும் செல்லுகின்றன. இதனால் உடலில் உள்ள எல்லா நீக்கங்களுக்கும் போதிய சக்திகள் கிடைக்காமல் பலஹீனம் அடைந்து விடுகின்றது. இதனால் உடலில் உள்ள கழிவுகள் முறைப்படி வெளியேறாமல் உடலிலே தங்கி விடுகின்றன. இவைகளே நாளடைவில் அலர்ஜி, இருமல், தும்மல், மூக்கில் நீர் வடிதல், சளி, கோழை, மூச்சு வாங்குதல், மூக்கடைப்பு போன்றவைகளாக மாறுகின்றன.

இத்தகைய குறைபாடுகள் யாவும் நீங்க எமது தெய்வீக மூலிகைகளான வேப்பிலை, வில்வம், துளசி, அத்தி, ஆடாதொடா, முருங்கை, தூதுவளை, தும்பை, கற்பூரவல்லி, கீழாநெல்லி போன்ற மூலிகைகளை பயன்படுத்தி நுரையீரல் நன்றாக செயல்படவும், நோய் கிருமிகளில் இருந்து பாதுகாத்து நோய் எதிர்ப்பு சக்தி பெறலாம். இதுபற்றிய விரிவான விளக்கம் பெற கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

தெய்வீக மூலிகை வைத்தியர்கள்



தலைமை முகவரி : **Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகம்**

P.B.No:30, No:3, திருநாத முதலி நகர், காலேஜ் எதிரில், திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ : 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8

✆ : 6424285, 6427638

2000 வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	: பிற்பகல் 12 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா (கங்கா), 16, ஆஃபீஸர்ஸ் லைன். ✆ : 0416 / 223060
2-ந் தேதி	- காஞ்சிபுரம்	: மாலை 5 to 6 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு. ✆ : 04112 / 22519.
1,3,5,10,11,16,21,27,28,29,30,31 தேதி	- சென்னை	: காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில். ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.Dt.)	: காலை 9 to 11 ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல். ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	: பிற்பகல் 2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில். ✆ : 04146 / 22962
4-ந் தேதி	- திருவண்ணாமலை	: மாலை 5 to 6 ராதா லாட்ஜ் (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	: காலை 11 to 1 ஹோட்டல் பிரஸ்டேஜ், (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பே கவுடா ரோட். ✆ : 2266374
9-ந் தேதி	- ஓசூர்	: மாலை 4 to 5 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட். ✆ : 04344 / 42899.
12-ந் தேதி	- சேலம்	: காலை 11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில். ✆ : 0427 / 449333.
12-ந் தேதி	- ஈரோடு	: மாலை 4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில். ✆ 0424 / 226611 / 12 / 13 / 14/15/16/17/18
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	: காலை 9 to 1 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	: காலை 9 to 11 ஹோட்டல் கிராண்ட்ஸ் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு. ✆ : 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	: மாலை 5 to 6 அசோகா லாட்ஜ். ✆ : 04362 / 30021 / 30022
15-ந் தேதி	- திருச்சி	: காலை 9 to 11 ஹோட்டல் ஆனந்த் (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்). ✆ : 0431 / 415545
15-ந் தேதி	- நாமக்கல்	: பிற்பகல் 2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா. ✆ : 04286 / 20433
22-ந் தேதி	- தர்மபுரி	: காலை 9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ். ✆ : 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	: பிற்பகல் 2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ். ✆ : 0421 / 740418.
22-ந் தேதி	- உடுமலைபேட்டை	: மாலை 6 to 7 குறிஞ்சி லாட்ஜ் (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	: காலை 9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் பின்புறம்) ✆ 421056.
23-ந் தேதி	- தூத்துக்குடி	: மாலை 5 to 6 ஹோட்டல் ஆல்வின், தேவர் புரம் ரோடு. ✆ : 0461 / 327760
24-ந் தேதி	- திருநெல்வேலி	: காலை 8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தாபதி, மதுரை ரோடு. ✆ : 0462 / 333312.
24-ந் தேதி	- நாகர்கோவில்	: பிற்பகல் 2 to 3 ஹோட்டல் சரவணா, மீனாட்சிபுரம். ✆ : 04652 / 25689.
25-ந் தேதி	- விருதுநகர்	: காலை 9 to 10 ஆண்டன் லாட்ஜ், மதுரை ரோடு. ✆ : 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	: பிற்பகல் 2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார். ✆ : 63763.

Dr. CKM
DIVINE HERBAL CENTRE

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 26 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

7 & 8-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph: 4011589

18 & 19-ந் தேதி - புது டெல்லி: காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆: 5717126, 5723651

விளக்கெண்ணெய் குடித்தவன் முகம் எப்படி இருக்கும் என்று சாரங்கன் பார்த்த தில்லை. என்றாலும் கண்ணாடியில் தன் முகத்தையே ஒருமுறை பார்த்தபோதுதான் தெரிந்து கொண்டான்.

காரணம் : ஒரு மூன்றெழுத்துக்காரி. பெயர் : விநுதா.

மூச்சுப் பயிற்சி வகுப்பில் அறிமுகம் ஆன பெண்.

"விநிதா என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதென்ன விநுதா?" என்று ஒட்டை வாயை வைத்துக் கொண்டு, சும்மா இராமல் கேட்டு விட்டான், சாரங்கன்.

"கருடனின் அம்மா பெயர் தெரியுமா?"

"கருடனின் அம்மா கருடம்மா! சிம்பிள்!"

"கஷ்டம், கஷ்டம்!"

"பின்னே ஆகாசத்தில் பறந்து கொண்டிருக்கிற கருடனிடம் எல்லாம் போய், உன் அம்மா பேரு என்னன்னு கேட்க முடியுமா? கிட்டே போறதுக்குள்ள பறந்தே போயிடுமே!"

"இந்த கருடன் விஷ்ணுவின் வாகனமான கருடன். 'விநதாஸுத வாகன'ன்னு பாட்டுக் கூட இருக்கே, தெரியாதா?"

"நான் பழைய காலத்து ஜிம் ரீவ்ஸ், இந்தக் காலத்து ரிக்கி மார்ட்டின் ரசிகன். விநதாஸுத எல்லாம் என் காதில் விழுந்ததே இல்லை!.. சரி, விநுதா. பேரு புதுமையா இருக்கு. உங்க அம்மா பேரு என்ன, கருடனா?"

விநுதா பார்த்த முறைப்புப் பார்வையில், சாரங்கன் சிவபெருமான் எரித்த மன்மதன் மாதிரி, பொசுங்கிப் போய்விடவில்லை.

"நீங்கள் ரொம்பக் குறும்பு. நான் இனி பேச மாட்டேன்!" என்று, மூச்சுப் பயிற்சிக்கு வந்தவர்கள் பதிவுசெய்யும் பகுதிக்கு விரைந்தான் விநுதா. பின்னாலேயே தொடர்ந்தான் சாரங்கன்.



விநுதா விண்ணப்பத் தாளைப் பெற்றுக் கொண்டு மளமளவென்று பூர்த்தி செய்தாள்.

"ஃபீஸ் எத்தனை?" என்று கேட்டாள், 'மூச்சு வாலண்டி'யரிடம்.

"தௌசண்ட் ருபீஸ். ஆயிரம் ரூபாய்!"

"அம்மாடியோவ்! மூச்சே நின்னுடும் போலிருக்கு!" என்று விநுதா கூவ –

"மூச்சை ஒழுங்கா விடறதுக்குத்தான்

மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்!

சாருகேசி

இங்கே பயிற்சி, மிஸ் விநுதா. மூச்சை நிறுத்தறதுக்கு இல்லே!" என்று சாரங்கன் மூக்கை நுழைக்க –

"தாங்க் யூ. தாங்க் யூ மிஸ்டர்..."

"சாரங்கன். ஆர். சாரங்கன். சாஃப்ட்வேர் இஞ்சினியர் இன் ரன் வே ஸிஸ்டம்ஸ்!"

"அவர் கேட்டது உங்கள் பெயரை மட்டும்தான். உங்கள் முழு ஜாதகத்தை அல்ல!"

"அப்போ ஜாதகத்தை யாரிடம் கொடுக்கணும்? உங்கள் அப்பாவிடமா?"

"இல்லை. கனடாவில் இருக்கிற என் குழந்தையிடம்!"

2

"எல்லாரும் ஒருவருக்கொருவர் உங்களை அறிமுகம் செய்து கொள்ளுங்கள். உங்கள் பெயரைக் கூறிவிட்டு, கைகுலுக்கி, நான் உங்கள் நண்பன் என்றும் சொல்ல வேண்டும்!" என்றார் மூச்சுப் பயிற்சி போதகர்.

எல்லாரையும் மாற்றி மாற்றி அறிமுகம் செய்து கொண்ட பிறகு, விநுதாவிடம் வந்த போது, சாரங்கனின் நீட்டிய கையைத் தொடாமலே இருந்தாள் விநுதா.

"நீங்க என்ன பர்வேஸ் மூஷரஃபின் மகளா? இப்ப முகத்தைப் பார்த்தா அப்படித்தான் தோணுது!"

விநுதாவின் அழகான உதடுகள் மெல்ல மெல்ல சூர்யோதய வானம் மாதிரி பிரித்தன. அரிசிப் பல் வரிசை தெரிய ஆரம்பித்தது. பளீர் – ஒரு புன்னகை. குபீர் – ஒரு அதிர் சிரிப்பு!

"ஹூ இஸ் தட்? சைலன்ஸ் ப்ளீஸ்!" என்றார் மூ.ப. வாத்தியார்.

மிருதுவான அவள் கைகளைப் பற்றிக் குலுக்கிய சாரங்கனுக்கு, கைகளை விடுவித்துக் கொள்ளவே தோன்றவில்லை.

3

"நீங்கள் இப்போது இழுத்து – விட்டுக் கொண்டிருப்பது சுமார் முப்பது சதவிகித ஆக்ஸிஜன் காற்றுத்தான். நீங்கள் ஒழுங்காக, பயிற்சி முடிந்த பிறகு, இழுத்து – விடும் மூச்சுத்தான் ஹன்ட்ரட் பர்சென்ட்!" – மூ. ப. வாத்தியார்.

"இதென்ன கூத்து! இத்தனை குறைச்சலா மூச்சை இழுத்து – விட்டுக் கொண்டிருக்கும்போதே உயிரோடு இருக்கிறோமே! இனிமே எதுக்கு முழுசா மூச்சு விடணும், கஷ்டப்பட்டு?"

"உஷ்" என்றாள் விநுதா.

பிராணாயாமம் சொல்லித் தந்தார்கள்.

"இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொள்ளும்போது விரல்கள் கோத்துக் கொண்டு இராமல், பிரிந்து இருக்க வேண்டும். ஒன்-டு-த்ரீ-ஃபோர்-ஃபைவ்-சிக்ஸ். மூச்சை உள்ளுக்கு இழுத்ீர்களா? ஒன்-டு. நிறுத்திக் கொள்ளுங்கள். ஒன்-டு-த்ரீ-ஃபோர். மூச்சை வெளியே விடுங்கள்!"

"இப்படி கூடவே ஓர் ஆளை வைத்துக் கொண்டு மூச்சை இழுத்து – வெளியே விட்டுக் கொண்டிருக்க முடியுமா?" என்று முணுமுணுப்பாய் சாரங்கன் சொன்ன போது, விநுதா சிரிக்க, கொஞ்சமாக எல்லாருக்கும் கேட்க, மூ.ப. முறைத்துப் பார்க்க....

அன்று பயிற்சி வகுப்பு முடிந்து, விநுதாவைப் பின்தொடர நினைத்து, அவன் மேலேயே கண்

ணாக இருந்தான் சாரங்கன்.

அவன் ஸ்கூட்டரைக் கிளப்புகிற சமயம், சட்டென்று ஸ்கூட்டர் சாவியைக் கழற்றி எடுத்துக் கொண்டான்.

"டெல் மீ ஆனஸ்ட்லி விநுதா. உங்களுக்குக் குழந்தை இருக்கிறதா?"

"யெஸ்! கனடாவில். டொரன்டோவில். வேணுமானால் வந்து பாருங்கள்!"

"பொய். அட்டர் லய்!"

"யூ கம் அன்ட் ஸீ ஃபார் யுவர்செல்ஃப்!" என்றபடி, "கார் என்ன ஆச்சு?" என்றாள் ரொம்ப அக்கறையோடு.

"கார்? ரிப்பேர்!"

"திடீரென்று ரிப்பேரா?"

"இல்லை. ஒரு ஆக்ஸிடென்ட் ஆச்சு. நேத்திக்கு."

"ரியலி? எங்கே? எங்கே அடிபட்டுது?"

"புரசைவாக்கத்திலே!"

"சீ. உடம்பில் எங்கே அடிபட்டுது?"

"இது நடு ரோடு. சட்டை, பனியன் எல்லாம் அவுக்க முடியாது. முதுகிலே நாலு இஞ்ச் காயம். டீப் ஊண்ட். பை த வே, ரொம்ப அக்கறையா விசாரிச்சதுக்கு நன்றி. போகிற வழியில் என்னை இறக்கிவிடக் கூடாதா?"

"என் வீடு வரை லிஃப்ட் கொடுக்கிறேன். அப்புறம் உங்கள் பாடு!"

"ஓகே!"

நுங்கம்பாக்கத்தில் அவள் இறங்கிக் கொண்டு, "பை!" என்றாள்.

வீட்டை நன்றாகப் பார்த்து வைத்துக் கொண்டான் சாரங்கன்.

4

மறுநாளே ஆபீஸ் போகிற வழியில், காரை நிறுத்தி விநுதாவின் வீட்டுக்குப் போய், காலிங் பெல்லை அழுத்திய போது, சற்றே பருமனான ஓர் அம்மாள் கதவைத் திறந்தாள்.

"விநுதா...?"

"அவ லைப்ரரிக்குப் போயிருக்கா. நீங்க யாரு?.. உள்ளே வரலாமே?"

'நல்ல சமயமடா, இதை நழுவ விடுவாயோ' என்று வாய்விட்டுப் பாடாத குறையாக, விடுவிடென்று சோபாவில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான் சாரங்கன்.

"என்ன சொல்லணும் விநுதாகிட்ட?"

தயங்கினான் சாரங்கன். எப்படி ஆரம்பிப்பது?

"விநுதா எப்ப கனடா போகணும்?" என்றான்.

அம்மாள் திருதிருவென்று விழித்த போது –

"இல்லே, குழந்தை கனடாவில் இருக்கிறது என்றாள்..."

"யார் குழந்தை?"

"விநுதாவோட குழந்தை."

"நல்லபடியா அவளுக்கு ஒரு கல்யாணம் ஆனாத்தானே குழந்தை-கிழந்தை எல்லாம்! உங்களை நல்லா குழப்பி விட்டிருக்கா என் பெண்!"

5

மாலை வகுப்புக்குத் தாமதமாகத்தான் வந்தாள் விநுதா. சாரங்கனைப் பார்க்காமல், முன் வரிசையில் போய் அமர்ந்து கொண்டாள்.

பின்னால் உட்கார்ந்திருந்த சாரங்கனுக்கு அவளை அணுகவே முடியவில்லை.

வகுப்பு முடிந்தது. "ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பிடிக்காதவர் முன் பேச வேண்டி வரும்போது மூச்சை நன்றாக இழுத்து, கண்களை இறுக மூடிக் கொண்டு, 'ம்ஹ்ம்' என்று தும்மல் போடுகிற மாதிரி நாலு முறை செய்யுங்கள். உங்கள் மூடே மாறிப் போய்விடும்!" என்று பயிற்சியாளர் சொன்னபடி விநுதாவிடம் செய்து காட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

"நாளை கடைசி வகுப்பு. எல்லாரும் சின்னதாக ஒரு பரிசு பாக்கெட் கொண்டு வாருங்கள்!" என்றார் பயிற்சியாளர்.

கீழே வருவதற்குள் விநுதாவின் ஸ்கூட்டர் தெரு முனையைத் தாண்டிவிட்டிருந்தது.

'என்ன பரிசு கொண்டு போவது? அது கரெக்டாக விநுதாவிடம் போய்ச் சேர

"அன்பே, நம்ம காதல் கல்யாணத்திலே முடியுமா?!"

"நிச்சயமா! இதோ என்னோட கல்யாணப் பத்திரிகை; முதல்ல உங்களுக்குத்தான் தரேன்; பிடிங்க!"

– யமுனா ரெங்கநாதன்



என்ன செய்ய வேண்டும்?'

மண்டையைக் குடைந்து கொண்டான் சாரங்கன். யோசித்து யோசித்து ஒவ்வொரு இட்டமாக ஒதுக்கிய பிறகு, ஓர் ஐடியா உதயமாயிற்று. ஆனால் அந்தப் பரிசு விநுதாவுக்குப் பதிலாக வேறு யாரிடமாவது போய்ச் சேர்ந்து விட்டால்? அதிலும் அந்த ஸ்காட்லந்து மாமியிடம்...?

சமாளித்துக் கொள்ளலாம் என்று துணிந்து, வெள்ளைத் தாளை எடுத்தான்.

அழகாக பாக் செய்தான் சாரங்கன்.

மறு நாள் அலை அலையாகப் பாய்ந்து, உச்சத்தில் துடித்து, சலசலவென்று அருவியாய்க் கொட்டிய ஸிதார் இசை காசட்டுக்கு எல்லாரும் கண்களை மூடிக் கொண்டு ஆனந்தமாக கிருஷ்ண சைதன்யர் போல் ஆடினார்கள்.

"உங்கள் பரிசு பாக்கெட்டுகளை எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றார் பயிற்சியாளர்.

இரயில் இஞ்சின்+ரோடு இஞ்சின் மாதிரி தடதடவென்று இதயம் படபடக்க, சாரங்கன் தன் பரிசு பாக்கெட்டை சக மாணவரிடம் கொடுக்க, விநுதா அது போல் வேறொருவரிடம் கொடுக்க, பரிசு பாக்கெட்டுகள் ஒருவர் கை மாறி இன்னொருவர் கைக்குப் போய்க் கொண்டே இருக்க-

தன் பாக்கெட் யாரிடம் போய்ச் சேருகிறது என்று கண்கொத்திப் பார்த்துக் கொண்டே இருந்தான் சாரங்கன்.

'ஐயோ... அந்த குண்டு எக்ஸிக்யூடிவ் கையிலா...'

சாரங்கன் திணறி, வெளியே ஓடிவிடலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கையில், விநுதா தன் கையிலிருந்த பரிசு பாக்கெட்டை அவரிடம் தர, அவர் தன் கையிலிருந்த சாரங்களின் பாக்கெட்டை அவளிடம் கொடுக்க –

அப்பாடா!

6

என்ன கொழுப்பு இருந்தால் உங்கள் பயோ டேட்டாவை ஒரு கிஃப்ட் மாதிரி அட்டைப் பெட்டியில் வைத்து என்னிடம் கொடுப்பீர்கள்?" என்று மாலையில் பொய்க் கோபம் காண்பித்தாள் விநுதா.

"உன் பையன் கனடாவில் இருக்கானே? பெரிய சாஃப்ட்வேர் கம்பெனி ஆரம்பித்தால், ஒரு நாள் எனக்கு வேலை தர மாட்டானா? அதற்குத்தான்!"

"நீங்கள் அன்று வீட்டுக்கு வந்து அவசர அவசரமாக விசாரிச்சுட்டுப் போன போதே நினைச்சேன். இந்த மாதிரி ஏடாகூடமாக ஏதாவது பண்ணுவீர்கள் என்று. அந்த குண்டு எக்ஸிக்யூடிவ் கையில் உங்கள் பயோ டேட்டா கிடைச்சிருந்தா என்ன நினைச்சிருப்பார்?"

"என்ன நினைச்சிருப்பார்? பாவம், நல்லவேலை தேடுகிறான் போலிருக்குன்னு நினைச்சிருப்பார். இல்லேன்னா அவரோட பெண்ணுக்கு என்னோட ஜாதகத்தைக் கேட்டிருப்பார்!"

விநுதா அவனை அடிக்கிற மாதிரி துரத்தப் போக, சாரங்கன் துளியும் நகராமல், அவளை அப்படியே சுற்றிப் பிடிக்க, அந்தப் பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் இருந்த உதவிப் பெண் வெட்கமாய்ச் சிரித்துக் கொண்டாள். ●

ஒட்டி வைத்த உலக அமைதி!

• பாலு





வண்ணக் காகிதம், கத்திரிக்கோல், ஒட்டும் பசை, பிளஸ் கற்பனை! இதன் மூலம் தனிமனித அமைதிக்கும், அதன் மூலம் உலக அமைதிக்கும் வழிகாண விழைகிறார் பெங்களூர் வேங்கடராமன் பாலு!

பளிச்சென்ற வண்ணங்களின் ஒருங்கிணைந்த சேர்க்கை ஆன்மாவைத் தீண்டி அமைதியை விளைவிக்கும் என்பது பாலுவின் அசைக்க முடியாத நம்பிக்கை. அரசாங்க அதிகாரியாக இருந்த ஒருவருக்கு உள்ளத்து அமைதியைத் தாண்ட, உலக அமைதிக்கு தனிநபர் படையாக முன்னேற அப்படி ஒரு தாகம் ஏற்பட்டது சென்ற மிலெனியத்தின் அதிசயம்!

உலக அமைதி என்ற கண்ணுக்குப் புலப்படாத கருத்தைக் கலை மூலம் வெளிப்படுத்த 1982 முதலே முயன்று வருகிறார் பாலு. சொற்கள் சாதிக்க முடியாததை ஓவியம் சாதிக்கும் என்ற கருத்தின் செயல் வடிவமே காகிதக் கலை ஒட்டுமுறை.



'கொலாஜ்' என்று குறிப்பிடப்படும் கலை 'ஒட்டு'க்கலைதான்! அட்டை, துணி போன்ற பரப்பில் கத்திரித்த காகித வடிவங்களையொட்டிக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிப்பதுதான் இது.


''ஏற்றிய விளக்கைக் கையில் வைத்துக் கொண்டு, பற்றவைக்கத் தீப்பெட்டி தேடுவதைப் போல தனி மனிதனுள்ளத்தில் அமைதி ஏற்றாமல் உலக அமைதியை எப்படி ஏற்படுத்த இயலும்?'' என்று கேட்கிறார் பாலு. அவருடைய 'தனி மனித அமைதிப் படை' உலகில் செல்லாத இடமில்லை. பெர்லின், பாரீஸ், லண்டன், நியூயார்க், பாஸ்டன் போன்ற நகரங்கள், தென் ஆப்பிரிக்கா, ஐக்கிய அரபுக் குடியரசு, பெல்ஜியம், மெக்ஸிகோ, கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து முதலிய நாடுகள் அவருடைய முயற்சியைக் கண்டு மூக்கில் விரல் வைக்கின்றன! சமீபத்தில் சென்னையிலும் இவ்வோவியங்களின் கண்காட்சி நடைபெற்றது.

தமது கொலாஜ் ஓவியங்களைச் சில 'அமைதி வலியுறுத்தும்' கட்டுரைகளுடன் பிரமாதமான நூலாகவும் கொண்டு வந்திருக்கிறார் பாலு. (சதாசாந்தி, பாரதிய வித்யா பவன் வெளியீடு, மும்பை – 7)

பாலுவின் 'உலக அமைதி' கொலாஜ்களின் சில சாம்பிள்கள் இங்கே.

– ஆர். பி. சாரதி





கே. பாலச்சந்தர் வழங்கும்

ஊஞ்சல்



பைரவியும் விஷ்ணுவும் எதிரெதிர் வீட்டில் வசிப்பவர்கள். இரண்டு குடும்பங்களும் நல்ல நட்பு. விதவைத் தாயுடன் வசிக்கும் விஷ்ணு ஏர் இந்தியாவின் உயர் அதிகாரி. பைரவியோ மத்திய குடும்பத்தைச் சேர்ந்த டைப்பிஸ்டாக பணிபுரிபவள். அவளை விட குறைவாக சம்பாதிக்கும் தந்தையும், 12 வயதில் ஒரு தம்பியும். பைரவி விஷ்ணுவை மனதாரக் காதலிக்கிறாள். ஆனால் விஷ்ணுவோ, பாடகியான பல்லவியை பெற்றோர் சம்மதத்துடன் காதலித்து நிச்சயதார்த்தமும் நடக்கிறது.

பைரவிக்கு அதிர்ச்சி! விஷ்ணுவை எக்காரணத்திற்காகவும் இழக்கத் தயாராயில்லை அவள்! ஒரு முடிவுக்கு வருகிறாள் – உடனே பல்லவியுடன் நெருங்கிப் பழகி அவளுடைய தீவிர நட்புக்கு ஆளாகிறாள்! இப்பொழுது தன்னுடைய திட்டத்தை செயல்படுத்த தொடங்குகிறாள். பல்லவியையும், விஷ்ணுவையும் பிரிப்பதற்கு!

அநாமதேய கடிதங்கள், நம்பக்கூடிய கிசுகிசு, விஷ்ணுவின் பேச்சுக்கள் அடங்கிய குறிப்பிட்ட கேசட் – இது போல எத்தனையோ முயற்சிகள் மூலம் அவள் விஷ்ணுவை பல்லவியிடமிருந்து பிரிக்க பார்க்கிறாள். ஏனென்றால் அவள் எக்காரணத்திற்காகவும் விஷ்ணுவை இழக்கத் தயாராயில்லை!

ஆனால் பைரவியின் ஒவ்வொரு முயற்சியும் முறியடிக்கப்படுகிறது! யாரால்?

அவள் விஷ்ணுவை அடைந்தாளா? அல்லது விஷ்ணு தடைகளைத் தாண்டி பல்லவியை மணந்தானா?

விஷ்ணுவை யார் அடைந்தார்கள்?

இந்த இழையில்தான் கதையின் ஓட்டம்! விறுவிறுப்பு!
இது ஒரு இளமையான சங்கீதக் காதல் கதை!
காணத் தவறாதீர்கள்! உங்கள் விஜய் டிவியில்!

கதை, திரைக்கதை & வசனம் : தேவிபாலா

இயக்கம் : சுந்தர் கே. விஜயன்

நடிகர்கள் : எஸ்.பி.பி., சரண், ஷாலினி & ஸ்ரீதுர்கா.

vijay

விஜய் டி.வியில் ஒவ்வொரு
செவ்வாய்க்கிழமையும் இரவு 8.30 மணிக்கு

- ADVT -

கிசு-கிசு!

மும்பை மசாலா:



• கமலா - சுரய்யா!

சுட்டு—விடு!

இதுதான் மும்பை அண்டர் வர்ல்டின் மிலெனிய மந்திரம்! சுடுவது போல் பாவ்லா காட்டி விட்டு-பயத்திலேயே செத்து விடமாட்டார்களா?- உயிரை மட்டும் விட்டு வைப்பது! புத்தாண்டின் முதல் போணி, 'சோ'த்தலையரான ராகேஷ் ரோஷன்! தனது கோல்டன் ஜூபிலியைக் கொண்டாடும் வயதில், சினிமா ரசிகர்களுக்கு, ஒரு கோல்டன் ஜூபிலி (கொண்டாடக் கூடிய...) ஹிட்டை பரிசளித்திருக்கிறார். மகன் ஹ்ருதிக் ரோஷனைக் கதாநாயகனாக்கி இவர் தயாரித்து வெளியிட்டிருக்கும் 'கஹோ நா ப்யார் ஹை'' ரிலீசான ஒரே வாரத்துள் மும்பை இளசுகளின் இதயத்தைத் திருடி விட்டது. காலேஜில் 'மாஸ் கட்' என்றால், பக்கத்து தியேட்டரில் 'கஹோ நா' ஓடுகிறதென்று அர்த்தம். மோப்பம் பிடித்த அண்டர் வர்ல்ட், முதலில் தொலைபேசியது; இவர் ஃபோனையே எடுக்காததால் முடிவில் 'கொலை' பேசி விட்டது. குண்டடிபட்டு ரத்தம் சொட்டச் சொட்ட, பக்கத்து போலீஸ் ஸ்டேஷனுக்கு காரை ஓட்டிச் செல்லச் செய்து, கம்ப்ளெயிண்ட் கொடுத்து, போலீஸ் துணையுடன் நானாவதி ஆசுபத்திரிக்குச் சென்று ஆபரேஷன் செய்து கொண்டிருக்கிறார். எப்படியோ பிழைத்து விட்டார்; படமும் பிழைத்துவிடும்; ஆனால் அண்டர்வர்ல்டும் பிழைத்துக் கொண்டிருக்கிறதே?



• ஹ்ருதிக் ரோஷன் - சோகமாக!

காவல் தெய்வம்!

கண்ணனைக் கும்பிட்டுக் கொண்டிருந்த கமலா தாஸ், இன்று அல்லாவே நல்லவர் என்கிறார். சென்ற டிசம்பரிலிருந்தே மதம் மாறிவிட்டவர், கமலா சுரய்யாவாக, முதன் முதலில் மும்பையில் அடி எடுத்து வைத்தார். சாபுசித்திக் கல்லூரியில் நடந்த ஒரு செமினாரில் கலந்து கொள்ள, பர்தா வெல்லாம் போட்டுக்கொண்டு வந்திருந்தார். மேடையிலும் இவர் ஒருவர்தான் பெண்; ஆடியன்சிலும்(3000), 20 பேர்தான் பெண்கள். ஒரு 40 நிமிஷத்திற்கு, கண்ணீர் மல்க, தன் மதமாற்றத்தை குடும்பத்தினரே கேலி

பூச்சிக்கு டாட்டா!



• வசந்தி

தஞ்சாவூர் ஓவியங்கள் காலத்தால் சிதிலமடையாமலிருக்க நவீன தொழில்நுட்பம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார் நெல்லை ராஜராஜேஸ்வரி நகரைச் சேர்ந்த வசந்தி பாண்டுரங்கன்.



''என்னிடம் மிகப் பழைய தஞ்சை ஓவியம் ஒன்று இருந்தது. அவ்வோவியம், திடீரென்று நிறம் மங்கி, ஆங்காங்கே பூச்சி அரித்து பார்க்கச் சகிக்காமலாகிவிட்டதால் ரொம்ப வருத்தப்பட்டோம்.

''பல ஆண்டுகளாக இந்த வகை ஓவியம் வரைவதிலேயே ஈடுபட்டுள்ள எனக்கு, இந்தச் சிதைபாட்டைத் தவிர்க்க ஏதாவது ஒரு வழி இல்லாமலா போய்விடும் என்கிற சிந்தனை ஏற்படவும், தீவிரமாக இறங்கினேன்.

''பலவிதப் பரிசோதனைகளுக்குப் பிறகு, வழக்கமான மரத்துக்குப் பதில் கரையான் கூட அரிக்க முடியாத 'NUWOOD' என்கிற மர போர்டில் வரைந்து பார்த்தேன். ஃபெவிகாலுக்கு பதில் எம்-ஸீல் என்கிற ஒட்டும் பசையை சரிகை வேலைப்பாடுகளுக்குப் பயன்படுத்தத் தொடங்கினேன்.

''இப்படியே போஸ்டர் கலருக்கு பதிலாக அக்ரலிக் வண்ணங்கள், பூச்சி வருவதைத் தடுக்க ஒரு பிரத்தியேக ஸொல்யூஷன் (இதன் ஃபார்முலாவைச் சொல்ல மறுக்கிறார்.) என ஆய்வு விரிவடைந்து கொண்டே போனது.

இப்போது நாங்கள் தயார் செய்யும் தஞ்சாவூர் ஓவியங்களுக்கு சிதைவு என்பதே கிடையாது!'' என்கிறார்.

சிறந்த தஞ்சை ஓவியத்துக்கான லலித் கலா அகடமி விருது பெற்றிருக்கும் வசந்தி பாண்டுரங்கனின் ஓவியங்கள் ரூ.3,000லிருந்து 30,000 வரை விலை போகின்றனவாம்.

— ரம்யா.

படங்கள்: வெங்கடேஷ்

பேசிய கதையைக் கூறினார். இஸ்லாம்தான் பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறது என்றார். தன் உடல்நிலையும் வெகுவாக (மதமாற்றத்தால்) தேறி வருவதாகச் சொன்னார். எல்லாம் சரி... அதற்கப்புறம் தனக்கும் சல்மான் ருஷ்டி, தஸ்லிமா நஸ்ரீன் முதலானவர்களுக்கு வருவது போல் கொலை மிரட்டல்கள் வருவதாகவும்... தான் ஒரு உண்மையான முஸ்லிமாக மரிக்க விரும்புவதாகவும் சொன்னாரே...! ஹே ராம்... ஸாரி ஹேயல்லா!

மூர்த்தியின் கீர்த்தி!

அமெரிக்காவில் ஒரு ஸ்டாக் மார்க்கெட்டை அணுகினாராம் ஒரு IT கம்பெனிக்காரர். தங்கள் கம்பெனியை ரெஜிஸ்தர் செய்யச் சொல்லி, தன் பெயர் 'கிரிஸ் மாட்' என்றாராம்; பதிவு செய்து கொண்டிருந்த க்ளார்க் தலையை நிமிர்த்தி, "ஹேய்... உன் பேரை கிரிஷ்ணமூர்த்தின்னு மாத்திக்கோயேன் மேன்; உன் கம்பெனியின் ஷேர் ஓஹோன்னு போகும்'' என்றானாம்! இந்தக் கதையை, பத்திரிகையாளர்களுக்கு அவிழ்த்து விட்டவர் பிரமோத் மஹாஜன்-ஐ.டி. மினிஸ்டர்! 'ஸிலிகான் வாலி'யில் நம்மவர்களுக்கிருக்கும் மதிப்பை பலபடப் புகழ்ந்து விட்டு, 'இனிமேல் அமெரிக்காவிலிருந்து அமெரிக்கர்களே இந்தியாவை நோக்கிப் படையெடுத்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை' என்று போட்டாரே ஒரு போடு! மிலெனியக் கனவுகள் என்ற புத்தகம் எழுத ஆரம்பித்திருக்கிறார் போலும்!

பொங்கிய மன்றம்!

ஆற அமர சமைத்திருந்தாலும், செம்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் மகளிர் அணியின் பொங்கல் (ஜன.23ம் தேதிதான் பொங்கல் விழா கொண்டாடினார்கள்.) சுவையாகவே இருந்தது. அதுவும் சிவசங்கரியே பரிமாறுகிறார் என்றால் விருந்துண்பவர்களுக்குக் கேட்கவா வேண்டும்? வழக்கம்போல் இராம லக்ஷ்மணர்களையும் கண்ணகி மாதவியரையும் வம்புக்கிழுக்காமல், "மண முறிவிற்குக் காரணம் ஆணா? பெண்ணா?'' பெருகி வரும் முதியோர் இல்லங்களுக்குக் காரணம் இளைய தலைமுறையா? வயதானவர்களா?'' என்ற தலைப்புகளில் பட்டிமன்றமும் மக்கள் மன்றமும் வைத்தது. மும்பையைப் பொறுத்தவரை கொஞ்சம் புரட்சிப் பொங்கல்தான்! ஆனால் இரண்டிற்குமே, எந்தப் பக்கமும் சாயாமல், பொதுவான தீர்ப்பை வழங்கிவிட்டாரே சிவசங்கரி?

— ஜெயஸ்ரீ ராஜ்

திருக்குறள் புடவை!

• ஹம்ஸதமயந்தி

'சின்னஞ்சிறு கிளியே', 'ஐஸ்வர்யப் பூக்கள்', 'ஜீன்ஸ்', 'ஹம்ஸ தமயந்தி' – என்ன இதெல்லாம்?

சினிமா தலைப்புகளல்ல. புடைவைகளின் பெயர்கள்.

நெல்லை ஆரெம்கேவி புடைவைக் கடையில் இப்படி 'தீம் புடைவைகள்' தயாரிப்பும் விற்பனையும் சமீபத்தில் சூடுபிடித்திருக்கிறது.

பாரதியாரின் சின்னஞ்சிறு கிளியே பாடலுக்கு அபிநயம் பிடித்து, புகைப்படமெடுத்து, அதன்படி 33 அபிநயங்களில் அந்தப் பாடல் வரிகளை வரைந்து புடைவை பார்டரில் டிஸைனாக்கியிருக்கிறார்கள். பளபள ஜரிகையில் இளம் பெண்ணின் நர்த்தன டிஸைன், விலையையும் மீறி (ரூ. 9,950) மக்களைக் கவரவே அடுத்தடுத்து இப்படி ஒரு 'தீம்' அடிப்படையில் புடைவைகள் தயாரிக்க ஆரம்பித்ததாகச் சொன்னார் உரிமையாளர்களுள் ஒருவரான சிவகுமார்.

"பத்மநாபபுரம் அரண்மனைக் கூரையில் 90 விதமான பூக்கள் அணிவகுத்த கோலம் ஒன்றைக் கண்ட போது ஆச்சர்யமடைந்தேன்.







தொண்ணூறு என்றால் சரியாகத் தொண்ணூறு விதம்! ஒரு பூ கூட இன்னொன்றின் சாயலில் இல்லை. 'இது என்ன?' என்று அங்கிருப்போரைக் கேட்டபோது ஐஸ்வர்யம் சேர்க்கும் பூக்கள் என்று பதில் சொன்னார்கள்.

"புடைவை வியாபாரம் என்பது சென்டிமென்ட் சம்பந்தப்பட்டதல்லவா! அந்தப் பூக்களை அப்படியே படமெடுத்து வந்து, எங்களது நெசவு டீமிடம் தந்து தயார் செய்யச் சொன்னதன் விளைவுதான் ஐஸ்வர்யப் பூக்கள் புடைவை."

இந்தப் புடைவை இவ்வாண்டின் சிறந்த டிஸைன் என விருது பெற்றிருக்கிறது.

உலக அதிசயங்கள் ஏழைத் தாங்கி நிற்கும் புடைவைக்கு 'ஜீன்ஸ்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்!

தமயந்தி, நளன் கதையை அங்குலம் அங்குலமாகச் சொல்லும் புடைவை ஹம்ஸதமயந்தி. 42,950 ரூ. விலை என்பது இதன் செய்நேர்த்தியின் முன் சாதாரணமாகத்தான் தெரிகிறது!

"தஞ்சை அரண்மனையில் 350 வருடம் பழமையான ஒரு புடைவையைப் பார்த்தேன். அந்த டிசைனும் வண்ணச் சேர்க்கையும் நெய்யப்பட்டவிதமும் இன்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவை!

"இதை அப்படியே மறுபடி புதிய பதிப்பாகக் கொண்டு வந்தால் என்ன என்று தோன்றியது. ஆனால் செயல்முறை எளிதாக இல்லை! இந்தப் பணியில் ஈடுபட்ட நெசவாளி, நான்கு புடைவைகள் மட்டும் நெய்து விட்டு சொல்லாமல் ஓடி விட்டார்!" என்கிறார் சிவகுமார்.

கிருஸ்துமஸ் புடைவை, மிலெனியம் புடைவை (2000 விதமான பூக்களுடன்!) என சீஸனுக்கேற்பவும் புடைவை உற்பத்தி செய்யும் சிவகுமார் - விஸ்வநாதன் சகோதரர்களின் சமீபத்திய சாதனை - திருக்குறள் புடைவை.

குமரி முனையில் வள்ளுவருக்கு சிலை திறந்த போது, அதே மேடையில், அதே கலைஞர் கையால் இவர்கள் 18 திருக்குறள்களுக்குப் புடைவையில் ஓவிய வடிவம் கொடுத்து வெளியிட்டிருக்கிறார்கள்! புடைவையின் நடுவே மெகா சைஸில் வள்ளுவர் கோட்டம்!

"இயந்திரம் செய்ய முடியாத சில மிச்ச முள்ள விஷயங்களை வைத்துத்தான் புடைவைத் துறையில் பிழைக்க முடியும். புதுமை விரும்பும் இளம்பெண்கள் இப்போதெல்லாம் விலையைப் பார்ப்பதில்லை என்பதுதான் ஒரே சந்தோஷம்!" என்கிறார் சிவகுமார்.

— விசித்திரக்குள்ளன்

படங்கள்: **வெங்கடேஷ்**

காசியில் அன்னதானம் செய்வோம்! ஆனந்த வாழ்வு பெறுவோம்!



காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் மாதாமாதம் அமாவாசை அன்று புண்ணிய ஸ்தலமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...



பேரன்புடையீர்! வணக்கம். தாங்கள் எல்லா நலன்களும் பெற்று நலமுடன் வாழ ஸ்ரீ அன்னபூரணி அன்னையிடம் பிரார்த்தனை செய்கிறோம்.

காசி நகரத்தைப் பற்றியும் காசியின் புனிதத்தைப் பற்றியும் அறியாதவர்கள் இருக்க முடியாது. இந்துக்களின் புனித மண்ணில் புண்ணிய பூமியில் 'அன்னபூரணி' தாயே கோயில்கொண்ட திருத்தலத்தில் அன்னதானம் செய்வது தானத்திலேயே சிறந்த தானமாகும். மாதாமாதம் அமாவாசையில் காசியில், அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதோடு இந்தப் புனிதப்பணியில் நீங்களும் பங்குகொள்ள அன்போடு அழைக்கிறோம்.

நன்கொடைகள் அவரவர் விருப்பத்திற்கேற்ப பணமாகவோ அல்லது பொருளாகவோ (அரிசி, நெய், பருப்பு வகைகள், புளி) அனுப்பி வைக்கலாம்.

அன்னதான சேவையில் பங்குபெறும் ஆன்மீக அன்பர்கள் நன்கொடையை M.O/ D.D Cheque காசோலையாக (Sri Annapoorani Annadhana Arakkattalai, Chennai - 4) என்ற பெயருக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைத்து ரசீது அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பொருள்கள் அனுப்புவோர் ABT / TVS மயிலாப்பூர், சென்னை - 4க்கு அனுப்பி வைத்து எங்களுக்கு தெரிவித்தால் நாங்கள் உடனே Delivery எடுத்துக்கொள்கிறோம்.

* தாங்கள் கொடுக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஏற்றுக்கொள்கிறோம்.
* ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும்.
* ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும்.
* ரூ.2000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும்.
* ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் ஆயுள் முழுவதும் அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமணநாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் போன்றவற்றை தெரிவித்தால் தாங்கள் விரும்பும் நாட்களில் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும் காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்ரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் மஞ்சள் குங்குமமும் பிரசாதமாக அனுப்பி வைக்கப்படும். இதை தாங்கள் பூஜையறையில் வைத்து பூஜிக்கலாம்.

பகவத்கீதை

* ரூ.5000/- அனுப்பும் அன்பர்கள் சார்பாக ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்து வாழ்நாள் முழுவதும் (Life Long) பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்பொழுது எந்தநேரமும் முகவரிக்கும் மாற்றம் செய்து தொடர்ந்து பிரசாதம் மற்றும் 'ஆன்மீகம்' மாத இதழ் அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் புத்தாண்டு ஜனவரி முதல் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1022 பக்கங்கள் கொண்ட விரிவான விளக்கமான (தமிழ்) பகவத்கீதையும் அனுப்பி வைக்கப்படும்.

அன்னதான கைங்கர்ய அன்பர்களுக்கு சிறப்பு சேவை:

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்ட பிரதானம் காசியிலும், (ஸ்ரீ விஷ்ணு பாதம்) கயாவிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக மிகவும் சிறப்பான முறையில் "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை" மூலம் காசியிலும், கயாவிலும் புரோகிதர்களைக் கொண்டு பித்ருக்களுக்கு பிண்ட பிரதானம் செய்யப்படுகிறது.

காசியில் பித்ருக்களுக்கு பிண்ட பிரதானம் செய்ய ரூபாய் 500/- ம், கயாவில் (விஷ்ணுபாதம்) பித்ருக்களுக்கு பிண்ட பிரதானம் செய்ய ரூபாய் 1000/- ம் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிண்ட பிரதானம் செய்பவர்களுக்கு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், கயாவில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ விஷ்ணு பாதமும் பிரசாதமாக வழங்கப்படும். இதை தங்கள் பூஜையறையில் வைத்து பூஜித்து விசேஷம் பெறலாம்.

நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.

Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை

SRI ANNAPOORANI ANNADHANA ARAKKATTALAI (Regd.)

68, Nadu Street, (Opp. Kapaleeswarar Koil) Mylapore, Chennai - 600 004. Ph : 4958086 / 4959302



முதல் மழைத் துளி

பிரபஞ்சன்

முக்கியத் தெருவில் இருந்து, சட்டென்று ஒதுங்கி, பள்ளம் பறித்துக்கொண்டு போன ஒரு இடத்தை வந்து சேர்ந்தாள் பாரதி. ஊரைப் போலவே இல்லாமல் இருந்தது அந்த இடம். உடைந்து சிதறிய பாட்டில் ஓடுகள். குப்பை மலைகள். ஏராளமான நாய்கள். குப்பென்று வீசிய அழுகல் வாசனை அல்லது நாற்றம். அங்கிருந்து குடிசைகள் தொடங்கின.

இந்தச் சூழ்நிலையில் மனிதர்கள் வாழ நேர்ந்த அவலம்; எப்போதும் போல இப்போதும் அவளுக்கு ஏற்பட்டது. சுதந்திரம் பெற்ற கொடிகள் பல. பலவிதமான வண்ணங்கள், கிழிசலுடன் பறந்து கொண்டிருந்தன. தலைவர்கள் யாராவது, அந்தக் குடிசைகளில் ஒன்றில் இருக்கிறார்களா என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டாள், பாரதி. யாரும் இல்லை.

குடிசைகளின் பக்கத்தில் வெற்று உடம்போடு விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள், அவளை ஆச்சர்யத்துடன் பார்த்தன. ஒரு இளைஞன், அந்தச் சூழ்நிலைக்குச் சற்றும் பொருந்தாமல், ஜீன்ஸ் பேன்ட்டும், மலிவான வெள்ளை ஷூக்களும் அணிந்து தோற்றம் அளித்தான். நவீன ஹீரோ ஒருவரின் தலைமுடியைப் போல் அவன் தலைமுடியும் வளர்ந்து காணப்பட்டது.

"இன்னா, யாரைப் பார்க்கிறீங்க?" என்று அவன் பாரதியைக் கேட்டான்.

"செங்கேணியைப் பார்க்கணும்."

"செங்கேணின்னா? அந்தக் குப்பைக்கார ஆளுமவளா?"

"இருக்கும்."

அவன் ஒன்று போலவே இருக்கும் குடிசைகளைக் கடந்து நடந்தான். ஓரிடம் வந்ததும் நின்றான்.

"இதான்."
ஒரு குடிசையைச் சுட்டிக்காட்டினான்.
அரவம் கேட்டு, 'யாரு' என்றபடி ஒரு மத்திய வயதுள்ள மனிதர் ஒருவர் வெளியே வந்தார்.
"செங்கேணி அப்பா?"
"ஆமா... ஆரு நீங்க?"
"நான் செங்கேணியோட பாட்டு வாத்தியார்."
"வாங்க... வாங்க..." என்றபடி அந்த மனிதர், பாரதியைக் குடிசைக்குள் அழைத்துச் சென்றார்.
பாய் ஒன்று போட்டு அமரச் சொன்னார். அது, கிழியாத இடமாகப் பார்த்து அமர்ந்தான், பாரதி.
குடிசைக்குள் இருட்டு.
தெருக் கதவை





"ஸாரிடா... உன்னோட கல்யாணத் துக்கு என்னால வர முடியலை!"

"அதனாலென்ன... மொய்ப் பணத்தை நீ இப்ப குடுத்தா நான் வேண்டாம்னா சொல்லப் போறேன்!"

– புளியரை கணேசன்

அகலத் திறந்து வைத்தாலும் இருட்டு. ஒரு பெண் என்று கட்டியிருந்த சேலையால் அறியத்தக்க ஒரு மனுஷி எழுந்து அமர்ந்தாள். இருமினாள்.

"இவங்க, செங்கேணி அம்மாவா?"

"ஆமாங்க" என்றாள் அந்த அம்மாள். ஆள், கதவோரம் நின்று கொண்டேயிருந்தார்.

"உட்காருங்களேன்."

"இருக்கட்டும்மா. சொல்லியனுப்பியிருந்தா நானே வந்திருப்பேனே?"

"நான் வரக் கூடாதா, என்ன?"

"அதுக்கில்லை" என்றார் அவர். கூச்சம் தொனித்தது அவர் குரலில்.

பாரதி அவரிடம் கேட்டாள்.

"ஆமா. உங்க பெண்ணைப் பாட்டு கத்துக்க அனுப்ப மாட்டேன்னு சொன்னீங்களாமே?"

அவர், தரையைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

"அவளுக்கு என்னத்துக்கு பாட்டும் கூத்தும்?"

"ஏன், இவ என்ன பாவம் பண்ணா? இந்தக் குழந்தைக்குப் பாட்டு நல்லா வருது. ஆர்வமும் இருக்கு. கத்துக்கட்டுமே."

அந்த அம்மாள் வாய் திறந்தாள்.

"கூலி வேலைக்குப் போனா, வீட்டு வேலைக்கு போனா, நாலு துட்டு கிடைக்கும்னு சொல்லுது, இது."

"வேலைக்குப் போனா என்ன கிடைக்குமாம்?"

"நான் ஒன்றுக்குப் பத்து ருவா கிடைக்கும், சோறு போட்டு."

பாரதி சட்டென்று முடிவெடுத்தாள்.

"சரி. செங்கேணியை எங்க வீட்டுல வேலைக்கு வச்சுக்கறேன். மாசம் முந்நூறு கொடுத்துடறேன். சோறும் போட்டுடறேன். சரியா?"

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அந்த அம்மாள் தலைகுனிந்துகொண்டு சொன்னாள்.

"ராணியாட்டம் பொண்ணு. படிக்கணும்னு நான் ஆசைப்படறேன். அந்தக் குழந்தையை வீணடிக்குதும்மா இந்த ஆள்..."

"பரவாயில்லை."

பாரதி எழுந்தாள்.

"செங்கேணி தவறாம வரணும். மாசம் முதல் தேதி தவறாம உங்களுக்குப் பணம் கிடைச்சுடும். சரியா?"

அவள் வெளியே வந்த போது, அப்பாவின் மறைவில் செங்கேணி நிற்பது தெரிந்தது. அவள், அழுதுகொண்டிருப்பது தெரிந்தது.

"நீ என்னத்துக்கு அழறே?"

அவள் பதில் சொல்லாமல் கண்களில் கண்ணீர் வழிய நின்றாள்.

"சரி, வா." என்றபடி முன்னே நடந்தாள் பாரதி.

செங்கேணி, இரண்டடி பின்னாலே வந்துகொண்டிருந்தாள்.

"சந்தோஷம்தானா?"

"உம்."

"என்னத்துக்கு அழுதே?"

"ஒன்றும் இல்லேம்மா."

"இனிமே ஒழுங்கா வகுப்புக்கு வருவே, இல்லையா?"

"கட்டாயம் வருவேன்."

வீடு வந்து சேர்ந்தார்கள்.

வெயில் கடுமை. உச்சியைப் பிளந்தது. அடுப்பிலிருந்து எழுந்து வந்தது காற்று. வியர்வையில் தெப்பலாக நனைந்து போனாள், பாரதி.

"கொஞ்சம் தண்ணி எடுத்தா" என்று சொல்ல நினைத்தாள் பாரதி. தண்ணீர்க் குவளையுடன் அவளுக்கு எதிரே வந்து நின்றாள், செங்கேணி. மனம் நிறைந்து போக அவளைப் பார்த்தாள் பாரதி.

"புத்திசாலிப் பெண்ணடி, நீ?"

தலையைக் கவிழ்ந்துகொண்டு சிரித்

தான் செங்கேணி.

எங்கு பிறந்தால் என்ன? மனித உள்ளதம் எப்படியெல்லாம் செயல்படுகிறது?

"அக்கா"

"என்னடி?"

"மாமா கோவிச்சுக்கிட்டு போயிட்டாரா?"

"ஏன்?"

"அன்னைக்கு, அந்தச் சினிமாக்காரர் வந்தப்போ, ரொம்ப சண்டை போட்டாரே?"

"வருவார்."

"எப்போக்கா?"

"தெரியலை. எல்லாத்துக்கும் ஒரு காலம். மரம் பழுக்க ஒரு காலம். மனம் பழுக்க ஒரு காலம்."

"தொடர்ந்தாப்பல பாடுவீங்க இல்லை, அக்கா?"

"ஏன், பாடுவேன்."

செங்கேணி சும்மா இருந்தாள்.

"என்னடி யோசிப்பு?"

"எனக்கு மனசுல ஒண்ணு தோணிச்சு அக்கா."

"சொல்லேன்."

"சொன்னா வைய மாட்டீங்களே?"

"சிச்சி. அசடு. தைரியமா பேசு."

"பாடாட்டா, நீங்க வயசாகி செத்துப் போயிடுவீங்கன்னு நினைக்கிறேன்."

"ஏன் அப்படி நினைக்கிறே?"

"தெரியலக்கா... தோணிச்சு."

பாரதி பிரமையில் ஆழ்ந்திருந்தாள். இது எப்படி? எப்படி இந்தக் குழந்தைக்கு இப்படித் தோணும்?

"நான் பாடட்டாக்கா?"

"உம் பாடு."

செங்கேணி, சுருதிப் பெட்டியை எடுத்து வைத்துக்கொண்டு, சுருதி சேர்த்துக் கொண்டு, ஆரோகணம் அவரோகணம் பாடினாள். பசை போல் சுருதியோடு ஒட்டிக்கொண்டது அவள் குரல். என்ன வரம் இது? என்ன அருமை இது?

செங்கேணி, பாட்டுக்குள் லயித்துப் போனவளாகப் பாடினாள்.

"எனக்கு அருள் தா உமையே
பனிமலை நாதன் பக்கத்திருக்கும்
பார்வதியே, தயாநிதியே...
கணம் தோறும் உன் நினைவே
கனவிலும் நினைவிலும் உன் திரு
உருவே
நிற்கையில் நடக்கையில் உன்னுடனே
என்று
நினைத்திடும் பக்குவம்... நித்ய
சிலாக்கியம்
தினம் தினம் இசை வேள்விகள்
செய்யவே
சிந்தனை செயலெலாம் சங்கீத மாகவே
வணங்கிடும் அடியார் துன்பம்
போக்கவே
வாக்கினில் மறையாய் வரமருள்
வாணியே..."

பாடி முடித்துப் பெட்டியை மூடி, அறையில் கொண்டு போய் வைத்தாள்.

"நான் ஸ்கூலுக்குப் போய், குழந்தையை அழைச்சுட்டு



• தளவாய் ராமசாமி

காலம் சென்ற ரசிகமணி டி.கே.சியின் 'வட்டத் தொட்டி' பற்றி அறியாத கல்கி வாசகர்கள் இருக்க மாட்டார்கள்.

டி.கே.சியின் பேரன் முறையான தளவாய் ராமசாமி வட்டத்தொட்டியின் வேறொரு வடிவத்தை நெல்லையில் 15 வருடங்களாக நடத்தி வருகிறார்.

'பொருநை இலக்கிய வட்டம்' என்கிற பெயரில் வாரந்தோறும் ஞாயிறு அன்று இவரது விசாலமான வீட்டின் ஹாலில் நடைபெறும் இலக்கியக் கூட்டங்களுக்கு 60, 70 பேர் தவறாமல் வருகிறார்கள் என்பது ஒரு இலக்கிய உலக ஆச்சர்யமென்றால், இன்னொரு ஆச்சர்யம், இவர்கள் நவீன இலக்கியத்தின் பக்கம் தலை வைத்துப் படுக்காமல் இருக்குறன், திருமந்திரம், குறுந்தொகை போன்ற பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றி மட்டுமே ஆய்வுரைகள் நிகழ்த்திக் கொண்டிருப்பது!

795 கூட்டங்கள் இதுவரை நடந்திருக்கின்றனவாம். 15 ஆண்டுகளில் ஒரு ஞாயிறு கூடத் தவறியதில்லை என்பது தான் விசேஷம்.

– ரா.

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பார்கள். ஆறு இருக்கிற ஊரில் அதைப் பராமரிக்கத்தான் ஆளில்லாமல் போகிறது.

நெல்லை நகர் மத்தியில் ஓடும் தாமிரபரணியின்



தைப்பூச மண்டப வ்யூ இது! இந்த மண்டபத்தில் முன்பு திருவிழா – உற்சவங்கள் அமர்க்களப்படும்.

இன்று? சமூக விரோதிகளின் ஏக போக சாம்ராஜ்ஜியமாகிவிட்டது என்று சொல்லி வருத்தப்படுகிறார்கள் நெல்லைவாசிகள்.

சாக்கடைக் கழிவுகளும் பிளாஸ்டிக் குப்பைகளும் பன்றிகளும் நிறைந்துவிட்ட ஆற்றுப் பகுதியில் குளித்து, துணி துவைத்துப் போடும் மக்கள், ''கமிஷனர் மனசு வெச்சா இதை சரி பண்ணிடலாங்க'' என்கிறார்கள்.

நாம் சென்றிருந்தபோது கமிஷனர் சுதீப் ஜெயின் நகரைச் சுத்தமாக வைத்திருக்கும் கலையைக் கற்றுவர, சில கவுன்சிலர்களுடன் 'சூரத்'துக்குச் சுற்றுப்பயணம் சென்றிருந்தார்.

– ஜக்கு

படம்: வெங்கடேஷ்

வரலாமாக்கா?''

''தாத்தா போயிருக்காங்க.''

''என்னத்துக்கு அக்கா பெரியவங்களை அனுப்பறீங்க?''

''ஏன்?''

''நான் போறேனே.''

''உனக்கும் ஸ்கூல் இருக்கும்தானே?''

''இருக்கு. எனக்குச் சங்கீதம் சொல்லித் தர்றீங்க. அதோடு, பணமும் தரப் போறீங்க. நான் வேலை செஞ்சாத்தானேக்கா நல்லது?''

''உன்னைச் செய்யச் சொன்னேனா?''

''செஞ்சா என்ன தப்பு?''

''அசடே. நீ ஒன்னும் வேலைக்காரி இல்லை. என்னோட சிஷ்யை.''

''சிஷ்யர்கள்தான் புடைவை தோச்சிப் போடு வாங்கன்னு அன்னிக்கு நீங்க சொன்னீங்களே.''

''என்ன சொன்னேன்?''

''குருக்களுக்கு வேலை செஞ்சு, பாடம் படிச்சாங்களாமே, அந்தக் காலத்துல.''

''அது அந்தக் காலம். இப்போ நடக்கிறது வேற காலம்.''

''இது என்ன காலம்?''

''நிகழ்காலம். போடி... ஒரு காப்பி போட்டுக்கொண்டா. தலையை ரொம்ப வலிக்குது...''

கொண்டு வந்தாள். உடனே உள்ளே போனான்.

சற்று நேரத்துக்குள் உப்புமா கொண்டு வந்தாள்.

''இது என்ன?''

''உங்க முகத்தைப் பார்த்தா பசிக்கிற மாதிரி தெரியுது. அதனாலதான்.''

பாரதி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். தன் கண்களில் கண்ணீர் அரும்புவதைச் செங்கேணி பார்க்கக் கூடாது என்று நினைத்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம், அப்பா வந்து சேர்ந்தார். குழந்தை, தோட்டம் பார்க்க ஓடியது.

அப்பா முகம் சரியாக இல்லை.

''என்னப்பா?''

''உன் புருஷன் நோட்டீஸ் அனுப்பியிருக்கார். இந்தா.''

அவள் அதைப் படித்தாள்.

(தொடரும்)



இதயத்தில் அரசிய தீக்குச்சிகள்!

சமீபத்தில் மாநிலங்களவை உறுப்பினராகியிருக்கும் திருச்சி சிவாவைச் சந்தித்து, 'அரசியல் தவிர வேறெதாவது பேசலாமா?' என்று கேட்டோம். உற்சாகமாகச் சம்மதித்தார்.

"குறும்புகள் செய்யாத மாணவப் பருவமா? பள்ளியில், கல்லூரியில் குறும்பிலிருந்து கலாட்டா வரை ஏதாவது செய்திருக்கிறீர்களா?"

''கல்லூரியில் முதல் நாள் முத்தமிழ் விழா. அதற்கு நானும், என் நண்பர்கள் (ஐந்து பேர்) குழுவும் 'தமிழ் உடை' உடுத்தி கல்லூரிக்குள் உலா வந்தோம். வேறொன்றுமில்லை. வெள்ளை வேட்டி, வெள்ளை முழுக்கைச் சட்டை, தோளிலே ஒரு அங்கவஸ்திரம் இவ்வளவுதான். அன்று முழுவதும் நேரில் எதிர்ப்படுவோரிடம் நாங்கள் பேசிய 'தூய' தமிழால் அனைவரும் அசந்து போனார்கள்! மறுநாள் கல்லூரி ஆண்டு விழா. அனைவரும் கோட்-சூட்-டை சகிதமாக அரங்கிலே 'டிப்-டாப்' ஆக வலம் வந்தோம். அன்று முழுவதும் நாங்கள் பேசிய நுனி நாக்கு ஆங்கிலம் கேட்டு எல்லாரும் மிரண்டு போனார்கள்! இது மாதிரி குறும்புகள்தான் வழக்கம்.

''ஆனால் மனத்தில் ஆழப் பதிந்த சம்பவமாக இதைச் சொல்லலாம் : எம்.ஏ., ஆங்கில இலக்கிய இறுதியாண்டு மாணவன் நான். அப்பொழுது வயது இருபத்தியொன்று (21). இறுதித் தேர்வுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக அவசர நிலைப் பிரகடனத்தால் திருச்சி மத்தியச் சிறையில் கைதியாக அடைக்கப்பட்டு விட்டேன். மிகவும் கடுமையான அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டிருந்த காலம். நாட்கள் செல்லச் செல்ல எங்கே தேர்வு எழுத முடியாமல் போய்விடுமோ என்கிற அச்சம் எனக்குள். முறைப்படி அனுமதி பெற்று தேர்வு எழுதச் சென்று வந்தேன், சிறைக்கு உள்ளேயிருந்து! கல்லூரியில் முதல்வர் அறைக்கு அருகே எனக்கு மட்டுமென்று தனியாக ஓர் அறை. அதில் ஒரு மேசை, ஒரு நாற்காலி, வினாத்தாளுடன் நான். என்னைச் சுற்றிலும் துப்பாக்கி ஏந்திய வண்ணம் காவலர்கள் ஆறு பேர். எந்த இடத்தில் இளமைத் துள்ளலுடன் சுற்றித் திரிந்தேனோ, அதே இடத்தில் ஓர் அறைக்குள்ளே சிறைக் கைதி மாணவனாய் இருந்தேன்! அரசியல் பாதையில் அடியெடுத்து வைக்கத் தொடங்கியது அந்த அறைக்குள்ளிருந்துதான்!''

"இளமைக் காலத்தில் படிப்பா, அரசியலா என்று வீட்டில் ஒரு போராட்டமோ



திருப்பதியைச் சேர்ந்தவர் கே.வி. ராமன். அவரது குடும்பத்தில் ஏழு பேர். வருமானத்துக்கு வழியில்லை. பார்த்தார். காந்திஜியைப் போல வேடமிட்டுக் கொண்டு, பிளாட்பாரத்தில் மணிக்கணக்கில் நிற்கிறார். சில்லறை சேருகிறது. பிழைப்பு நடக்கிறது.

காந்திஜி போல மட்டுமில்லாமல், அன்னை தெரசா, சுபாஷ் சந்திரபோஸ் போலவும் வேடமிட்டுக் கொள்கிறார்.

காந்தி எப்படியெல்லாம் உதவுகிறார்!

— சி.எம்.

அல்லது பூகம்பமோ வெடித்ததுண்டா?"

"போராட்டமும் நடக்கவில்லை; பூகம்பமும் வெடிக்கவில்லை! மாறாக, என் தாயார் எப்பொழுதும் என் செயல்களுக்கு அன்புடன் வழிகாட்டினார் என்றுதான் சொல்ல வேண்டும். எனக்குக் கிட்டும் பெருமைகளுக்கு உள்ளே என் தாயார், என் துணைவியார் இருவரின் அன்பும் ஆதரவும் புதைந்து கிடக்கின்றன."

''அரசியல்வாதியாகி விட்டால் 69 சதவீதத்துக்கும் அதிகமான வாழ்வைப் பயணத்துக்குத்தானே தரவேண்டியிருக்கும்? மறக்க முடியாத பயணம்?"

''பத்தாண்டுகளுக்கு முன்பிருக்கும். சென்னையிலிருந்து கோவை செல்லும் துரித் ரயிலில் பயணம். பகல் பொழுது. புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தேன். ஆர்டர் செய்தபடி பிளாஸ்டிக் கோப்பைகளில் காப்பி வந்து சேர்ந்தது. அருந்திய பின்னர் கோப்பையை விட்டெறியப் போகும் நேரத்தில் ஓடி வந்து ஒரு சிறுவன் எல்லோரிடமும் இருந்த பிளாஸ்டிக் கோப்பைகளைப் பெற்றுச் சென்றான். பரவாயில்லை. சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கருதி பிளாஸ்டிக் பொருட்களை அப்புறப்படுத்தவென்றே ரயில்வே நிர்வாகம் சிறுவர்களை அமர்த்தியுள்ளதுபோலும் என நினைத்துக் கொண்டிருந்தேன். சில நிமிடங்கழித்து அந்தப் பெட்டியின் கடைக்கோடியில் நான் கண்ட காட்சி என் கண்களை விட்டு இன்னமும் அகலவில்லை. ஒவ்வொரு பிளாஸ்டிக் கோப்பையிலும் இறுதியாய்த் தங்கிப் போன 'ஒரு மிடறு' காப்பியை ஒவ்வொன்றிலிருந்தும் சேகரித்து எடுத்து ஒரு கோப்பையில் அவனும், இன்னொரு கோப்பையில் ஒரு நான்கு வயதுச் சிறுமியும் குடித்துக் கொண்டிருந்தார்கள். என் விழிகளை மூடிக் கொண்டு உள்ளுக்குள் கரைந்து போனேன். ஒரு பயணத்தின் நடுவே என் இதயத்தின் ஓரங்களில் புதிய தீக்குச்சிகளை உரசிப் போட்டான் அந்தப் பத்து வயதுச் சிறுவன்!"

"நிறையப் படிப்பீர்களாமே?"

"புத்தகங்கள் படிப்பது மட்டுமே எனது பொழுதுபோக்கு. நேசித்த புத்தகங்கள் என்றால் தமிழ், ஆங்கிலம் இரண்டிலுமே பட்டியல் வெகு நீளம் போய் விடும். புத்தகங்களைப் படித்து விட்டு உறங்காமல் தவித்த இரவுகள் பல. தமிழில் அண்ணா, கலைஞருக்கு அப்பால் என்னை மிகவும் ஈர்த்தவர்கள் கா.ஸ்ரீ.ஸ்ரீ. அவர்களின் மொழி பெயர்ப்பால் நமக்குக் கிடைத்த அற்புதமான காண்டேகர், தி. ஜானகிராமன், அமரர் கல்கி, சாண்டில்யன், நா.பா., மு.வ., அகிலன். இன்றைய எழுத்தாளர்களில் சுஜாதா, பிரபஞ்சன், சிவசங்கரி, பாலகுமாரன் ஆகியோர்.

''ஆங்கிலத்தில் ஜான்டன், கீட்ஸ், ஷெல்லி, வேர்ட்ஸ்வொர்த், கோல்ரிட்ஜ், டி.எஸ். எலியட் போன்ற கவிதைக்காரர்கள், ஷேக்ஸ்பியர், பெர்னார்ட்ஷா, மார்லோ போன்ற நாடகாசிரியர்கள்."

"நாடு முழுக்க சுற்றியிருப்பீர்கள். கவர்ந்த இடம்?"

"சொன்னால் ஆச்சர்யம் அடைவீர்கள்! ஒன்று நான் படித்த இ.ஆர். மேனிலைப் பள்ளி. என்றைக்கும் நான் தான் பணிந்து வணங்கும் ஆசிரியப் பெருமக்கள் உலவும் உயர்ந்த குருகுலம் அது. இன்னொன்று பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி. கனவுகள் நிறைந்த கல்லூரி வாழ்வின் வசந்த மண்டபம் அது. பெரியார் கல்லூரியில் இருக்கும் அந்த ஆலமரத்தடியில் அமர்ந்து விட்டால் போதும்; அங்கு கிடைக்கும் மன அமைதி எனக்கு வேறெங்கும் கிடைத்ததில்லை!"

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

54

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

சம்ஸாரம் என்பது பெரிய சமுத்திரம்! அதிலே மூழ்கி கரை தெரியாமல் அவஸ்தை பட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலே பலவிதமான போக மயக்குகள். விஷயங்களால் ஈர்க்கப்பட்டிருக்கிறோம். விஷயங்கள் என்பவை மிகக் கொடியவை. சாஸ்திரம் சொல்கிறது – விஷயங்கள் குறித்து :

விஷம் என்பதாக ஒன்று. விஷயம் என்பது இன்னொன்று. இவை இரண்டுக்குமான வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். இவற்றிலே எது நல்லது? எது உயர்ந்தது என்று விசாரித்தால் விஷமே உயர்ந்தது என்று சொல்லிவிட்டது சாஸ்திரம்!

விஷயம் என்பது உலகிலே உள்ள பொருட்கள். இந்த விஷயங்களையெல்லாம் காட்டிலும் விஷமே உயர்ந்தது என்று ஏன் சாஸ்திரம் சொல்ல வேண்டும்?

விஷம் இருக்கிறதே, அதை எவன் பருகுகிறானோ அவனை மட்டுமே அது அழிக்கும். மற்றவர்களை அழிக்காது. விஷயம் இருக்கிறதே... அது அவனையும் அழிக்கும்; அவனைச் சேர்ந்தவர்களையும் அழிக்கும். அதுவும் ஸ்மரண மாத்திரத்திலேயே அழிக்கும்!

ஒரு இடத்திலே விஷம் இருக்கிறது. அங்கே விஷம் இருக்கிறது என்று ஸ்மரித்தால் – நினைத்தபடியே இருந்தால் – அந்த விஷம் இவரை அழிக்குமா என்றால் அழிக்காது. ஆனால், விஷயமிருக்கிறது பாருங்கள்... அதை நினைக்கையிலேயே அழிக்கும். ஸ்மரண மாத்திரத்தினாலேயே அழிக்கும்! ஸ்மரண மாத்திரத்தினாலே இவனைக் கெடுத்து, மற்ற காரியங்களில் ஈடுபடாதவண்ணம் கெடுக்கும் ஆனதனாலே, விஷத்தைக் காட்டிலும் விஷயம் கொடியது!

ஸ்வாமி தேசிகன், காஞ்சிபுரத்திலே எட்டு புஜங்களோடு எம்பெருமான் காட்சியளிப்பதைச் சொல்கிறார். அந்தக் காட்சி ரொம்ப அழகு. கஜேந்திரனை ரக்ஷிப்பதற்காக அதிவேகமாக ஓடி வந்தான் எம்பெருமான்.

பிராணனே போய்விடும் என்கிற நிலையில் முதலையின் வாயில் அகப்பட்ட கஜேந்திரன், 'ஹே பத்ராத்மகா! என்னை ரக்ஷி!' என்று அழைக்கிறான்.

அப்போது பரமாத்மா, மஹாலக்ஷ்மியுடன் விளையாடிக் கொண்டிருந்தவன் அவசரமாக அதிவேகமாக வந்தான். விளையாட்டில் தோற்றுப் போனவர்கள் எழுந்து ஓடிவிடக் கூடாது என்று அங்கவஸ்திரத்தையும் முந்தானையையும் முடிச்சுப் போட்டு வைத்து உட்கார்ந்திருக்கிறார்கள் இருவரும். அந்தச் சமயத்தில் யானை கத்தியது! பகவான் திடீரென்று ஓடினான். மஹாலக்ஷ்மி முடிச்சையே அவிழ்த்துக் கொள்ளவில்லை. அவன் பின்னாலேயே அவள் இழுத்து வரப்பட்டாள்!

அத்தனை வேகமாய், அழைத்த குரலுக்கு வருகிறான் பகவான். எல்லா ஆயுதங்களும் அவன் கையிலே தானே வந்து ஒட்டிக் கொள்கின்றன.


'சென்று நின்று ஆழிதொட்டானை திருவல்லிக்கேணி கண்டேனே!' என்கிறார் ஆழ்வார். சுதர்சன சக்கரத்தை அவன் வெறுமே தொட்டானாம். தொட்டதுமே முதலை மீது அது பிரயோகமாகி அழிந்ததாம்!

பராசர பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவம் என்கிற ஸ்தோத்திரத்திலே "பகவானே! ரங்கநாதா! நீ அந்த யானையை ரக்ஷித்ததற்காக உனக்கு அஞ்சலி பண்ணவில்லை. நீ ஓடி வந்தாயே, அந்த வேகத்துக்கு அஞ்சலி!" என்கிறார்!

பக்தர்களை ரக்ஷிக்க வேண்டுமானால் அவ்வளவு வேகமாக ஓடி வருகிறான் பகவான்.

அந்த பகவானைப் பார்த்து நாம் கேட்க வேண்டும் : "அப்படி

[redacted]



ஓடி வந்து அந்த யானையை ரக்ஷித்தாயே? உனக்கு ஏதாவது விரதமா?'' என்று கேட்க வேண்டும்.

"எனக்கா? என்ன விரதம்?" என்பான் அவன்.

''ஒரு மடுவிலே, ஒரு யானையை, ஒரு முதலை பிடித்துக் கொண்டால்தான் வந்து காப்பாற்றுவாயா?'' என்று நாம் கேட்க வேண்டும்.

ஏன் அப்படிக் கேட்க வேண்டும்...?

''அந்த யானையாவது ஒரு சின்ன குளத்திலே விழுந்தது. இந்த யானை – நான் – இருக்கிறேனே, ஒரு பெரிய சமுத்திரத்திலே விழுந்திருக்கிறேன். அந்த யானைக்காவது அகங்கார மமகாரம் ஆயிரம் வருஷம் கழிந்து போயிற்று. இந்த யானையான எனக்கு அகங்கார – மமகாரம் போகவே போகாது! மத்த கஜம் இது! கலபத்தில் அகங்காரம் போகாது.

அந்த யானையை ஒரு முதலைதான் பிடித்துக் கொண்டிருந்தது. இந்த யானையைப் பல முதலைகள் பிடித்துக் கொண்டிருக்கின்றன – விஷயங்கள் என்கிற முதலைகள்! ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையிலே பிடித்து இழுக்கின்றன.

ஜலத்திலேயிருந்தால் முதலைக்கு பலம் அதிகம். சம்ஸார ஜலதியிலே இருக்கிற விஷயமாகிற முதலைகள் நம்மைப் பிடித்துப் பிடித்து இழுக்கின்றன!

இந்த விஷயங்களை

விட்டுவிட வேண்டும் என்று ஒவ்வொருத்தருக்கும் ஆசைதான். ஆனால் முடியவில்லையே! அவை நம்மைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. பிரயத்தனம் என்னவோ பலமாக இருக்கிறது –

வாசலில் மழை பெய்து, ஒரு பத்து கஜ தூரத்துக்குச் சேறும் சகதியுமாக இருக்கிறது. அந்தத் தெருவிலே ஒருத்தர் வருகிறார். நல்ல பட்டு உடுத்தியிருக்கிறார். கல்யாணத்துக்குப் போவதற்காக. வந்தவர் நிதானமாகக் காலை வைத்துப் போகலாமில்லையோ...? அப்படிச் செய்யாமல் சேற்று ஜலத்தை ஒரு பார்வை பார்த்தார். பார்த்ததும் வாயு புத்ர ஆஞ்சனேயரின் ஞாபகம் அவருக்கு வந்து விட்டது. அவனை நினைத்து தியானம் பண்ணிக் கொண்டார். பெரிய நூறு யோஜனை விஸ்தீரணமுள்ள சமுத்திரத்தை ஒரு பசுவின் குளம்பிலே உள்ள ஜலத்தைத் தாண்டுகிற மாதிரி சுலபமாகத் தாண்டியவனில்லையா? அந்த மாதிரி தானும் பத்து கஜ அகல சேற்றுக் குட்டையைத் தாண்டி விடலாம் என்று எண்ணினார்.

விசேஷமாக, ஏற்பாடெல்லாம் பலமாக இருக்கிறது! துணியை இழுத்துக் கட்டிக் கொண்டார். தலைப்பாகை வேறு கட்டிக் கொண்டார். மேல் துணி சேற்றில் விழுந்து விடப் போகிறதே என்று அதை அவிழ்த்து முண்டாசாகக் கட்டிக் கொண்டார். கிடுகிடுவென்று ஓடி வந்து ஒரு எகிறு எகிறினார். சேற்றிலே பொத்தென்று விழுந்தார்!

நாம் பண்ணுகிற காரியம் மொத்தம் அதுதான்! ஏக முன்னேற்பாடு! 'இதைச் செய்யக் கூடாது, அதைச் செய்யக் கூடாது' என்று உள்ளே நினைத்துக் கொள்கிறோம். கடைசியில் அதிலேயே போய் விழுகிறோம்! எண்ணுகிற எண்ணமும் அமர்க்களம்தான். பிரயத்தனமும் விடாது பண்ணுகிறோம். ஆனால் – சம்ஸார ஜலதியிலுள்ள விஷயமாகிற முதலைகள் பிடித்துப் பிடித்து இழுக்கின்றன!

'யவனிகா மாயா ஜகன்மோகினி' என்கிறார் ஆளவந்தார். இந்தப் பிரபஞ்சம் நம்மை அப்படி ஒரு மோஹினியாக இழுக்கிறது! இதிலிருந்து நாம் விடுபட வேண்டுமானால் அவன் திருவடியை நாம் ஆச்ரயிக்க வேண்டும்.

சம்ஸாரார்ணவத்திலிருந்தும் விஷயங்களிலிருந்தும் விடுபட விஷ்ணுவின் சரணாரவிந்தத்தைத் தவிர நமக்கு வேறு கத்யந்தம் இருக்கிறதா? சம்ஸார ஜலதியைத் தாண்டவேண்டுமானால் விஷ்ணு என்கிற உயர்ந்த ஓடத்திலே ஏறி நாம் அமர வேண்டும். அக்கரை என்னும் ஆனந்தக் கடலுக்கு நாம் போக வேண்டுமானால் அவன் திருவடிதான் நமக்கு ஓடம். அந்தக் கரையிலே பகவான் காத்திருக்கிறான். நம்மைச் சேர்த்து அணைத்துக் கொள்வான்.

விஷ்ணுவினுடைய பெருமையை

அருள்வாக்கு

பயம் என்றால் என்ன? 'நமக்கு என்ன ஆயிடுமோ? ஏதாயிடுமோ?' என்று நிம்மதியில்லாமல் தவிப்பதுதான் பயம். 'நம்மை எதுவும் என்னவும் பண்ண முடியாது; அசைக்க முடியாது', என்று ஸ்திரமாக ஒரு ஸ்தானத்தில் நம்மை அமர்த்திக் கொள்கிறவரையில் பயம் இருந்து கொண்டே இருக்கும். அப்படி ஜீவனை ஆட்டமில்லாத நிம்மதியான ஒரு ஸ்தானத்தில் சாச்வதமாக இருக்கச் செய்வதுதான் மோக்ஷநிலை என்பது. நமக்கு அந்நியமாக எதுவோ ஒன்று இருக்கிறவரைக்கும், 'அது நம்மை என்ன பண்ணிவிடுமோ? நாம் நிம்மதியின் சௌக்கியத்திலேயே ஸ்திரமாக இருக்க முடியாதபடி அதனிடமிருந்து என்ன

"யோவ் த்ரீநாட்செவன், ஏன்ய்யா அந்த ஆளை இன்னும் சந்தேக கேஸ்ல உள்ளே தள்ளாமல் இருக்கீங்க?"

"கிட்டே போனால் 'தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்'ன்னு குறள் சொல்லி பயங்காட்டறானே சார்!"

– கே.ஜி.எஸ். கோவிந்தன்



கெடுதல் வருமோ?' என்ற எண்ணம், அதாவது பயம், இருந்து கொண்டேதான் இருக்கும்.

'நாம் ஒன்று; நமக்கு இரண்டாவதாக இன்னொரு அந்நிய வஸ்து, அநேக அந்நிய வஸ்துக்கள், உள்ளன' என்ற வேறுபாட்டுக்குத்தான் ''த்வைதம்'' என்று பெயர்.



த்வைதமிருந்தால் அப்போது ஒன்றுக்குத் தன்னைவிட வேறாக உள்ள இன்னொன்றால் பயம் ஏற்பட இடமுண்டு. எப்போது த்வைதம் போய், தனக்கு வேறாக எதுவுமே இல்லை என்று தெரிந்து கொள்கிறோமோ, வேறில்லாத தானாகிய ஆத்மாவில் ஆணி அடித்தாற்போல் நம்மை ஸ்திரமாக அமர்த்திக் கொள்கிறோமோ, அப்போதுதான் பயம் போகும். இப்படி த்வைதமில்லாமல் ஆவதுதான் அத்வைதம்.

வேதம் சொல்கிற மோக்ஷம் அந்த அத்வைத அனுபவந்தான் என்று நம்முடைய ஆசார்யாள் ப்ரஹ்ம ஸூத்ரம், உபநிஷத்துக்கள், கீதை ஆகியவற்றுக்குப் பாஷ்யம் செய்து நிலைநாட்டியிருக்கிறார். அத்வைதம்தான் மோக்ஷம். அது பயமில்லாத அபயநிலை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஈச்வரன் சொல்கிறபோது, விஷ்ணு தத்வத்தை உயர்ந்த தீபம் என்கிறான்.

ஆண்டாள் குத்துவிளக்கைக் கொண்டாடுகிறாள். தீப ஸ்வரூபமாக பகவான் இருக்கிறான். தீபமாகவே இருக்கிறான் என்கிறார் ஈச்வரன்.

விஷ்ணு தத்வம் பெரிய தீபம். பிரதான தீபம். அதிலிருந்த தோன்றிய தீபங்கள் நரசிம்ஹ, ராம கிருஷ்ணாதி அவதாரங்கள். எல்லாவற்றுக்கும் மூலம் அந்த விஷ்ணு தான். அவனை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இப்படிப் பல்வேறு அவதாரங்கள் எடுக்கிறான். ஆசையினாலே உயர்ந்ததான, மூலமாகிற அந்த தீபத்தைப் பிரார்த்தனை பண்ணுங்கள்.

தீபாலய்யா என்றே அவனுக்கு ஒரு பெயர் உண்டு. ஆந்திர தேசத்திலே வாடபல்லி என்றொரு க்ஷேத்திரம். அதற்கு தீபாலயம் என்றே பெயர். அங்கே நரசிம்ஹன் விசேஷமாக அகஸ்திய முனிவரால் ஆராதிக்கப்பட்டான். கிருஷ்ணா – மூஸி நதிகளின் சங்கம க்ஷேத்திரம் அது. இரண்டும் சேருகிற இடம்.

அங்கே கங்கைப் பிரவாகம் – தீர்த்தம் சுரந்து கொண்டேயிருக்கிறது. அந்த கர்ப்பகிருஹத்திலே கொஞ்சம் கூட காற்று இடையாது. ரொம்ப வியர்க்கும், உள்ளே போனால்.

ஆனால் அங்கே நரசிம்ஹர் நாசிகை – மூக்குக்கு – நேரே ஒரு தீப ஜ்வாலை சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அது மட்டும் ஆடிக்கொண்டே இருக்கும். திருவடிக்கு நேரே ஒரு தீப ஜ்வாலை. அது ஆடாமல் அசையாமல் இருக்கும்.

நாசிகைக்கு நேரே இருக்கும் ஜ்வாலை மட்டும் ஏன் ஆடுகிறது? பகவானின் மூச்சுக் காற்றுப் பட்டு அது ஆடுகிறது! அத்தனை ஜீவ களையோடு அங்கே எழுந்தருளியிருக்கிறான் எம்பெருமான்.

மேலே ஆடுகிற தீபத்தைப் போல நாம் சஞ்சலமுடன் அவனைப் பார்க்கப் போகிறோம். அவனை சேவித்த பிறகு கீழே உள்ள தீபம் எப்படியிருக்கிறதோ, அந்த மாதிரி ஆடாமல், அசையாமல் சஞ்சலம் தீர்ந்து ஒருவித கிலேசமும் இல்லாமல் திரும்பி வருகிறோம்.

'அதனால்தான் எல்லாவற்றுக்கும் மூலமான அந்த தீபத்தைப் பிரார்த்தனை பண்ணுங்கள்' என்கிறான் ஈச்வரன். பரிபூரணன் அவன். எத்தனையோ குணங்கள் படைத்தவன். அவற்றிலே முக்கியமானவை – ரொம்ப முக்கியமானவை ஆறு குணங்கள். இந்த ஆறு குணங்களுக்கும் சேர்ந்து ஒரு பெயர் உண்டு – பகம். பகத்தை உடையவன் பகவான். குணத்தை உடையவன் குணவான் என்பது போல் பகத்தை உடையவன் பகவான். அந்த ஆறு குணங்கள்: ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ். அவற்றை விவரமாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

(தொடரும்)



• 'லதா செண்ட்'டுடன் லதா!

வாசனை புதுசு!

இந்திய செண்ட் மார்க்கெட்டில் அண்மையில் அறிமுகமாகியுள்ள புதிய செண்ட்டின் பெயர் லதா!

இதற்குப் பெயர் சூட்டிய கதை சுவாரசியமானது.

"லதாமங்கேஷ்கர் ஒரு செண்ட் பிரியை. அவரிடம் உலகின் டாப் செண்ட் ரகங்கள் அத்தனையும் உண்டு. எனவே, இந்திய மார்க்கெட்டுக்கு என்று சந்தன வாசனையை ஆதாரமாகக் கொண்டு ஒரு புதிய நறுமணம் கொண்ட செண்ட்டை உருவாக்கி அதற்கு லதாமங்கேஷ்கரை கௌரவிக்கும்படியாக லதா என்றே பெயரிட முடிவு செய்தோம். அவரிடம் விஷயத்தைச் சொன்னபோது, மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தார்.

"இருபத்து மூன்று விதமான செண்ட்களைத் தயாரித்து, அவருக்கு சாம்பிள் அனுப்பினோம். அவற்றை இரண்டு மாத காலம் பயன்படுத்திப் பார்த்துவிட்டு, மூன்றை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொடுத்தார். அதன்பின், அவரது ஆலோசனையின் பேரில் இன்னும் சில மாற்றங்களைச் செய்து, அவரிடம் கொடுத்தபோது இறுதியாக அவர் தேர்ந்தெடுத்த நறுமணம்தான் 'லதா' செண்ட்டின் நறுமணம்!

"பாரீஸின் புகழ் பெற்ற கண்ணாடிப் புட்டிகள் தயாரிக்கும் நிறுவனத்தின் மூலமாக ஒரு கலசத்தின் மேல் தேங்காயைக் கவிழ்த்து வைத்தாற்போல ஒரு டிசைனை உருவாக்கி, அதில் செண்ட்டை நிரப்பி, முதல் பாட்டிலை லதாஜியிடம் கொடுத்து விட்டு, அவரது ரியாக்ஷனுக்காக சஸ்பென்ஸுடன் காத்திருந்தோம்.

"சில விநாடிகள் ஆழமாய் 'லதா' செண்ட்டின் நறுமணத்தை முகர்ந்துவிட்டு, கண்களை மூடி ரசித்துவிட்டு, 'அற்புதமாக இருக்கிறது. என் பெயருக்குப் பெருமை சேர்த்து விட்டீர்கள்' என்றார்! வானில் பறப்பதுபோல உணர்ந்தோம்" என்கிறார் சமீபத்தில் சென்னை வந்திருந்த 'லதா' செண்ட்டைத் தயாரிக்கும் "கந்த் சுகந்த்" நிறுவன மார்க்கெட்டிங் டைரக்டர் தீபக்.

செண்ட்டை நுகர்ந்தால் வருமோ, இல்லையோ விலையைக் கேட்டால் மயக்கம் வரும்!

அறுபது மி.லி. அளவு கொண்ட 'லதா' செண்ட் பாட்டிலின் விலை என்ன தெரியுமா? ஆயிரத்து எழுநூறு ரூபாய்!

— பாரதி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



ஜீவன்


ஸ்ரீ

சிறப்பான

நபர்களுக்கான

தனிப்பட்ட

பாலிசி



நீங்கள் பாரதத்தின் கிராமவாசியாகவோ அல்லது நகரவாசியாகவோ - திறமைவாய்ந்த வியாபாரி அல்லது தொழில் வல்லுனர் அல்லது வளமைமிக்க விவசாயியாகவோ உங்கள் துறையில் சிறந்து விளங்கி நிலைபெற்றிருக்கும் நிலையில் உங்களுடைய ஆயுள் இன்ஷுரன்ஸ் தொகை தேவையான அளவிற்கு இருக்கிறதா? உங்கள் தொழில்துறையின் ஆதாயத்திற்கு காரணமான முக்கிய நபர்களின் சேவையை காப்பீடு செய்ய வேண்டாமா?

ஜீவன் ஸ்ரீ உங்கள் தேவைகள், நிலைகளுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டது.

சிறப்பம்சங்கள்:

- குறைந்தபட்ச உத்தரவாதத் தொகை ரூ. 5 லட்சங்கள்
- ரூ. 75/- வீதம் ஒவ்வொரு ஆண்டும் காப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு ஆயிரத்திற்கும் கூடுதல் தொகை உறுதியளிக்கப்படுகிறது
- பாலிஸி முதிர்வுத் தொகையினை தவணை முறையில் பெற்றிட வாய்ப்பு உண்டு.
- விசுவாசத் தொகை எனப்படும் கூடுதல் தொகையும் பெற வாய்ப்புண்டு.

ஜீவன் ஸ்ரீ நிறைவான காப்பீடு செய்ய தகுதிபடைத்தவரே நீங்கள்

இது விபரங்களுக்கு உங்கள் முகவரையோ அல்லது அருகிலுள்ள கிளை அலுவலகத்தையோ தயவு செய்து தொடர்பு கொள்க

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா

மக்களின் மகத்தான சேவையில்

Please visit us at www.licindia.com

Model Mudra/LIC/129/Tam

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 200
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

